Vol. LV Issue No. 18


# துக்ளக்

நிறுவிய ஆசிரியர்: சோ

THUGLAK Tamil Weekly

15-5-2024

₹ 20




## தடுப்பூசி பற்றிய பீதி

7 – ஆம் பக்கம்

# SASTRA

ENGINEERING · MANAGEMENT · LAW · SCIENCES · HUMANITIES · EDUCATION

DEEMED TO BE UNIVERSITY

(U/S 3 of the UGC Act,1956)

THANJAVUR - KUMBAKONAM - CHENNAI

E-mail: sastracc@sastra.ac.in | www.sastra.edu | Phone : 044-23650027

## CHASE YOUR DREAMS AT SASTRA CHENNAI CAMPUS



## ADMISSIONS 2024-25

**SASTRA CHENNAI CAMPUS**

AVM Road, Vadapalani

(Behind AVM Theatre / Next to AVM Studio), Chennai

Scan QR for Application

Scan QR for Route

| Degree Programmes | Duration | Admission Basis |
|---|---|---|
| • B.Com. (with minor specialisation)<br>• B.A. (Economics & Public Policy)<br>• B.Sc.-Visual Communication (Minor Specialisation in Journalism / Electronic Media) | 4-Years Honours (with exit option) | A pass in +2 examinations from a recognized board |
| • M.Sc., Data Science | 2 - Years | B.Sc., Mathematics / B.Sc., Computer Science/ BCA /Valid UG Degree in relevant field from a recognized university |
| • M.B.A. | 2 - Years | Admissions shall be based on qualifying degree scores, entrance exam and interview. Students with good scores in CAT/XAT/AIMAT, etc., will be given preference. |

Last Date for Application Submission - Rolling Admissions UPTO JUNE 15, 2024

**Apply Online @ www.sastra.edu**

THINK MERIT | THINK TRANSPARENCY | THINK SASTRA

துக்ளக்
ஆசிரியர்: எஸ்.குருமூர்த்தி
Website : www.thuglak.com
Email : thuglak45@gmail.com
Vol. LV No.18 15.5.2024
தபால் பெட்டி எண் : 2173
காரியாலயம் : 166, (பழைய எண் 46),
கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600028.
Advt. Phone : 044-2493 6914

## எச்சரிக்கை-1

பொறி பறக்கும் தேர்தல் விவாதம் பற்றிய நமது விமர்சனம் அடுத்த வாரம் வரும்.

## எச்சரிக்கை-2

## மோடிக்கு எதிரான அபாண்டம் - அம்பலமாக 7 ஆண்டுகள்

ஏழு ஆண்டுகளுக்கு முன் ரோஹித் வெமுலா என்ற ஹைதராபாத் மத்திய பல்கலைக் கழக மாணவர், காரணம் கூறாமல் தற்கொலை செய்துகொண்டார். ''அவர் தலித் மாணவர். அவர் தற்கொலைக்கு மோடி, ஆர்.எஸ்.எஸ்.ஸின் மாணவர் இயக்கமான ஏ.பி.வி.பி.தான் காரணம்'' என்று இடதுசாரிகளான அவரது குடும்பத்தினர் குற்றம் சாட்டினர். ''ஐயோ தலித் படுகொலை தலித் படுகொலை'' என்று மோடி எதிர்ப்பு அரசியல் கட்சிகள் போராட்டம் தொடங்கின. ஊடகங்கள் அதைப் பிரபலப்படுத்த, அது நாடு தழுவிய, மோடிக்கு எதிரான பிரச்னையாக்கப்பட்டது. ராஹுல் தெலுங்கானா சென்று மோடியின் தலித் கொடுமையை எதிர்த்து ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். அவர் தலித் என்பது பொய், அவரது தற்கொலைக்கு யாரும் காரணமல்ல என்று வெளிவந்த உண்மைச் செய்திகளை யாரும் லட்சியமே செய்யவில்லை. அபாண்டமான அந்த வழக்கில், அப்பாவிகள் கைதாகி, துன்புறுத்தப் பட்டார்கள். சென்ற வாரம், இன்று காங்கிரஸ் ஆட்சி செய்யும் தெலுங்கானா போலீஸ் ''ரோஹித் வெமுலா தலித் என்று கூறும் சான்றிதழ் ஃபோர்ஜரி செய்யப்பட்டது. அவர் தற்கொலைக்கு யாருமே காரணமல்ல'' என்று ஒரே வரியில் கூறி வழக்கை முடித்திருக்கிறது. அந்த ஒரு வரி உண்மை மோடிக்கும், நாட்டுக்குக்கும், ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கும் எதிராக 7 ஆண்டுகளாக உலகெங்கும் பரப்பப்பட்ட விஷத்தை எப்படி முறிக்கும்?

# ராஹுல் மீது திணிக்கப்பட்ட ரேபரேலி

தற்போதைய தேர்தலில் உத்திரப் பிரதேசத்தில், சோனியா குடும்பத்தின் அரசியல் ஆதிக்க அடையாளத்தில் ஒன்றான அமேதியில் போட்டியிட அஞ்சி மறுத்தார் ராஹுல். குடும்பத்தின் அடுத்த அடையாளமான ரேபரேலி அவர் மீது கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. அரைகுறை மனதுடன் அங்கு போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருக்கிறார் ராஹுல். அமேதி என் தாய்வீடு என்று 2019 வரை கூறிவந்த ராஹுல், அங்கு போட்டியிட ஏன் அஞ்சினார், மறுத்தார், இறுதியில் அவர் ரேபரேலியில் போட்டியிட வேண்டிய கட்டாயம் என்ன - என்ற கேள்விகள் கேட்கப்பட்டு, ஊடகங்களில் விவாதிக்கப்பட்டு வருகிறது. அந்தக் கேள்விகளுக்கு பதில் கிடைத்தால், ஏன் நாட்டின் தலையாய கட்சியாக இருந்த காங்கிரஸ், குடும்ப ஆதிக்கத்தில் நலிந்தது; இன்று ஸ்டாலின், மமதா, லாலு, அகிலேஷ், உத்தவ் தாக்கரே போன்ற மாநிலத் தலைவர்களின் கால்களில் விழுந்து, அவர்கள் தானமாகக் கொடுத்த இடங்களைப் பெற்றுப் பிழைக்கும் நிலைக்கு தாழ்ந்துவிட்டது என்பதற்கு விடை கிடைக்கும்.

## குடும்ப ஆதிக்க அடையாளம்

உ.பி.யில் காங்கிரஸ் கொடிகட்டிப் பறந்த நேரு, இந்திரா காலம் முதலே ரேபரேலி, அமேதி ஆகிய இரண்டு தொகுதிகளும் வடஇந்தியாவில், குறிப்பாக உ.பி.யில், சோனியா குடும்ப ஆதிக்கத்தின் அடையாளங்களாக இருந்தன. 1977 ஜனதா அலையில் இந்திரா, சஞ்சய் இருவரும் தோல்வியுற்றது நீங்கலாக, மேலும் 1996, 1998 ஆண்டுகள் தவிர, அந்தத் தொகுதிகளில் 1952 முதல் நேரு குடும்பத்தினரோ, அவர்களுக்கு நெருக்கமானவர்களோதான் வெற்றி பெற்று வருகிறார்கள். 1967-ல் உருவாக்கப்பட்ட அமேதி தொகுதியில் 1980-ல் ராஹுலின் சித்தப்பாவான சஞ்சய் வென்றார். அவருக்குப் பிறகு ஒருமுறை சோனியாவும், 2004 முதல் 2019-ல், தான் தோல்வியுறும் வரை ராஹுலும் வென்று வந்தார். சென்றமுறை உ.பி.யில் காங்கிரஸ் வெற்றி பெற்ற ஒரே தொகுதி ரேபரேலி. சோனியா வெற்றி பெற்ற அந்தத் தொகுதி ராஹுலின் பாட்டனாரும், சோனியாவின் மாமனாருமான ஃபெரோஸ் காந்தி காலத்திலிருந்தே குடும்பத்தின் பிடியில் இருந்து வருகிறது. இந்திரா, அவரது குடும்ப உறுப்பினர்கள், பிறகு 2004 தேர்தலிலிருந்து சோனியா - என்று 60 ஆண்டுகளாக குடும்பத்தின் பிடிக்குள் இருந்து வருகிறது.

2019 தேர்தலில் ராஹுல் அமேதியில் தோல்வி அடைந்தாலும், ரேபரேலியில் வெற்றி பெற்று, குடும்ப ஆதிக்க அடையாளத்துக்கு உயிர் கொடுத்தார் சோனியா. ராஹுல் தோல்வியுற்றாலும் அமேதியும், ரேபரேலியும் காங்கிரஸுக்கு உள்ளேயும் வெளியேயும், அதன் மைய குடும்பத்தின் ஆதிக்கத்தின் பிம்பமாக தொடர்ந்து இருந்தது. அந்த இரண்டு தொகுதிகளும்தான் சோனியா குடும்பத்தின் நிகழ்கால, எதிர்கால உயிர் நாடி என்பது காங்கிரஸின் அரசியல் யதார்த்தம். குடும்பம் வீழ்ந்தால், கட்சியில் குடும்ப ஆதிக்கம் நிலைக்குமா என்பது கேள்வி.

## நிர்பந்தத்தில் காங்கிரஸ், கட்டாயத்தில் குடும்பம்

கடந்த 10 ஆண்டுகளாக மோடி எழுச்சியால் உ.பி.யில் காங்கிரஸ் கிடுகிடுவென்று சரிந்தது. 2019 தேர்தலில், தோல்வி பயத்தால் ராஹுல் அமேதி தவிர

இரண்டாம் தொகுதியாக 60% முஸ்லிம் - கிறிஸ்தவ வாக்காளர்கள் நிறைந்த கேரளாவின் வயநாடு தொகுதியில் போட்டியிட்டு சுலபமாக வெற்றி பெற்றார். எதிர்பார்த்தபடியே அவர் அமேதியில் தோல்வியுற்றார். இந்த முறையும், பாதுகாப்பான வயநாடு தொகுதியில் போட்டியிட்ட ராஹுல், மீண்டும் அமேதியில் தோல்வி அடைந்தால் தனக்குப் பெரிய இழுக்கு ஏற்படும் என்பதால், அங்கு போட்டியிட விரும்பவில்லை என்பது ஊரறிந்த விஷயம் - குறிப்பாக பா.ஜ.க. அனைத்து உ.பி. தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்று கணிப்புகள் கூறும் நிலையில் தனக்கு தோல்வி நிச்சயம் என்பதால் அமேதியில் அவர் நிற்கவில்லை. ஆனால் பல வகையான கிரிமினல் வழக்குகள் ஒரு பக்கம், மறுபக்கம் 75 ஆண்டு கால குடும்ப ஆதிக்கம் ஒட்டு மொத்தமாக வீழ்ச்சி அடையும் ஆபத்து என்ற நிலையில் இருக்கும் நேரு குடும்பத்துக்கு, 2024 தேர்தல் வாழ்வா - சாவா பிரச்னை.

அதனால்தான் மமதா, கெஜ்ரிவால், இடதுசாரிகள், அகிலேஷ் முதலான யார் தங்களை எவ்வளவு அவமானப்படுத்தினாலும், அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு, மோடியை வீழ்த்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இருக்கின்றனர். அதற்கு இந்தி கூட்டணியில் மைய ஸ்தானம் இல்லை என்ற நிலையிலும், அதில் காங்கிரஸைச் சேர்த்தது சோனியா குடும்பம். 2023 முடிவில் மூன்று வடமாநில சட்டசபைத் தேர்தல்களில் ஏற்பட்ட சரிவால், காங்கிரஸ் மீது இந்தி கூட்டணி கட்சிகளுக்கு நம்பிக்கை குறைந்து விட்டது. அவர்கள் ராஹுலை தனிப்பட்ட முறையில் அவமானப்படுத்தக்கூட தொடங்கினார்கள். ராஹுலின் இரண்டாம் யாத்திரையை எதிர்த்து மமதா கொடி பிடிக்கவும் செய்தார். மோடி எதிர்ப்பே முழுமூச்சு என்று ராஹுல் ஒரு பக்கம் மோடி துவேஷத்தைக் கக்கினார். மறுபக்கம், வடமாநிலங்களில் மோடியை எதிர்க்க காங்கிரஸுக்குத் திராணி இல்லை என்ற நிலை உருவாவதால் காங்கிரஸுக்கு மேலும் பிரச்னை.

இந்தப் பின்னணியில் அமேதியைக் கைகழுவி விட்டு வயநாட்டில் மீண்டும் தஞ்சம் புகுந்த ராஹுலைப் பார்த்து, ''பா.ஜ.க.வை எதிர்த்து உ.பி.யிலோ, மற்ற வடமாநிலங்களிலோ போட்டியிட வேண்டிய நீங்கள், கேரளாவில் மோடிக்கு எதிராக வலுவாகப் போட்டியிடும் எங்களை எதிர்த்து, வயநாட்டில் ஏன் போட்டியிடுகிறீர்கள்'' என்று இடதுசாரிகள் கிண்டலாக எழுப்பிய கேள்விக்கு, காங்கிரஸால் பதிலளிக்க முடியவில்லை. இந்த நிலையில்தான் சோனியா குடும்பத்தின் பாரம்பரிய ரேபரேலி, அமேதி தொகுதிகளிலாவது குடும்பத்தினர்கள் போட்டியிட்டே ஆக வேண்டும் என்ற நிர்பந்தம் காங்கிரஸுக்கு ஏற்பட்டது. தேனில் விழுந்த ஈ போல், வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் சோனியா குடும்பத்துடன் என்ற நிலைக்கு வந்துவிட்ட காங்கிரஸ், அந்தத் தொகுதிகள் உள்ள உ.பி.யில் மட்டுமல்ல, வடஇந்தியாவிலேயே கூட தலை நிமிர முடியாது என்ற ஆபத்தும் உருவாகியது.

## அஞ்சிய ராஹுல், விரும்பாத ப்ரியங்கா

2024 தேர்தல் பற்றிய விவாதங்களில் ராஹுலைப் பற்றி காங்கிரஸுக்குள்ளும், அரசியல் அரங்கத்திலும், ஊடகங்களிலும் எழுந்த முக்கியமான கேள்வி, ''ராஹுல் அமேதியில் நிற்பாரா'' என்பதே. சென்ற முறை ரேபரேலி தொகுதியில் வெற்றி பெற்று தனது குடும்ப அடையாளத்தைக் காப்பாற்றிய சோனியா, தேர்தலுக்குச் சற்று முன்பு ராஜ்யசபை உறுப்பினராகி களத்திலிருந்து விலகி விட்டதால், அவர் ரேபரேலியில் போட்டியிடப் போவதில்லை என்பது உறுதியானது. அமேதியில் யார் என்ற கேள்வியுடன், ரேபரேலியில் யார் என்ற கேள்வியும் சேர்ந்தது. இரண்டில் ஒன்றில் கூட குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் நிற்கவில்லை என்றால், காங்கிரஸின் மையமான குடும்ப அரசியல் விலாசம் அழிந்துவிடும். இந்த நிலையில் அமேதியில் ராஹுல், ரேபரேலியில் ப்ரியங்கா என்று உரக்கக் கோரி வந்தது உ.பி. காங்கிரஸ்.

வயநாட்டில் வேட்புமனு தாக்கல் செய்த ராஹுல், 'அமேதி பற்றி காங்கிரஸ் காரியக் கமிட்டி முடிவு செய்யும்' என்று சாக்கு கூறிவந்தார். வயநாடு தேர்தல் முடிந்த பிறகு ராஹுல் அமேதியில் போட்டியிடுவது பற்றித் தெரியும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறிவந்தனர். ராஹுல் அமேதியில் என்றால், ரேபரேலியில் யார் - ப்ரியங்காவா? என்ற விவாதம் தொடங்கியது. இதற்கு நடுவில் ப்ரியங்காவின் கணவர் ராபர்ட் வட்ரா, ''நான் நிற்கவேண்டும் என்று காங்கிரஸ் தொண்டர்கள் விரும்புகிறார்கள்'' என்று தினமும் பேட்டி கொடுத்து வந்தது வேறு, குழப்பத்தை அதிகமாக்கியது. ஏப்ரல் 26-ல் வயநாட்டுத் தொகுதியில் வாக்குப்பதிவு முடிந்தவுடன், அமேதி - ரேபரேலி பற்றி முடிவு செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி, 'காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேயும் ராஹுலும் அமேதி, ரேபரேலி பற்றி முடிவெடுப்பர்' என்று கூறிச் சமாளித்தது. இவ்வளவு தயக்கம், தடுமாற்றம், குழப்பத்துக்கு ஒரே காரணம் ராஹுல் அமேதியில் நிற்க அஞ்சியதுதான்.

அமேதியில் போட்டியிட ராஹுல் அஞ்ச, ரேபரேலியில் போட்டியிட ப்ரியங்கா விரும்பாததால், காங்கிரஸுக்குப் பெரிய பிரச்னை. அமேதி, ரேபரேலி விஷயத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கார்கே தலையில் அட்சதை போட, அவர் சோனியா காலில் விழுந்தார். அந்தத் தொகுதி ஒன்றிலாவது ராஹுல் நிற்கவில்லை என்றால் கட்சிக்குப் பெரும் பின்னடைவு ஏற்படும் என்று கெஞ்சினார். ராஹுல் பற்றி ஏப்ரல் 27-ல் முடிவு தெரியும், என்ற நிலையில் என்று ஏப்ரல் முடிந்து மே-யும் வந்துவிட்டது. நாளை, நாளை என்று மே-2-ஆம் தேதி மாலைவரை அமேதி, ரேபரேலி பற்றிய சஸ்பென்ஸ் தொடர்ந்தது. அமேதி, ரேபரேலியில் வேட்புமனு தாக்கல் செய்ய 18 மணி நேரம் கூட இல்லை என்ற நிலை. ராஹுலுக்கு சோனியா நெருக்கடி தந்தார். அவர், அமேதி வேண்டாம், வேண்டுமானால் (வேண்டாவெறுப்பாக) ரேபரேலியில் நிற்கிறேன் என்று கூறினார். மே-2 இரவு 8 மணிக்கு காங்கிரஸ் காரியக் கமிட்டி, ராஹுல் ரேபரேலியில் நிற்பார் என்று X-ல் பதிவு கூறியதால், சஸ்பென்ஸ் முடிந்தது

## அமேதி இல்லை, ரேபரேலி. ஏன்?

சென்றமுறை அமேதியில் தோல்வியடைந்த ராஹுல், அங்கு போட்டியிட விரும்பவில்லை என்பது ஒரு காரணம். அடுத்த காரணம், அங்கு சென்றமுறை

அவரைத் தோற்கடித்த ஸ்ம்ரிதி இரானி, மீண்டும் பா.ஜ.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டது. ''வாருங்கள் ராஹுல்! துணிவிருந்தால் என்னை எதிர்த்து நில்லுங்கள்'' என்று தினசரி அவர் கொக்கரித்து வந்தார். அதற்கு ராஹுல் பதில் கொடுக்காததால், ஸ்ம்ரிதியை எதிர்க்க அவர் அஞ்சுகிறார் என்ற பேச்சு அமேதியில் பரவியிருந்தது. சாணக்கியர் என்று காங்கிரஸ் நடுங்கும் அமித்ஷாவும் ''நின்று பாருங்கள்'' என்று ராஹுலுக்குச் சவால் விட்டிருந்தார். இதை எல்லாம் பார்த்த ராஹுல், அமேதி வேலைக்காகாது என்று முடிவு செய்து, சென்ற தேர்தலில் சோனியா வெற்றி பெற்ற ரேபரேலியில் போட்டியிட ஒப்புக் கொண்டார். சென்ற முறை அமேதியில், ராஹுல் 55,000 வாக்கு வித்தியாசத்தில் ஸ்ம்ரிதி இரானியிடம் தோல்வி அடைந்தபோது, ரேபரேலியில் 1.67 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார் சோனியா. ஆகவே, ரேபரேலியில் தோல்வி அடைய வாய்ப்புக் குறைவு என்பதாலும் ரேபரேலியில் போட்டியிட மசிந்தார் ராஹுல்.

இதில் இன்னொரு உள்கதையும் கூறப்படுகிறது. ''குடும்பக் கட்சி, குடும்பக் கட்சி'' என்று மோடி காங்கிரஸை வர்ணிப்பதால், குடும்பத்திலிருந்து யாரும் இரண்டு தொகுதிகளிலும் நிற்கக் கூடாது என்று கூறினர் ராஹுலின் ஆலோசகர்கள். ஒரு பக்கம் ராஹுலைப் போட்டியிலிருந்து காப்பாற்றி, மறுபக்கம் ரேபரேலியில் ப்ரியங்கா போட்டியிடாமல் தடுப்பதும் அவர்கள் நோக்கம் என்றும் கூறப்படுகிறது. ஏன்? ராஹுல் போட்டியிடாமல் ப்ரியங்கா நின்றாலே கட்சியில் ராஹுலுக்கு சறுக்கல் ஏற்படும்; அதிர்ஷ்டவசமாக ப்ரியங்கா வென்று விட்டால் ராஹுலின் கதி அதோகதிதான் என்று அவர்கள் நினைத்தார்கள் என்றும் பேசப்படுகிறது. நின்றாக வேண்டும் என்றால் ரேபரேலி என்று ராஹுல் எடுத்த முடிவு, ராஹுலுக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய் தந்தது. ஒன்று - ரேபரேலியில் தோல்விக்கு வாய்ப்புக் குறைவு. அடுத்து - ப்ரியங்காவுக்கு ரேபரேலியில் போட்டியிட வாய்ப்பு இல்லை.

## அமேதி, ரேபரேலி - ஒப்பீடு

சோனியா குடும்ப அடையாளமான அமேதி, ரேபரேலியில் பத்தே ஆண்டுகளில் நிலைமை மாறிவிட்டது. மேலும் மாறிவருகிறது. அமேதியில் 2009-ல் 72% வாக்குகள் பெற்ற ராஹுல் 3.72 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். 6 சத விகித வாக்குகள் மட்டுமே பெற்ற பா.ஜ.க. டெபாஸிட் இழந்தது. 2014-ல் ராஹுல் பெற்ற வாக்குகள் 25 சதவிகிதம் சரிந்தது. அவர் 47 சதவிகிதம் வாக்குகள் பெற்று, 1.08 லட்சம் வாக்குகளில் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளரான ஸ்மிரிதி இரானி 34% (மூன்று லட்சம்) வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்துக்கு வந்தார். 2019-தேர்தலில் ஸ்மிரிதி இரானி 50% வாக்குகள் பெற்று வெற்றி பெற, ராஹுல் (காங்கிரஸ்) வாக்குகள் மேலும் சரிந்து 44% ஆகியது. 2014 தேர்தலில் 57,000 வாக்குகள் பெற்ற பகுஜன் சமாஜ் கட்சி [BSP] 2019 தேர்தலில் போட்டியிடவில்லை. 2019 தேர்தலில் அணி சேர்ந்த சமாஜ்வாதி கட்சியும் [SP], BSP-யும் மறைமுகமாக ராஹுலை ஆதரித்தன. இந்த முறை இரண்டும் ஒன்றை ஒன்று எதிர்ப்பது மட்டுமல்லாமல், அமேதியில் BSP தனித்து நிற்கிறது. எனவே இந்த முறை அமேதியில் காங்கிரஸ் வாக்கு குறைய வாய்ப்பிருக்கிறதே தவிர, கூட வாய்ப்பில்லை.

மேலும் அமேதி தொகுதியில் 2022-ல் தேர்வான 5 எம்.எல்.ஏ.க்களில் மூவர் பா.ஜ.க., இருவர் சமாஜ் வாதி கட்சி. ஒருவர் கூட காங்கிரஸ் இல்லை. ஆனாலும் தான் கைவிட்ட அமேதியில், அவருடைய எடுபிடி ஒருவரை நிறுத்தியிருக்கிறார் ராஹுல். இந்தமுறை காங்கிரஸுடன் கூட்டணி சேர்ந்திருக்கும் சமாஜ்வாதி கட்சி, 'ராஹுல் நிற்காதபோது, 2 எம்.எல்.ஏ.க்கள் இருக்கும் அமேதியை எங்களுக்குக் கொடுத்திருக்கலாமே' என்று கூறுகிறது. ஏன், ராஹுல் அமேதியை அதற்கு கொடுக்கவில்லை. அமேதி மீதான குடும்ப ஆதிக்கம் போய்விடுமே, அதனால்தான். ரேபரேலியிலும் 2009 தேர்தலில் 4% வாக்குகள் பெற்ற பா.ஜ.க., 2014-ல் 21% பெற்று, 2019 தேர்தலில் 38% பெற்று அசுர வேகத்தில் வளர்ந்து வருகிறது. சென்ற முறை சோனியா இல்லை என்றால் காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்குமா என்பது சந்தேகமே. 2022 சட்டசபைத் தேர்தலில் ரேபரேலியில் தேர்வான 5 எம்.எல்.ஏ.க்களில் மூவர் சமாஜ்வாதி கட்சி, இருவர் பா.ஜ.க., காங்கிரஸ் பூஜ்யம். இந்த முறை ரேபரேலியிலும் பா.ஜ.க. வெற்றி பெறும் என்பது பொது கணிப்பு. அமேதியை விட ரேபரேலி ராஹுலுக்குச் சாதகம் என்றாலும், ரேபரேலியில் அவர் வெற்றி பெறுவாரா என்பது கேள்விக்குறியே.

## ''தாய் வீடு'' Vs ''கர்ம பூமி''

ராஹுலுக்கு இன்னொரு தர்மசங்கடம். 2019-ல் அமேதியில் தோல்வி அடைந்து, வயநாட்டில் அமோக வெற்றி பெற்ற அவர், ''வயநாடுதான் என் வீடு. நீங்கள் வாக்காளர்கள் அல்ல, என் சகோதர சகோதரிகள், தாய் தந்தையர்கள்'' என்று நா தழு தழுக்கக் கூறினார். இந்த முறை, வயநாடு தேர்தல் முடியும் வரை அமேதி பற்றியே பேசாத ராஹுல் அங்கு தப்பிவிட்டார். ஆனால் வயநாட்டை தன் தாய்வீடு என்று கூறிவிட்டு, இப்போது ரேபரேலியில் நிற்கும் அவர், அதை தாய்வீடு, ரேபரேலி வாக்காளர்கள் தன் சகோதரி, சகோதரர்கள் என்றெல்லாம் பேச முடியாது. ஆகவே ரேபரேலி ''என் கர்மபூமி'' என்கிறார் அவர். இந்த வாய்ஜாலங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படை, ரேபரேலி தங்கள் குடும்ப அடையாளம் என்பதை உறுதிப்படுத்தவே. இந்த நிலையில் ரேபரேலி குடும்ப அடையாளமாகத் தொடருமா என்ற கேள்விக்கு ஜூன் 4-ல் விடை கிடைக்கும்.

தானே முன்வந்து ரேபரேலியில் ராஹுல் போட்டியிட்டிருந்தால், அங்கு வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை அவருக்கு இருக்கிறது என்று அவரது ஆதரவாளர்கள் கூறலாம். விருப்பமில்லாத அவர் மீது ரேபரேலி திணிக்கப்பட்டதால் நம்பிக்கை இல்லாமல்தான் அவர் போட்டியிடுகிறார் என்பது வெளிப்படை. ●

# தேர்தல் செலவுக்கான பணம் சுருட்டலா?

## – பா.ஜ.க.வில் பகீர்ப் புகார்




ஒவ்வொரு முறையும் சட்டசபைத் தேர்தலோ, நாடாளுமன்றத் தேர்தலோ முடிந்ததும், இரு பிரதான கழகங்களில் ஒரு குற்றச்சாட்டு பலமாக கட்சிக்குள் எதிரொலிக்கும். அது என்னவென்றால், தேர்தல் சமயத்தில் வாக்காளர்களுக்கு ஓட்டுக்குத் தரப்படும் பணத்தில் (ரூ.300 அல்லது ரூ.500) ஒரு பகுதியை கட்சி நிர்வாகிகள் 'அமுக்கி' விட்டார்கள் என்பதுதான். 75 சதவிகித வாக்காளர்கள் முதல் 100 சதவிகித வாக்காளர்களுக்கும் பணம் தரும் வேட்பாளர்கள் உண்டு. இந்தப் பணம் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் வழியேதான் வினியோகிக்கப்படும். அவர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் வசம் ஒப்படைப்பார்கள். 75 சதவிகித வாக்காளர்களுக்குத் தருவதற்காக தலைமையில் இருந்து பணம் கொடுத்ததில், 50 அல்லது 60 சதவிகிதம்தான் வினியோகம் நடைபெற்றது என்ற புகார், தேர்தல் முடிந்ததும் பல தொகுதிகளில் இருந்தும் எழுவது சகஜம்.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில், இரு கழகங்களில், ஆளும் கழகம் மட்டுமே பணப் பட்டுவாடாவில் தாராளம் காட்டியது. முன்பு ஆட்சியில் இருந்த கழகம் அதற்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாகக் கருதிய ஏழு - எட்டு தொகுதிகளில் மட்டும் (அதுவும் ஓட்டுக்குத் தலா ரூ.250) பட்டுவாடா செய்துவிட்டு, எப்படியும் தோற்கப் போகிறோம் என்பதால், எதற்கு விரயம் செய்ய வேண்டும் என்று நிறுத்திக் கொண்டது. ஆகவே, பண விநியோகத்தில் கோல்மால் என்ற குமுறல் அந்தக் கட்சிக்குள் எழவில்லை. தி.மு.க.வில் மட்டும் இத்தகைய புகார்கள், சில தொகுதிகளில் இருந்து தலைமையை எட்டியுள்ளன.

வழக்கத்துக்கு மாறாக, இந்த முறை தமிழக பா.ஜ.க.வில் 'பண விநியோகம்' பற்றிய குற்றச்சாட்டுக்கள் அதிக அளவில் தலைமையை எட்டியிருப்பதாகக் கேள்வி. வாக்காளர்களுக்குப் பா.ஜ.க. பணம் தரவில்லை. பூத் ஏஜெண்ட்களுக்கும், இதர தேர்தல் பணிகளுக்காகவும் கட்சி மேலிடத்தில் இருந்து பெரும் தொகை ஒதுக்கப்பட்டு, பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு இரு விதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையை நிர்வாகிகள் வழியே குழு அமைத்து, முறைப்படி செலவிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் பணத்தில்தான் சில தொகுதிகளில் போட்டியிட்ட வேட்பாளர்களும், பல தொகுதிகளில் கட்சி நிர்வாகிகளும் 'சுருட்டல்' வேலையைச் செய்து விட்டதாகப் புகார்கள் எதிரொலிக்கத் துவங்கியுள்ளன. தென் சென்னையில் போட்டியிட்ட பா.ஜ.க.வின் முன்னாள் மாநிலத் தலைவர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தொகுதி துவங்கி, வெவ்வேறு தொகுதிகளைச் சேர்ந்த கீழ்மட்ட நிர்வாகிகள், கட்சித் தலைமை ஒதுக்கிய பணம் முறைப்படி கீழ் மட்டத்துக்கு வரவில்லை என்று மாநிலத் தலைமைக்கும், அகில இந்தியத் தலைமைக்கும் புகார்களை அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஓரிரு வேட்பாளர்களும், ஓரிரு மாவட்டத் தலைவர்களும் தேர்தல் பணிக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதியைத் தங்களுக்கு ஒதுக்கிக் கொண்டதாக பா.ஜ.க. நிர்வாகிகள் புகார் தெரிவித்திருப்பதை மாநில அளவில் முக்கியப் பொறுப்பில் உள்ள ஒருவர் 'துக்ளக்' நிருபரிடம் உறுதிப்படுத்தினார். தேர்தல் பணிகளைக் கண்காணிக்க வேண்டிய முக்கியப் பொறுப்பில் உள்ள ஒருவர் உட்பட சிலர் இவ்விஷயத்தில் உரிய கவனம் செலுத்தவில்லை, அது ஏன் என்று புரியவில்லை என்கிறார் அவர்.

**–நிருபன்**



# கொரோனா தடுப்பூசியில் பக்க விளைவுகளா?

**– டாக்டர் குஹானந்தம்**



கொரோனா பெருந்தொற்று நோய் உலகையே அச்சுறுத்தி, அதன் விளைவாக பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் லட்சக்கணக்கில் உயிரிழந்ததை அவ்வளவு சுலபமாக மறந்து விட முடியாது. சுமர் 10 ஆண்டுகளுக்கு முன் சீனாவில் தொடங்கிய முதல் அலை, பிறகு அடுத்த சில ஆண்டுகளில் இரண்டு மற்றும் மூன்றாவது அலையாகப் பரவி இந்திய மக்களையும் வெகுவாகப் பாதித்தது. அப்போது இந்தியாவில் இதற்கான தடுப்பூசி தயாரிக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றன. மருத்துவ நிபுணர்கள் பலர் ஒருசேர இந்த மாபெரும் பணியில் ஈடுபட்டனர்.

பிரிட்டனைச் சேர்ந்த 'அஸ்ட்ரா ஜெனேகா' நிறுவனத்துடன் இந்தியாவின் 'சீரம் இன்ஸ்டிட்யூட்' புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, 'கோவிஷீல்டு' என்ற தடுப்பூசியைத் தயாரித்தது. இந்தியாவைச் சேர்ந்த 'பாரத் பயோடெக்' நிறுவனம் 'கோவேக்ஸின்' எனும் தடுப்பூசியைத் தயாரித்தது. இந்தத் தடுப்பூசிகள் பலகோடி இந்திய மக்களுக்கு இரண்டு டோஸ்கள் இலவசமாகப் போடப்பட்டன. தவிர, ஏராளமான அயல் நாடுகளுக்கும் இந்த தடுப்பூசி மருந்தை இந்தியா அனுப்பி வைத்தது.

கொரோனா முதல் மற்றும் இரண்டாவது அலை உருவான சமயத்தில் சீனா, அமெரிக்கா போன்ற மிக வளர்ந்த நாடுகளில் இந்நோயால் பாதிக்கப்பட்டு, கணக்கிலடங்காதவர்கள் உயிரிழந்த நிலையில், தடுப்பூசிகளை மிக விரைவாக கண்டறிந்து, இதுகுறித்து நம் பிக்கையூட்டி கோடிக்கணக்கான மக்களுக்கு அதைச் செலுத்த முடிந்தால், பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் பெரும் கவலைக்குரிய வகையில் உயிரிழப்பு என்பது மிக அதிகமாக ஏற்படவில்லை.

இந்த கொரோனா நோய் குறித்த அச்சம் முழுவதுமாக மக்களிடம் இருந்து விலகி சில ஆண்டுகள் கழிந்த நிலையில், இப்போது திடீரென்று கொரோனாவில் இருந்து உயிரைக் காத்துக் கொள்ள கோடிக் கணக்கான மக்கள் பயன்படுத்திய தடுப்பூசிகள் குறித்த ஒரு பீதி உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், லண்டன் நீதிமன்றத்தில், கொரோனா சமயத்தில் 'கோவிஷீல்டு' தடுப்பூசி செலுத்திக் கொண்ட பிறகு உயிரிழந்தோர், கடும் பக்க விளைவுகளால் பாதிக்கப்பட்டோர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொடுத்துள்ள 51 வழக்குகள்தான்.

இந்த வழக்கில் ஆஸ்ட்ரா ஜெனேகா தாக்கல் செய்த பதில் மனுவில், தடுப்பூசியால் மிக அபூர்வ பக்க விளைவாக ரத்தம் உறைதல் அல்லது ரத்த அணுக்கள் குறைவது போன்ற பாதிப்புகள் ஏற்படலாம் என்று கூறியிருந்தது. இது பற்றிய விரிவான செய்தி 'தி டெய்லி டெலிகிராஃப்' பத்திரிகையில் வெளியாகி இருந்தது. இது சர்ச்சைகளுக்கு வித்திட்டிருப்பதோடு, கவலைகளையும் தோற்றுவித்துள்ளது. இந்தியாவில் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களில் பெரும்பகுதியினர் 'கோவிஷீல்டு' ஊசியைத்தான் போட்டுக் கொண்டனர்.

**இப்போது கோவிஷீல்டு தடுப்பூசி குறித்து பலரிடையே தோன்றியுள்ள சந்தேகங்கள் மற்றும் கவலை குறித்து பிரபல தொற்றுநோய் நிபுணரும், தமிழக அரசு அமைத்த கொரோனா கட்டுப்பாடு ஆலோசனைக்குழு உறுப்பினருமான டாக்டர் குஹானந்தம் கூறியதாவது:**

''எந்த ஒரு தடுப்பூசியுமே (VACCINE) மிகச் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் வாய்ப்புகளுண்டு. அதுமாதிரி கொரோனாவுக்கான தடுப்பூசியாலும் சிலருக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் பல கோடி பேருக்கு இந்தியாவில் தடுப்பூசிகள் போடப்பட்டதால்தான், நமது நாட்டில் பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. கொரோனா என்ற பெரும் தொற்று அபாயம் உருவான சமயத்தில், மருத்துவ உலகில் மிக விரைவாக அதற்கு ஒரு தடுப்பூசி கண்டுபிடித்ததே சாதனை எனலாம்.

''இந்தியாவில் 2 டோஸ் தடுப்பூசி, அதன் பிறகு பூஸ்டர் டோஸ் போடப்பட்டது. முதல் டோஸ் போடப்பட்டபோது, லட்சம் பேரில் 0.2 சதவிகிதம் பேருக்குப் பாதிப்புகள் (பக்க விளைவுகள்) ஏற்பட்டிருக்கலாம். அதிலும் கூட சிலருக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் போன்ற துணை காரணிகள் இருந்திருக்கும். மேலும், பக்க விளைவுகள் ஏதாவது ஏற்படுவதானால் அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் ஏற்படுமே தவிர, சில மாதங்கள் கழித்தோ, வருடங்கள் கழித்தோ ஏற்படாது. ஆகவே லேபரட்டரி பரிசோதனைகள் மூலமான வலுவான நிரூபணங்கள் இல்லாமல், வதந்திகளைப் பரப்பி, மக்களிடையே பீதியை ஏற்படுத்தக் கூடாது''.

**– நிருபன்**




**எஸ்.சிவப்பிரகாசம், விருத்தாசலம்**

**கே:** எல்லா கட்சிகளுமே தேர்தலில் தாங்கள்தான் ஜெயிப்போம் என்கின்றன. தேர்தல் முடிவு வந்தவுடன் அவர்கள் ஜெயிக்காவிட்டால் என்ன காரணம் சொல்வார்கள்?

**ப:** தேர்தலில் தோற்பவர்களுக்குக் காரணம் கூற இதுவரை EVM ஆபத்பாந்தவனாக இருந்தது. உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு அதைக் காரணம் காட்ட முடியாது. அவர்களுக்கு இப்போது இருக்கும் ஒரே நம்பிக்கை மகேசன்தான் - மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.

**ஆர்.பிரகாஷ், பொன்மலை**

**கே:** பொறுமைக்கு எது எல்லை?

**ப:** நம் பொறுமைக்கு, அடுத்தவர் நமக்கு மூட்டும் கோபம் எல்லை. அடுத்தவர் பொறுமைக்கு, நாம் அவருக்கு மூட்டும் கோபம் எல்லை.




**ஜி.தீபிகா, மடிப்பாக்கம்**

**கே:** நினைப்பதெல்லாம் நடக்க நாம் செய்ய வேண்டியது என்ன?

**ப:** எது நடக்குமோ அதை மட்டுமே நினைக்க வேண்டும். அது ஒன்றுதான் நினைப்பதெல்லாம் நடக்க ஒரே வழி.

**கே.ரமேஷ்பாபு, சேலம் - 3**

**கே:** உதயநிதி, இன்பநிதி ஆகியோரை தோளில் சுமப்பதாக துரைமுருகன் கூறுவது சுமையா, பெருமையா?

**ப:** இரண்டும் இல்லை. கிழவரான துரைமுருகனின் தோளில் சுமக்கும் அளவுக்கு இளைஞர்களான அவர்கள், அரசியலில் ஊனமானவர்களா என்ற கேள்விதான் எழும்.

**ஜி.மஞ்சரி, கிருஷ்ணகிரி - 1**

**கே:** தி.மு.க.வில் இப்போது யாருக்கு மவுசு அதிகம்?

**ப:** கருணாநிதி காலத்தில் ஸ்டாலின் அப்பாவுக்குத்தான் மவுசு அதிகம். ஸ்டாலின் காலத்தில் அவர் பிள்ளை உதயநிதிக்குத்தான் மவுசு அதிகம்.

**ஆர்.விநாயகராமன், செல்வமருதூர்**

**கே:** சோ கால துக்ளக் இதழ்கள் சிலவற்றில், காம்ரேடுகளை சோ பாராட்டியிருப்பார். இப்போது?

**ப:** இப்போதும் சோ காலத்து காம்ரேடுகளை துக்ளக் பாராட்டுகிறதே!

**சி.ஆர்.ஹரிஹரன், ஆலுவா (கேரளா)**

**கே:** உங்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும் போது, உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

**ப:** என் வாழ்க்கையை நான் நடத்தவில்லை, காஞ்சிப் பெரியவர்தான் நடத்தியிருக்கிறார். என் அனுபவங்கள் எல்லாம் அவர் தந்த அனுபவங்கள் - என்று தோன்றும்.

**கே.ஆர்.எஸ்.சம்பத், திருச்சி - 17**

**கே:** ஆன்மிக வேடதாரி, அரசியல் வேடதாரி - யார் ஆபத்தானவர்கள்?

**ப:** ஆன்மிக வேடதாரி - வேஷம் கலையும் வரை ஆபத்தானவர். அரசியல் வேடதாரி - வேஷம் கலைந்த பிறகும் ஆபத்தானவர்.

**எஸ்.வி.ஸ்ரீனிவாசன், சென்னை - 91**

**கே:** எந்த விஷயத்தில் கழகங்கள், இமாலய சாதனை செய்துள்ளன?

**ப:** அறுபதே ஆண்டுகளில் கருணாநிதியின் உறவுமுறைக் குடும்பங்கள், பல லட்சம் கோடிகள்; ரத்தத்தின் ரத்தமான குடும்பங்கள், கோடி கோடியாகச் சொத்துக் குவித்தது - இமாலய சாதனை இல்லையா?

**கிருஷ்ணவேணி, ஈரோடு - 2**

**கே:** 'பிரதமரின் மதத் துவேஷக் கருத்து ஏற்புடையது அல்ல' என்று எடப்பாடி கூறுகிறாரே?

**ப:** பயங்கரவாத PFI -யின் 'மதநல்லிணக்கக்' கருத்துக்களை ஏற்ற எடப்பாடி, எப்படி மோடியின் 'மதத்துவேஷக்' கருத்தை ஏற்பார்?

**கோ.சாய்லெட்சுமி, கிருஷ்ணாபுரம்**

**கே:** பிரதமர் மோடி மாதிரி இதுவரை வேறு எந்தப் பிரதமரும் இப்படி ஒரு தீவிரப் பிரசாரத்தை அகில இந்தியாவிலும் செய்ததில்லை. இது குறித்து உங்கள் கருத்து?




**ப:** *1989* தமிழக சட்டசபைத் தேர்தலில், இப்போதுள்ள மோடி போல் அப்போது ராஜீவ் தீவிர பிரசாரம் செய்தார். ஆனால், ஒரு வித்தியாசம். அப்போது தனியார் டி.வி.க்கள் இல்லை. இப்போது தனியார் டி.வி.க்கள் மற்றும் இணையதள மீடியா ஆகியவை இருக்கின்றன.

**பி.கே.ஜீவன், கும்பகோணம் - 1**

**கே:** நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தேர்தலின் போது, பிராமண துவேஷம் மீண்டும் தலைதூக்கியுள்ளதை ஊடகங்கள் கண்டு கொள்ளாத காரணம் என்ன?

**ப:** ஊடகங்களும் அதை ரசிப்பதுதான் காரணம்.

**ஏ.எம்.பழனிச்சாமி, பொன்மார்**

**கே:** மோடி அடிக்கடி தமிழகத்திற்கு விஜயம் செய்தது, யாரை அதிகம் கலங்க வைத்திருக்கும்?



**ப:** காங்கிரஸை! தமிழகத்தில் காங்கிரஸை விட பெரிய கட்சியாக பா.ஜ.க. வளர்ந்து விட்டால், தமிழக காங்கிரஸ் தி.மு.க.விடம் ம.தி.மு.க. இருப்பது போல் ஆகிவிடும்.

**தே.மாதவராஜ், கோயமுத்தூர் - 45**

**கே:** நான் மரணம் அடைவதற்குள் காமராஜைப் போல் ஒரு முதல்வரைப் பார்க்க நினைக்கிறேன். நடக்குமா?

**ப:** இந்திரா உதவியுடன் காமராஜை அழித்த கழகம் அழிந்தால்தான், காமராஜ் போன்ற ஒருவர் முதல்வராக வர முடியும்.

**அரங்க சேகர், சென்னை - 59**

**கே:** அரசியலில் நீயா - நானா போட்டி எப்போது முடிவுக்கு வரும்?

**ப:** நீயா - நானா போட்டிதானே ஜனநாயக அரசியலே. அது முடிந்தால் ஜனநாயகமே முடிந்து விடுமே.

**இரா.அமிர்தவர்ஷினி, புதுச்சேரி - 1**

**கே:** ஞாபகம், மறதி - இரண்டில் நமக்கு அவசியமானது எது?

**ப:** இரண்டும் அவசியம். நல்ல விஷயங்களை நினைவில் வைத்துக்கொள்ள ஞாபகம் அவசியம். கெட்ட விஷயங்களை நினைவிலிருந்து அகற்ற மறதி அவசியம்.

**பா.ஜெயப்பிரகாஷ், அரண்மனைப்புதூர்**

**கே:** 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பா ரிலானுங் கெடும்' என்ற குறள், மன்னருக்கு மட்டும்தானா மீடியாவுக்கு கிடையாதா?

**ப:** இடித்துரைப்பார் இல்லாத மன்னனைக் கெடுக்க யாரும் வேண்டாம், அவன் தானே கெடுவான் என்கிறார் வள்ளுவர். ஜனநாயக உலகில் இடித்துரைப்பவர்கள் ஊடகங்கள்தான். அவர்கள் இடித்துரைக்கவில்லை என்றால் ஆட்சியாளர்களும் கெடுவார்கள், அவர்களும் கெடுவார்கள்.

**வே.ந.கதிர்வேல், காட்பாடி**

**கே:** 'என்னுடைய ஒவ்வொரு கையெழுத்தும், ஒவ்வொரு அரசாணையும், ஒவ்வொரு சட்டமும், கோடிக்கணக்கான மக்களது மனங்களில் மகிழ்ச்சியை கொண்டு வருகிறது' என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் பெருமிதம் கொள்கின்றாரே?

**ப:** அவர் கூறுவது உண்மையானால், எதிர்க்கட்சிகள் தேர்தலில் நிற்பதில் அர்த்தமே இல்லை என்று தோன்றவில்லை?

**ஸி.சம்பத்குமார், நுங்கம்பாக்கம்**

**கே:** ஆரம்பத்தில் பா.ஜ.க. கூட்டணி Vs இந்தி கூட்டணியாக இருந்த தேர்தல், இப்போது மோடி Vs இந்தி கூட்டணி ஆகிவிட்டதே?

**ப:** இந்தி கூட்டணி எங்கு இருக்கிறது? காணவில்லையே? போட்டி, மோடி Vs ராஹுல், ராஹுல் Vs மமதா, மமதா Vs இடதுசாரி, மோடி Vs மமதா, மோடி Vs இடதுசாரி, பினராயி Vs ராஹுல், பகவந்த் மான் Vs காங்கிரஸ் என்றல்லவா ஆகியிருக்கிறது.

**மா.தே.ரவிகாந்த், சென்னை - 18**

**கே:** முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது மகா பெரியவர் படத்தின் முன் சீட்டு எழுதிப் போட்டு, அதில் ஒன்றை எடுத்து முடிவெடுக்கும் பழக்கம் உங்களுக்கு உண்டா?

**ப:** எப்போதும் அவரை நினைத்துப் பிரார்த்தனை செய்யும் பழக்கம் உண்டு, சீட்டுப் போட்டுப் பார்க்கும் பழக்கம் கிடையாது.

**ஆர்.வள்ளிபாலன், திசையன்விளை**

**கே:** ஓட்டுப் போட்டு போஸ் கொடுப்பதில் இடது ஆள்காட்டி விரல் முக்கியமாகிறது. ப.சிதம்பரம் மட்டும் வலது ஆள்காட்டி விரலைக் காட்டி போஸ் கொடுத்ததற்கு விசேஷ காரணம் உண்டா?

**ப:** சென்ற 2019 தேர்தல் ஃபோட்டோவில் (படம்-1) இடது ஆள்காட்டி விரலைக் காட்டினார் சிதம்பரம். இந்த முறை (படம்-2) வலது ஆள்காட்டி விரலைக் காட்டுகிறார். ஏன்? சென்றமுறை காங்கிரஸ் தோற்று



**படம்-1**
**மின்ட் பத்திரிகை**
**29.4.2019**



**படம்-2**
**என்.என்.ஐ நியூஸ்**
**19.4.2024**

விட்டதால், இடக்கை ராசியில்லை என்று, இந்தமுறை வலக் கையில் மை வைக்குமாறு ஜோஸியர்



SriKanchi Mahaswami TRUST

vidyamandir

EDUCATE • ENLIGHTEN • EMPOWER

# SRI KANCHI MAHASWAMI VIDYA MANDIR

(CBSE AFFILIATED UPTO CLASS – XII)
DR.L.M.SINGHVI VEDA VIDYA PITHAM (Units of SRI KANCHI MAHASWAMI TRUST)
NO. 1, SHANKAR NAGAR, RAJAKILPAKKAM, TAMBARAM EAST, CHENNAI-73. Mobile No: 8870143888, 8870666996
Our website : www.srikanchimahaswamividyamandir.org/ www.srikanchimahaswamividyamandir.edu.in

## CBSE + VEDAM (UNIQUE SCHOOL) SINCE 2011
## FULLY RESIDENTIAL ONLY FOR VEDIC STUDENTS

Sri Kanchi Mahaswami Vidya Mandir is the largest vedic modern educational institution inspired by the philosophy of His Holiness Pujyasri Chandrasekarendra Saraswathi Mahaswamigal of the venerated Sri Kanchi Kamakoti Peetam. It has **180 students** as of date pursuing both CBSE and Vedic education. We are pleased to inform that since the first year viz 2016, we had sent students to the CBSE class X and class XII board examination the Vidya Mandir has registered 100% results. The success of the dual education system needs no further certification.

**Vedam wise strength**

| Vedam | No. of Vidyarthis | No. of Adhyapakars |
|---|---|---|
| Rig | 21 | 2 |
| Yajur | 154 | 8 |
| Sama | 5 | 1 |

**Class wise strength – Dual education alone**

| Class | No. of students | Class | No. of students |
|---|---|---|---|
| III | 4 | VIII | 21 |
| IV | 9 | IX | 21 |
| V | 21 | X | 21 |
| VI | 23 | XI | 19 |
| VII | 25 | XII | 16 |

- " காஞ்சி கோஷ் " - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 2500 வருட வரலாறு மற்றும் காஞ்சிபுரத்தின் சிறப்புகள் அமையப்பெற்ற நிரந்தர அருங்காட்சியகம் (MUSEUM) உள்ளது
- ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலில், பிரதிபௌர்ணமி, பூரம் நட்சத்திர தினத்தில் மாலை 6.00 மணிக்கு தங்கரத உலா நடைபெறும்.
- ஸ்ரீ வாராஹி அம்மனுக்கு பிரதி பஞ்சமி தினத்தில் விசேஷ பூஜை நடைபெறும்.
- பிரதி பிரதோஷ தினத்தில் ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோவிலில் விசேஷ பூஜை நடைபெறும்.
- மஹா பெரியவாளுக்காக ஒரு பிரத்யேக மண்டபம் அமைக்கப் பெற்று அதில் ஒரு போட்டோ கேலரி மற்றும் பெரியவா உபயோகப்படுத்திய பொருட்கள் பார்வைக்கு உள்ளது. அனுஷ நட்சத்திர தினத்தில் மாலை 6.00மணிக்கு பெரியவா பாதுகைகளுக்கு விஷேஷ பூஜை நடைபெறும்.
- இலட்ச உத்திராட்சத்துடன் கூடிய சிவலிங்கம் உள்ளது.
- ஸ்ரீமதி M.S.சுப்புலக்ஷ்மி அவர்களுக்கு பிரத்யேக சிலையும் போட்டோ கேலரியும் அமைக்கப்பட்டுள்ளது.
- "அனுக்ரஹ வர்ஷா " - மஹாஸ்வாமிகளின் வாழ்க்கை மற்றும் உபதேசங்கள் கொண்ட கண்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

### VEDIC ADMISSION 2024-2025

Registration is now open for CBSE + VEDAM for the next academic year 2024-2025 for classes III, IV, V, VI & VII (Rig, Yajur) Please contact 9600083203 for registration of Vedic admission.
For more details contact: 9600123327 / 9894555244 / 9600083203 or mail us @ skmsvm.trustoffice@gmail.com / skmsvm.vedicstudentdivision@gmail.com

### பார்வை நேரம் (TEMPLE)

காலை 8.00 மணி முதல் 10.45 மணி வரை
மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை

### அருங்காட்சியகம் (MUSEUM) பார்வை நேரம் :

பிரதி சனி, ஞாயிறு கிழமைகள் :
மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை

### குறிப்பு :

மஹா பெரியவா பக்தர்களும், வேத அபிமானிகளும் அவசியம் தரிசிக்க வேண்டிய ஒரு அறிய இடம்

We are able to provide high quality wholesome food to veda vidyarthis. 600 donors with annual contribution of Rs.18000/- can fully take care of the annual Bhojanashala expenses of Rs.1 crore per year. We appeal to the devotees of the Mahaswami of Kanchi and those committed to societal good to participate in the Annadhanam by contributing Rs.18,000/- per annum. One can give in multiples of Rs.1500/- to cover one month's expenditure of a Vidyarthi. All contributions are eligible for exemption u/s 80G of the Income Tax Act, 1961. Details for bank transfer is mentioned below:

**DONATIONS ARE ACCEPTED FOR ANNADHANAM!**

**Cheque/DD shall be drawn favouring "SRI KANCHI MAHASWAMI TRUST"**

| | | |
|---|---|---|
| Account Name | : | Sri Kanchi Mahaswami Trust |
| Type of Account | : | Savings Bank Account |
| Bank Name & Address | : | Indian Bank, King Circle Branch, Mumbai-400 022 |
| Account No. | : | 6091702986 IFSC code : IDIB000K038 |

Visit our website – www.srikanchimahaswamividyamandir.org for online donations. After transfer of funds, please send an e-mail to skmsvm.trustoffice@gmail.com providing address and contact number of the donor and the purpose of contribution.

**Voice of god (7 volumes) spiritual books are available with us for sale in English, Hindi, Telugu, Kannada and Marathi languages.**

For more details contact: E-mail ID: skmsvm.trustoffice@gmail.com / Whatsapp @ 9840772300
Mobile No: 9600123327 / 9894555244

சொல்லியிருப்பாரோ?

**வண்ணை கணேசன், சென்னை - 110**

**கே:** '90 சதவிகித மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே என் வாழ்க்கையின் லட்சியம். ஜாதி வாரிக் கணக்கெடுப்பை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது' என்ற ராஹுலின் பேச்சு பற்றி?

**ப:** ராஹுல் கொள்ளுத் தாத்தா, பாட்டி, அப்பா, பிறகு அம்மாவும் அவரும் நாட்டை 50 ஆண்டுகள் ஆட்சி செய்தும், 90 சதவிகித மக்களுக்கு நீதி மறுத்த அந்த 10 சதவிகிதம் யார் என்று கூறுவாரா ராஹுல்?

**ஆ.மாடக்கண்ணு, பாப்பான்குளம்**

**கே:** மஹா பெரியவரின் 'தெய்வத்தின் குரல்' படித்து வரும் நான், என்னைப் பண்படுத்திக் கொள்ள, நீங்கள் எனக்கு ஏதாவது சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். என்ன சொல்வீர்கள்?

**ப:** தெய்வத்தின் குரல் தொகுப்பைப் படிப்பதோடு நிறுத்தாமல், அதில் பெரியவர் கூறிய ஏதாவது ஒன்றை செய்யத் தொடங்கினால் - உதாரணமாக பிரதிபலன் இல்லாத சேவை - அதுவே நாம் மேம்படுவதற்கு வழி. இது என் அனுபவம்.

**நடேஷ் கன்னா, கல்லிடைக்குறிச்சி**

**கே:** 'மோடியின் ரத்த அணுக்களில் முஸ்லிம் வெறுப்பு ஊடுருவி உள்ளது' என்று வைகோ கூறியிருப்பது பற்றி?

**ப:** 2014 (பிப்ரவரி-9) மோடியைச் சந்தித்து, அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து, (கீழே படம்) அவருடன் 2014 தேர்தலில் கூட்டணி வைத்து போட்டியிட்ட வைகோ, நாடு முழுவதும்



மோடி அலை என்றும் (மார்ச்-22), அதனால் NDA வுக்கு அமோக வெற்றி என்றும் கூறினார். மோடி வெற்றி பெற்ற பிறகு 'மகத்தான வெற்றி, அழிந்தது காங்கிரஸ்' (மே-16) என்று கூறினார். அதன் பிறகே மோடியின் ரத்த அணுவில் முஸ்லிம் வெறுப்பு ஊடுருவியிருக்க வேண்டும்.

**என்.உமாமகேஸ்வரி, சென்னை - 61**

**கே:** தீவிர பிரசாரத் தேர்தலில், மோடி எவ்வாறு வெயிலில் சமாளிக்கிறார்?

**ப:** இளமைப் பருவத்தில் வெயில், மழை, குளிர் என்று பாராமல், தரையில் அமர்ந்து, படுத்து, கார், ஏ.சி, சுகம் என்றால் என்ன என்று தெரியாது இருந்தவர் அவர். கொளுத்தும் வெயில் அவருக்கு ஒரு பொருட்டே இல்லை.

**சந்தாதாரர்கள் கவனத்திற்கு...**

**சந்தா விவரங்களுக்கு 044 - 45919107 மற்றும் 9840909525 என்ற தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளவும். இணைய தளத்தில் படிக்க மற்றும் இணைய தளத்துக்கு சந்தா செலுத்த விரும்புவோர்** www.thuglak.com **என்ற இணைய தளத்தைத் தொடர்பு கொள்ளவும்.**

**அ.குணசேகரன், புவனகிரி**

**கே:** கேண்டிடேட்ஸ் செஸ் கோப்பையை, தமிழக இளம் வீரர் குகேஷ் வென்றுள்ளது பற்றி?

**ப:** ''அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்த குகேஷ் வயதில் மிகச் சிறியவர். இவ்வளவு பெரிய போட்டியில் பங்கு பெறுகிறோமே என்ற பதட்டம் கூட அவருக்கு இல்லை'' என்கிறார் உலகப் புகழ் பெற்ற நம்பர் 1 வீரர் மேக்னஸ் கார்ல்சன். குகேஷின் வெற்றியைவிட முக்கியம் அந்த பாராட்டு.

**தி.பச்சமுத்து, கிருஷ்ணகிரி - 1**

**கே:** ஆந்திர முதலமைச்சர் ஜெகன்மோகனின் சொத்து மதிப்பு, ஐந்தே ஆண்டுகளில் 40 சதவிகிதம் அதிகரித்து இருக்கிறதாமே?

**ப:** முதலமைச்சராக இருந்த அவரது சொத்து ஐந்து ஆண்டுகளில் 40 சதவிகிதம்தானே உயர்ந்தது. கர்நாடகத் துணை முதல்வர் டி.கே. சிவகுமாரின் சகோதரர் டி.கே.சுரேஷின் சொத்து, 5 ஆண்டுகளில் 188 சதவிகிதம் உயர்ந்திருக்கிறதே (1).

(1) டெக்கான் ஹெரால்டு 28.3.2024

**சே.பார்த்தசாரதி, திருநெல்வேலி - 9**

**கே:** வேத சாஸ்திர தர்மங்கள், பிராமணர்களால் மட்டும் பின்பற்றப்படக் (அனுஷ்டிக்க) கூடியவை என்கிற பார்வை சரியானதா?

**ப:** சோ எழுதிய 'வெறுக்கத்தக்கதா பிராமணியம்', 'எங்கே பிராமணன்' புத்தகங்களைப் படித்தால் பிராமணனாக இருப்பது எவ்வளவு கடினம் என்பது தெரியும். பிழைப்புக்கு யாசகம் செய்பவன்தான் உண்மையில் பிராமணன். அந்த அடிப்படையில்தான் அவரவர்களுக்கான தர்மம் என்ற விதி உள்ளது.

**பாலா, சென்னை - 59**

**கே:** வக்கீல் சோ, சி.ஏ. குருமூர்த்தி - ஒப்பிடுக?

**ப:** வக்கீல் சோ நடிகரானார். பிறகு பத்திரிகையாளரானார். சி.ஏ. குருமூர்த்தி பிஸினெஸ் ஆலோசகரானார். பிறகு பத்திரிகையாளரானார். எமெர்ஜென்ஸியில் இருவரும் நண்பரானார்கள். கோயங்காவால் துக்ளக்கில் இருவரும் பார்ட்ன

**★ ● ◆- இக்குறியிட்ட கேள்விகள் முறையே 500, 400, 300 - ரூபாய்களைப் பரிசுகளாகப் பெறுகின்றன.**



ஸ்ரீஹரி: ஓம் நமோ பகவதே ப்ரேமிகேந்திராய!

# ஸ்ரீ ஸாந்தீபனி குருகுலம் ஸ்ரீரங்கம் டிரஸ்ட்

**ஸ்ரீப்ரேமிக வேதாஸ்ரமம்,127,வடக்கு உத்திர வீதி, ஸ்ரீரங்கம் - 620006**

**போன்: 0431 - 4542299, செல்: 9444460079, 9841992022**

**மின்னஞ்சல்: srirangampadasalai@gmail.com**

அன்புடையீர்,

பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் ''ஸ்ரீ ப்ரேமிக வேதாஸ்ரமம்'' 127, வடக்கு உத்திர வீதி என்ற இடத்தில் ரிக், யஜுர் வேத பாடசாலை, மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, ஸ்ரீ ஸாந்திபனி குருகுலம் ஸ்ரீரங்கம் அறக்கட்டளையின் சார்பில் நடந்து வருகின்றது. இந்தவேத கைங்கர்யத்தை உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களின் ஆதரவுடன்தான் தொடர்ந்து நடத்த முடியும். அதனால் தாங்கள் முடிந்த அளவில் பொருளுதவி செய்து வேதநாராயணனின் பரிபூரண அருளுக்குப் பாத்திரர்கள் ஆகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| வேத பாடசாலையின் ஒரு நாள் செலவு | ரூ.7,500 |
| ஒரு மாத பராமரிப்பு செலவு | ரூ.2,00,000 |

CITY UNION BANK LTD

ALL UPI PAYMENTS ACCEPTED HERE

பாடசாலை வங்கிக் கணக்கு விவரம்:கரூர் வைஸ்யா பேங்க், ஸ்ரீரங்கம்.

SREE SANTHEEPANI GURUKULAM, A/c NO. 1276155000016800, IFS CODE. KVBL 0001276.

மேலே கொடுக்கப்பட்டுள்ள செலவு விவரம் தகவலுக்காக மட்டுமே. அன்பர்கள் அவரவர் விரும்பிய / இயன்ற தொகையினை செலுத்தி இந்தக் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளலாம்.

நன்கொடைகளை காசோலையாகவோ, மணி ஆர்டர் மூலமாகவோ, மின்னணுப் பண பரிமாற்றம் மூலமோ செலுத்தலாம். தங்கள் பெயர், நக்ஷத்திரம், முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நன்கொடையாளரின் குடும்பத்திற்கான சிறப்பு ப்ரார்த்தனை செய்து, அதன் ப்ரஸாதம் மற்றும் இரசீது அனுப்பி வைக்கப்படும்.

குறிப்பு: நன்கொடைகளுக்கு வருமான வரி சட்டப் பிரிவு 80 - G ன்படி வரிச்சலுகை உண்டு.- நிர்வாகிகள்





# ஜெயலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ் (Regd)

4/13, சன்னதிதெரு, லலிதா கார்டன், முதல் மாடி, திருவான்மியூர், சென்னை - 600 041

ஆபீஸ் போன் : 044 -24451270, செல்: 94449 80270, 8122996045

E.mail:jayalakshmi.yatra@gmail.com, www.jayalakshmiyatraservice.com



ஸ்ரீதிருப்பதி வெங்கடேஸ்வர ஸ்வாமி திருவருளால் 32 வருடங்கள் அனுபவத்துடன் வழிநடத்தும் வடஇந்திய மற்றும் தென்இந்திய யாத்திரை

| | | |
|---|---|---|
| 1 | 02.06.2024 | 8 நாட்கள் - மத்தியபிரதேச யாத்திரை- உஜ்ஜெயினி, மகாகாளேஸ்வரர், ஓம்காரீஸ்வரர், மாகேஷ்வர், கஜீராவோ. |
| 2 | 01.07.2024 | 8 நாட்கள் - ஸ்ரீலங்கா யாத்திரை- முனீஸ்வரம், தலைமன்னார்- திருகேதீஸ்வரர், யாழ்ப்பாணம், நைனார்தீவு, திரிகோணமலை - திருகோணீஸ்வரர் (2 பாடல் பெற்ற சிவாலயம்), மட்டகளப்பு, நுவரலியா, கதிர்காமம், கொழும்பு - (விமான யாத்திரை). |
| 3 | 10.07.2024 | 14 நாட்கள் - அமர்நாத் யாத்திரை - டெல்லி, குருஷேத்திரம், அமிர்தசரஸ், வாகாபார்டர், ஜாலியன் வாலாபாக், ஜம்மு, ஸ்ரீநகர், அமர்நாத், வைஷ்ணோதேவி,சாமுண்டா, காங்கடா, ஜ்வாலாமுகி, சிந்தபூரணி, நைனாதேவி (விமான யாத்திரை) |
| 4 | 11.08.2024 | 14 நாட்கள் - பஞ்சதுவாரகா யாத்திரை - ஜெய்பூர், புஷ்கர், ஸ்ரீநாத் துவாரகா, மவுண்ட் அபு, அம்பாஜி, டாகூர் துவாரகா,சர்தார் வல்லபாய் படேல் சிலை (Statue of Unity), கோலியாக் (நிஷ்கலிங்க் மஹாதேவ்), சோம்நாத் ஜோதிர்லிங்கம்,மூல துவாரகா, துவாரகா **(A/c Bus)** |
| 5 | 28.08.2024 | 10 நாட்கள் - கர்நாடகா யாத்திரை - மேல்கோட்டை, ஸ்ரீரங்கபட்டிணம், தலகாவேரி, மைசூர், பேலூர், ஹலபேடு, சிருங்கேரி, ஹொரநாடு- தங்க அன்னபூரணி, நஞ்சன்கூடு, குக்கி சுப்ரமணியா, தர்மஸ்தலா, கட்டில் துர்கா, உடுப்பி, ஆனேகுட்டா கணபதி, கொல்லூர் மூகாம்பிகை, முருடீஸ்வரர், கோகர்ணா **(A/c Bus)** |
| 6 | 21.09.2024 | 8 நாட்கள் - தாமிரபரணி புண்யநதியில் மஹாளய பக்ஷம் - திருநெல்வேலி, திருப்புடைமருதூர், திருச்செந்தூர், தென்காசி, குற்றாலம், பாபநாசம், சங்கரன் கோவில், கழுகு மலை. |
| 7 | 27.09.2024 | 18 நாட்கள் - சார்தாம் யாத்திரை - டெல்லி, அக்ஷர்தாம், ஹரித்துவார், ரிஷிகேஷ் யமுனோத்திரி, கங்கோத்திரி, கேதார்நாத், பத்ரிநாத், தேவப்ரயாக், ஜோஷிமட். |
| 8 | 04.10.2024 | 14 நாட்கள் - இராஜஸ்தான் யாத்திரை - ஜெய்பூர், புஷ்கர், பிக்கானியர், ஜெய்சல்மீர், தார்பாலைவனம், ஜோத்பூர், மவுண்ட் அபு, உதய்பூர், ஸ்ரீநாத்துவாரகா **(A/c Bus)** |
| 9 | 23.10.2024 | 14 நாட்கள் - நிஜகங்கா ஸ்நான காசி யாத்திரை - உஜ்ஜெயினி- மகாகாளேஸ்வரர், சித்ரகூடம், அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், காசி, கயா **(A/c Bus)** |

ரானார்கள். வக்கீல் சோவுக்குப் பிறகு, சி.ஏ. குருமூர்த்தி மீது துக்ளக்கை நடத்தும் பொறுப்பு விழுந்தது. ஒப்பீடு போதுமா?

**சி.அண்ணாதுரை, விழுப்புரம்**

★ **கே:** ஃபாஸிஸம் என்றால் என்ன? ஃபாஸிஸ்ட் ஒருவரை உதாரணத்துடன் கூறவும்!




**ப:** ஏதாவது ஒன்றை அழிக்க வேண்டும் என்று பேசுவது ஃபாஸிஸம். உதாரணமாக, சனாதனத்தை அழிப்போம் என்று பேசுவது ஃபாஸிஸம். ஃபாஸிஸ்ட்களுக்கு சமீபத்திய உதாரணம், சனாதனத்தை அழிக்க வேண்டும் என்று பேசிய உதயநிதியும், ஆ.ராசாவும்.

**சொ.மிக்கேல் ராஜ், பணகுடி**

**கே:** ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை வைத்து, அண்ணாவால் எப்படிக் காலத்தை ஓட்ட முடிந்தது?

**ப:** ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது அண்ணாதுரையின் சித்தாந்தம் அல்ல. அதை எழுதியவர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சித்தரான திருமூலர். திருமந்திரம் செய்யுள் 2014-ன் தொடக்கமே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது (1). அது திருமூலர் சித்தாந்தம் என்று கூறாமல், தன்னுடைய சித்தாந்தம் போல் அண்ணாதுரை அதைப் பயன்படுத்தியது ஆச்சரியம்தான்.

**என்.நாகராஜன், வரகூர்**

**கே:** மல்லையாவிற்கு சம்பந்தமுள்ள நிறுவனத்தின் அணி (ஆர்.சி.பி.), ஐ.பி.எல்.லில் ஈடுபடுவது சரியா?

**ப:** ஆர்.சி.பி.யை வாங்கிய மல்லையா 2016-ல் வங்கிக் கடனைத் திருப்பித் தராததால், அது இப்போது யுனைடட் ஸ்பிரிட்ஸ் கம்பெனிக்குச் சொந்தம் (1). மல்லையா கையிலிருந்து போய்விட்ட அந்தக் கம்பெனிக்கும், அவருக்கும் சம்பந்தம் இல்லை.

[1]https://www.jagranjosh.com/general-knowledge/ipl-royal -challengers- bangalore-rcb-owner-16830494561

**எஸ்.மகாலட்சுமி சிவகுமார், கிச்சிப்பாளையம்**

**கே:** 'இந்தி கூட்டணியின் தத்துவத் தலைவராக ராஹுல் காந்தி உள்ளார். தமிழகத்தில் அதைத் தூக்கி நிறுத்தும் தலைவராக முதல்வர் ஸ்டாலின் செயல்படுகிறார்' என்கிறாரே தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் அழகிரி?

**ப:** இந்தி கூட்டணியைத் தமிழகத்தில் தூக்கி நிறுத்தும் தலைவர் ஸ்டாலின் என்றால், அது தமிழகத்தில் தரையில் விழுந்தா கிடந்தது?

**டாக்டர் சி.மோகன், சென்னை - 64**

**கே:** மக்கள் நீதி மையம் கட்சித் தலைவர் கமல்ஹாஸன் செலவில்லாமல், உழைக்காமல், ராஜ்ய சபா உறுப்பினர் ஆக வழி வகுத்துக் கொண்டார். சினிமா சினிமா என்றிருக்கும் இவர், தன் கட்சியின் மூலம் நாட்டுக்கு நல்லது செய்ய நினைக்க, தன்னைத் தவிர, தன் கட்சியில் வேறொருவரை ராஜ்ய சபா உறுப்பினர் பதவிக்கு பரிந்துரைப்பாரா?

**ப:** தொழிலுக்கு சினிமா, சேவைக்கு ராஜ்யசபை. இரண்டையும் தானே செய்யப்போகும் அவருக்கு எதற்கு வேறொருவர்?

**கி.ரவிக்குமார், நெய்வேலி**

**கே:** 'நாட்டுக்காக திருமாங்கல்யத்தை தியாகம் செய்தவர் என் தாயார்' என்று ப்ரியங்கா கூறியிருப்பது குறித்து?

**ப:** 2017-ல் 50 ஆண்டுகளுக்கு முன் நடந்த ராஜிவ்-சோனியா திருமண வீடியோவைத் தன் முகநூலில் பதிவிட்டிருந்தார் ப்ரியங்கா (1). அதன்படி, புரோகிதரைப் போல் இந்திரா தன் கையால் கொடுத்த மாலையை ராஜிவும்- சோனியாவும் மாற்றிக் கொண்டார்கள், மாங்கல்யம் கட்டவில்லை. எங்கிருந்து வந்தது திடீர் திருமாங்கல்யம்?

[1]https://www.facebook.com/gandhipriyanka/videos/sharing-a-very-old-video-of-the-wedding- ceremony-of-sri-rajeev-gandhi-with-sonia/10155269343518129/

**எஸ்.சுந்தரராஜன், மதுரை - 3**

**கே:** 'நாங்கள் மத்தியில் ஆட்சிக்கு வந்தால் சி.ஏ.ஏ. உள்பட மூன்று கிரிமினல் சட்டங்கள் வாபஸ் பெறப்படும்' என்றும், 'இடப் பற்றாக்குறையால் அது தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை' என்றும் ப.சிதம்பரம் கூறியிருக்கிறாரே?

**ப:** இந்தி கூட்டணியில் திரிணாமூல் காங்கிரஸின் தேர்தல் அறிக்கை 104 பக்கம்; தி.மு.க. தேர்தல் அறிக்கை 68 பக்கம்; பா.ஜ.க. தேர்தல் அறிக்கை 67 பக்கம். ஆனால் காங்கிரஸின் தேர்தல் அறிக்கை 48 பக்கம்தான். காங்கிரஸ் தேர்தல் அறிக்கைக் குழுவின் தலைவரான ப.சிதம்பரத்துக்கு, அதில் அரைப் பக்கம் கூட சேர்க்கும் அளவுக்கு செல்வாக்கு இல்லையா?

**கே.பிரசன்னா, பாபநாசம்**

● **கே:** '100 மோடி வந்தாலும் இந்திய ஜனநாயகத்தை அழிக்க முடியாது' என்கிறாரே கார்கே?

**ப:** 100 மோடி வந்தாலும் ஜனநாயகத்தை அழிக்க முடியாது என்றால், ஏன் மோடி தேர்வானால் ஜனநாயகம் அழிந்துவிடும் என்று கார்கேயும், காங்கிரஸும், அனைத்து இந்திக் கூட்டணிக் கட்சிகளும் புலம்புகின்றன? ●

# மத்திய அரசு வஞ்சிக்கிறதா?

மிக்ஜாம் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, நெல்லை, தென்காசி மாவட்டங்களுக்கு தமிழக அரசு, மத்திய அரசிடம் நிவாரண நிதி கேட்டிருக்கிறது. கடந்த டிசம்பர் 3,4, தேதிகளில் மிக்ஜாம் புயலால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. அதற்குப் பின் டிஸம்பர் 17, 18 தேதிகளில் பெய்த அசாதாரணமான கன மழையினால் தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, குமரி மாவட்டங்களின் பெரும் பகுதியும் வெள்ளச் சேதத்திற்கு உள்ளாயின. இந்தச் சேதங்களுக்காக மத்திய அரசிடம் நிதி கேட்பது தவறில்லை. தமிழக அரசு இந்த இழப்பு, சேதங்களுக்காக நிதி கேட்டது ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல. ஏறத்தாழ 38,000 கோடி ரூபாய் கேட்டது. எந்தெந்தச் சேதங்களுக்காக எவ்வளவு கோடி தேவை என்ற கணக்கையும் தமிழ்நாடு அரசு முன் வைத்தது.

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்களுக்காக ரூ.19,692.69 கோடி தேவை என்றது தமிழக அரசு. இதுபோல் தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஏற்பட்ட மழை, வெள்ளச் சேதங்களுக்காக ரூ.18,214.52 கோடி வேண்டும் என்றது. மொத்தத்தில் மத்திய அரசு ரூ.37,907.21 கோடி உதவ வேண்டும் என்று தமிழக அரசு கேட்டது.

உடனே மத்திய அரசு ஒரு ரூபாய் பாக்கியில்லாமல் ரூ.37,907.21 கோடியையும் தூக்கிக் கொடுத்து விடவில்லை. தான் கேட்ட நிதியைத் தரவில்லை என்றதும் தமிழக அரசு, மத்திய அரசு மீது உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. வழக்குப் போட்ட பிறகு மத்திய அரசு மிக்ஜாம் புயல் பாதிப்புகளுக்காக ரூ.285.54 கோடியும், தென்மாவட்டங்களின் மழை - வெள்ளப் பாதிப்புகளுக்காக ரூ.682.67 கோடியும் ஒதுக்கியது. மத்திய அரசு தர முன்வந்த மொத்த நிதி ரூ.968.21 கோடி. ஆனால், தமிழக அரசு கேட்டது ஏறத்தாழ 38.000 கோடி. கேட்ட முழு நிதியையும் மத்திய அரசு தரவில்லை என்றதும், தமிழக முதல்வர் ஸ்டாலின் 'மத்திய பா.ஜ.க. அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது' என்று கூறினார்.

தி.மு.கழகத் தலைவரான முதல்வர் ஸ்டாலின் இப்படிக் கூறியது ஆச்சரியமல்ல. மத்திய அரசுடன் மோதுவது என்பது அண்ணாதுரை காலத்திலிருந்தே தி.மு.கழகத்தால் அனுசரிக்கப்பட்டு வரும் கழகக் கொள்கைதான். இடையே காங்கிரஸூடன் கூட்டணி இருக்கும் காலங்களில் மட்டும் தி.மு.க.வும், அதன் தலைவர்களும் கொஞ்சம் அடக்கி வாசிப்பார்கள். மத்தியில் காங்கிரஸ் அரசு இருந்த காலத்தில், அது கூட்டணிக் கட்சியின் அரசு என்பதால், நீக்குப் போக்காக தி.மு.க. நடந்து கொண்டது. இப்போது மத்தியில் தங்களது எதிரிக்கட்சியான பா.ஜ.க. இருப்பதால், மத்திய அரசு எதிர்ப்பு, வசை புராணத்தை ஸ்டாலின் பாட ஆரம்பித்துள்ளார்.

மாநில அரசுகள் கேட்ட நிதியை அப்படியே மத்திய அரசு கொடுத்ததாக ஒரு காலத்திலும் நடந்ததில்லை. மத்திய அரசு பல்வேறு மாநிலங்களுக்கும் பேரிடர் நிதியுதவியைச் செய்ய வேண்டியதிருக்கிறது. அதுவும் தவிர தி.மு.க. அரசியலின்படி, அது மத்திய பா.ஜ.க. அரசுடன் ஒருபோதும் இணக்கமான போக்கைக் கடைப்பிடித்ததில்லை. தமிழ்நாட்டில் அரசியல் நடத்த வேண்டும் என்பதற்காக, காங்கிரஸூடன் கூட்டணி வைத்திருப்பதால், பொழுதெல்லாம் மத்திய அரசையும், பிரதமர் மோடியையும் தூற்றுவதையே தமிழக முதல்வர் தனது லட்சியமாக வரித்துக் கொண்டுள்ளார். இதுவும் நிதியின் அளவு குறைந்ததற்கு ஒரு காரணமாக இருக்கலாமோ என்னவோ? இது குறித்து தமிழக மாநில பா.ஜ.க. தலைமை எதுவும் கூறாமல் இருப்பது கவனிக்கத்தக்கது.


என்றாலும், தரப்பட்டுள்ள நிதியை ஊழல் இல்லாமல் முறையாகச் செலவழித்தாலே, அதன் பயன் மக்களைச் சென்று அடையும் என்பதில் சந்தேகமில்லை.



**– சந்திரன்**

# ஆந்திராவில் வெற்றி யார் பக்கம்?


ஜெகன் மோகன் ரெட்டி



சந்திரபாபு நாயுடு

இந்தியா முழுக்க மக்களவைத் தேர்தல் அனல் பறக்க நடந்து கொண்டிருக்கிறது. ஆந்திராவில் அந்த அனல் இரட்டிப்பாக இருக்கிறது என்றே கூறலாம். ஏனென்றால், அங்கு 25 மக்களவைத் தொகுதிகளுக்கு மட்டுமல்லாமல், 175 தொகுதிகளைக் கொண்ட மாநில சட்டமன்றத்திற்கும் சேர்த்து தேர்தல் நடக்கிறது.

ஜெகன் மோகன் ரெட்டியின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஒருபுறம்; சந்திரபாபு நாயுடுவின் தெலுகு தேசம், பா.ஜ.க., பவன் கல்யாணின் ஜனசேனா கட்சி ஆகியவை இணைந்த தேசிய ஜனநாயக கூட்டணி ஒருபுறம்; காங்கிரஸ்- இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்த இண்டி கூட்டணி ஒருபுறம் - என்று கடுமையான மும்முனைப் போட்டியைச் சந்திக்கிறது ஆந்திரா.

மக்களவைத் தேர்தலைப் பொருத்தளவில், தற்போது ஆட்சியிலிருக்கும் ஜெகன்மோகன் ரெட்டியின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி, சீலிங் ஃபேன் சின்னத்தில் 25 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தெலுகு தேசம் கட்சி, சைக்கிள் சின்னத்தில் 17 இடங்களிலும், பா.ஜ.க. தாமரை சின்னத்தில் ஆறு இடங்களிலும், ஜனசேனா கட்சி கண்ணாடி டம்ளர் சின்னத்தில் இரண்டு தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. இ.ந்.தி. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி 23 இடங்களிலும், சி.பி.ஐ. ஒரு இடத்திலும், சி.பி.ஐ.(எம்) ஒரு இடத்திலும் போட்டியிடுகின்றன.

சட்டமன்றத் தேர்தலைப் பொருத்தளவில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், மொத்தமுள்ள 175 இடங்களிலும் தனித்துப் போட்டியிடுகிறது. என்.டி.ஏ. கூட்டணியில் தெலுகு தேசம் 144 இடங்களிலும், ஜனசேனா கட்சி 21 இடங்களிலும், பா.ஜ.க. 10 இடங்களிலும் போட்டியிடுகின்றன. இ.ந்.தி. கூட்டணியில் காங்கிரஸ் 159 தொகுதிகளிலும், சி.பி.ஐ. மற்றும் சி.பி.ஐ.(எம்) கட்சிகள் தலா எட்டு தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.


பவன் கல்யாண்


ஒய்.எஸ்.ஷர்மிளா

2019 மக்களவைத் தேர்தலில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், தெலுகு தேசம், காங்கிரஸ், பா.ஜ.க., ஜனசேனா ஆகிய பிரதான கட்சிகள் அனைத்தும் தனித்து போட்டியிட்டன. அதில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் 49.88 சதவிகித வாக்குகளைப் பெற்று 22 தொகுதிகளைக் கைப்பற்றியது. தெலுகு தேசம் கட்சி 40.18 சதவிகித வாக்குகளைப் பெற்று மூன்று தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றது. ஜனசேனா கட்சி 5.87 சதவிகித வாக்குகளையும், காங்கிரஸ் கட்சி 1.3 சதவிகித வாக்குகளையும், பா.ஜ.க. 0.97 சதவிகித வாக்குகளையும் பெற்றன.

அப்போது நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் 49.95 சதவிகித வாக்குகளைப் பெற்று 151 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தெலுகு தேசம் கட்சி 39.17 சதவிகித வாக்குகளைப் பெற்று 23 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஜனசேனா 5.53 சதவிகித வாக்குகளைப் பெற்று ஒரே ஒரு தொகுதியில் வெற்றி பெற்றது. 174 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 1.17 சதவிகித வாக்குகளையும், 173 தொகுதிகளில் போட்டியிட்ட பா.ஜ.க. 0.84 சதவிகித வாக்குகளையும் மட்டுமே பெற்றன.

ஆந்திராவைப் பொருத்தளவில், தற்போது நடக்கும் தேர்தலில் மக்களவைத் தொகுதிகளை யார் அதிகம் கைப்பற்றுவார் என்பதை விட, ஆந்திராவில் யார் ஆட்சியைக் கைப்பற்றுவார் என்பது குறித்தான பேச்சுகளே பிரதானமாக இருக்கின்றன. மறைந்து போன ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன்மோகன் ரெட்டியை எதிர்த்து, ஜெகன்மோகன் ரெட்டியின்

தங்கையான ஒய்.எஸ்.ஷர்மிளா, ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக போர் தொடுக்கிறார். இன்னொரு பக்கம் என்.டி. ராமராவின் மாப்பிள்ளையான சந்திரபாபு நாயுடுவும், என்.டி.ஆரின் மகளும் பா.ஜ.க.வின் மாநிலத் தலைவருமான புரந்தேஸ்வரி, தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியின் தம்பியான நடிகர் பவன் கல்யாண் ஆகியோர் சேர்ந்து கூட்டணி அமைத்துள்ளனர்.



புரந்தேஸ்வரி

''ஆந்திராவில் ஜகன்மோகன் ரெட்டிக்கும், சந்திரபாபு நாயுடுக்கும் இடையேதான் போட்டி. காங்கிரஸ் மக்களவைத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் ஒரு ஸீட் கூட பெறாது' என்று பேசப்பட்டு வந்த நிலையில், ஒய்.எஸ்.ஆர். தெலுங்கானா என்ற கட்சியை நடத்தி வந்த ஷர்மிளா அதை கலைத்து விட்டு, காங்கிரஸில் இணைந்து உடனடியாக ஆந்திர மாநிலத் தலைவர் பதவியைப் பெற்றார். இதையடுத்து அண்ணன் ஜெகனுக்கு எதிராக தொடர் பிரசாரங்களைச் செய்து மீடியாவின் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆட்சியில், தான் கைது செய்யப்பட்ட விவகாரம், சட்டமன்றத்தில் அவமானப்படுத்தப்பட்ட விவகாரம் என்று பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்ததால் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற சவாலுடன், பா.ஜ.க. மற்றும் ஜனசேனா கட்சிகளுடன் பல்வேறு சமரசங்களுக்கிடையே கூட்டணி அமைத்திருக்கிறார் சந்திரபாபு நாயுடு. ஐந்து வருடங்களுக்கு முன்பு இழந்த ஆட்சியை மீண்டும் மீட்டே தீர்வது என்ற முடிவோடு, வேலையில்லா இளைஞர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் கருணைத்தொகை, பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம் என்று ஏராளமான இலவச வாக்குறுதிகளை அள்ளி வீசி பிரசாரம் செய்து வருகிறார் நாயுடு. இவர் தற்போது அமைத்துள்ள கூட்டணி பலமான கூட்டணியாகக் கருதப்படுகிறது.

ஜெகன்மோகன் ரெட்டியும் கையிலிருக்கும் ஆட்சியை இழந்து விடக்கூடாது என்ற முடிவோடு, ஏற்கனவே பல்வேறு நலத்திட்ட உதவிகளைக் கொண்டு வந்திருக்கிறார். இப்போது முதியோர் பென்ஷன் தொகை ரூ. 3,500 ஆக உயர்த்தப்படும் உள்ளிட்ட பல புது கவர்ச்சிகரமான வாக்குறுதிகளையும் வழங்கி வருகிறார்.



மே 13-ஆம் தேதி ஆந்திர வாக்காளர்கள் என்ன தீர்ப்பு எழுதப் போகிறார்கள் என்பது ஜூன் 4-ஆம் தேதி வெளிச்சத்திற்கு வரும்.

**–எஸ்.ஜே.இதயா**


# ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனைக் குறைத்து, மன வலிமையை தகர்த்து. நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்கியத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்னை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி - போன்ற தீமைகள், பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவற்றுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறைகளிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா.

**உடனே அணுக வேண்டிய முகவரி:**



## அருள் மறையகம்

1 - பி, மகாலட்சுமி அப்பார்ட்மென்ட்,
எண். 3, அப்துல் ரசாக் தெரு,
நூர்ஜஹான் தியேட்டர் எதிரில், ( புதுப்பெயர் ராஜ் தியேட்டர்)
சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
தொலைபேசி. 2435 1190, 2433 2047, செல்ஃபோன். 98404 - 11551.

**அலுவலக நேரம் - காலை 11.00 முதல் மாலை 7.00 வரை**

# உத்தரப் பிரதேசம் – அது பா.ஜ.க. பிரதேசம்!

**அ**ப்பாடா! காங்கிரஸ் கட்சி, உத்தரப் பிரதேசத்தில் அமேதி, ரே பரேலி தொகுதிகளில், வேட்பு மனு தாக்கல் செய்ய கடைசி நாள் வரை முடிவு செய்ய முடியாமல், ஒருவழியாக வேட்பாளர் பெயர்களை அறிவித்தது. நாட்டின் மற்ற பகுதிகளைப்போல உத்தரப் பிரதேசத்திலும் அபார வளர்ச்சி கண்டுள்ள பா.ஜ.க.வைக் கண்டு, நாட்டின் மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த காங்கிரஸ் அச்சப்படுகிறது. அது தன்னம்பிக்கையை இழந்து விட்டது.

ராஹுல் காந்தி, இரண்டு முறை வெற்றி தந்த அமேதியை கைகழுவி விட்டு, ரே பரேலிக்குச் செல்கிறார். ஸ்மிருதி இரானியைச் சந்திக்க அச்சம். ரே பரேலியில் வெற்றி பெற்ற சோனியா அதைக் கைவிட்டு விட்டு மேலவைக்கு - அதுவும் ராஜஸ்தானிலிருந்து தேர்வு பெற்று-சென்றுவிட்டதால், ராஹுல் அந்தத் தொகுதியைப் பிடித்துக் கொண்டார். சோனியா காந்தி குடும்பத்தில் சகோதர சகோதரிகளில், ப்ரியங்கா புத்திசாலி. இந்த வம்பே வேண்டாம் என்று ஒதுங்கிக்கொண்டார்.

இந்தத் தேர்தலில், பா.ஜ.க., 400 இடங்களிலாவது வெற்றி பெறுவோம் என்று சூளுரைத்திருக்கிறது. இது நிறைவேற வேண்டும் என்றால், உத்தரப் பிரதேசத்தில் அது பெருமளவு வெற்றி கண்டாக வேண்டும். கடந்த இரண்டு மக்களவைத் தேர்தல்களில், நாட்டின் மைய மாநிலமான உபி, அதற்குப் பெருமளவு கைகொடுத்திருக்கிறது. 2014-ல் அது 71 இடங்களையும் 2019-ல் 62 இடங்களையும் பெற்றது. இந்தத் தடவை, யோகி ஆதித்யநாத் தலைமையில், லோக் தல் (ஆர் .எல். டி.), எஸ். பி. எஸ். பி., அப்னா தல் ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கிறது.

எதிர்க் கூட்டணிக்கு, காங்கிரஸு டன் சேர்ந்து கொண்டு, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் தலைமை தாங்குகிறார். 2019-ல், சமாஜ்வாதியுடன் கூட்டுச் சேர்ந்த மாயாவதி தலைமையிலான பஹுஜன் சமாஜ் கட்சி, தனியாகப் போட்டியிடுகிறது.

இந்தச் சூழலில், பா.ஜ.க., தனது முந்தைய சாதனையை மிஞ்சப் போகிறதா, மிஞ்ச முடியுமா என்பதுதான் பலரது கேள்வி. தேர்தல் கருத்துக் கணிப்பாளர்களை, நம்புவதாக இருந்தால், பா.ஜ.க., இந்தத் தேர்தலில், மாபெரும் வெற்றி வரலாறு படைக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. பா.ஜ.க.வுக்குச் சாதகமான ஒரு அம்சம், அது, இரண்டு எஞ்சின்களைக்கொண்ட - வலிமை வாய்ந்த இரு தலைவர்கள், மத்தியில் பிரதமர் மோடியும், மாநிலத்தில் யோகி ஆதித்யநாத்தும் தலைமை தாங்கும் - ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது. அத்துடன், அதற்கு நன்கு வேரூன்றிய, மாநிலம் தழுவிய கட்சி அமைப்பு இருக்கிறது. இத்தகைய தொண்டர் அமைப்பைப் பொறுத்த வரையில், ஆட்சியிலுள்ள இடதுசாரிகள் மட்டுமே பெற்றிருக்கிறார்கள். அயோத்தியில் ராமர் கோயில் பா.ஜ.க. உறுதி கூறியபடி, தோன்றிய பிறகு, பா.ஜ.க.வின் பலம் இன்னும் அதிகரித்திருக்கிறது.

மத்தியில் 10 ஆண்டுகளும், மாநிலத்தில் 7 ஆண்டுகளும் தொடர்ந்து ஆட்சி புரிவதால் வழக்கமாக ஏற்படும் அலுப்பும் சலிப்பும் பா.ஜ.க.வை பாதிக்கக் கூடும் என்பது ஒரு சில அரசியல் நோக்கர்களின் பலவீனமான கருத்து. உத்தரப் பிரதேசத்திலும், ஜாதிவாரி அரசியல் கணக்குகள் இல்லாமலில்லை. பா.ஜ.க.வுக்கு சாதகமில்லாத, விரல் விட்டு எண்ணக்கூடிய, ஒரு சில இத்தகைய பகுதிகளும் அங்கு இருக்கத்தான் செய்கின்றன. . அத்தகைய இடங்களில் அதற்கு, சவால் இருக்கத்தான் செய்யும்.

பா.ஜ.க.வுக்கு எதிரான சமாஜ்வாதி, காங்கிரஸ் கூட்டணியை அப்படி ஒதுக்கிவிட முடியாது. ஆயினும் அவர்களது ஒரு பலவீனம், மாயாவதி கட்சி தனியாகப் போட்டியிடுவதுதான். இது மூன்றாவது அணியை உருவாக்கியிருக்கிறது. அத்துடன், இது பா.ஜ.க.வுத்தான் சாதகமாக இருக்கப் போகிறது. மாயாவதிக் கட்சியிலிருந்த பெருவாரியான தலித் வாக்காளர்கள், பா.ஜ.க.வில் இருக்கிறார்கள். அவரது வேட்பாளர்கள், பா.ஜ.க.வுக்குச் சாதகமாக வாக்குகளைப் பிளவுபடுத்துவார்கள். நான்கு முறை முதல்வராக, அரசியல் மலை போல வலம் வந்த மாயாவதியின் கட்சி, , இப்போது எலி போல இளைத்துப் போய்விட்டது. அதே போலத்தான் காங்கிரஸின் நிலைமையும். 28 ஆண்டு அங்கு ஆட்சி செய்துள்ள காங்கிரஸ், இன்று வலுவிழந்து, நோஞ்சான் கட்சியாகச் சுருங்கி, சமாஜ்வாதியின் துணைக்கட்சியாக சிறுத்துவிட்டது. இதுதான் அரசியல்.

உத்தரப் பிரதேசத்தில், யோகி ஆட்சியின் மகிமைதான் இதற்குக் காரணம். சட்டம் ஒழுங்கில், படுகண்டிப்பாக இருக்கிறார். பொருளாதாரம் நம்ப முடியாத அளவுக்கு மேம்பட்டிருக்கிறது. உண்மைதான், இன்னும் வளர்ச்சி பெற வேண்டிய பகுதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, உத்தரப் பிரதேசம் அடையாளம் தெரியாத அளவுக்கு மேம்பட்டிருக்கிறது, மாறியிருக்கிறது. ஆக, அங்கு, ஓரிரண்டு தொகுதி தவிர எஞ்சியவற்றில் பா.ஜ.க. வாகை சூடி, மத்தியில் மாபெரும் பெரும்பான்மைக்கு வழி வகுக்கும் என்பது திண்ணம்



**– ஹெச். ராமகிருஷ்ணன்**

# அரசு பஸ்களின் நிலை

அரசு பஸ்களில் பயணம் என்றாலே கொஞ்சம் பார்த்துதான் போக வேண்டியுள்ளது. 24.4.24 அன்று பிற்பகல் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் to கே.கே.நகர் பஸ் சாலையில் சென்று கொண்டிருந்தபோது, பஸ் கண்டக்டர் சீட், கண்டக்டருடன் சாலையில் விழுந்தது. கண்டக்டர் முருகேசன் லேசான காயத்துடன் உயிர் தப்பினார். இந்த சம்பவம் அரசு போக்குவரத்துக் கழக



சீட் கழன்று விழுந்த பஸ்...

தொழிலாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. உடனடியாக தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா தலைமையில், போக்குவரத்துக் கழக அதிகாரிகள் பங்கு கொண்ட அவசர கூட்டம் நடந்தது. பழுதடைந்த, பழுதாகியுள்ள பேருந்துகளின் விபரங்களை திரட்டவும், அதனைச் சரி செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவுக்குப் பின் பஸ் பயணம் முடித்து டெப்போ சென்றவுடன் டிரைவர், கண்டர்களிடம் 'சீட் ஆடுதா?' 'அதற்கான சத்தம் கேட்கிறதா' என கேள்விகள் கேட்டு நடவடிக்கை எடுக்கின்றனர். சமூக ஊடகங்களில் அரசு பஸ்களில் காணப்படும் குறைகள் அவ்வப்போது வெளியாகி வருகிறது.

பஸ்ஸின் பின்புறம் இரண்டு டயர்கள் இருக்கும். ஆனால் அண்மையில் திருப்பூர் to பொள்ளாச்சி சென்ற அரசுப் பேருந்து, ஒரு டயருடன் பயணம் மேற்கொண்டது. அது போல சென்னையில் பெருநகரப் போக்குவரத்துக் கழக பேருந்தில் பயணித்த பெண் பயணி ஒருவர், பஸ்ஸின் கீழ்தளத்தில் ஓட்டை ஏற்பட்டதால், சாலையில் விழுந்தார்.



பின்சக்கரம் ஒரு டயரில் ஓடும் பஸ்...

நல்லவேளை உயிர் தப்பினார். அந்தப் பெண்ணுக்கு சிறிய கீறல்கள் ஏற்பட்டன. வள்ளலார் நகரில் இருந்து திருவேற்காடு செல்லும் அரசுப் பேருந்து (எண் - 59) அமிஞ்சிக்கரை அருகே வந்து கொண்டிருந்த போது இந்த சம்பவம் நடந்தது. 'தற்போது தமிழகத்தில் இயங்கி வரும் அரசுப் பேருந்துகளில், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் காலாவதியாகி உள்ளன' என்று தொழிற்சங்க நிர்வாகிகள் கூறுகின்றனர்.

இது சம்பந்தமாக அவர்கள் கூறியது: ''நிறைய பஸ்களில் டோர் ஒழுங்கா ஒர்க் ஆவதில்லை. அதைச் சரி செய்வதும் இல்லை. திருச்சியில் கண்டக்டர் சீட்டுடன் பெயர்ந்து விழுந்த சமயத்தில் டோர் ஒர்க் ஆகி மூடியிருந்தால் அவர் சாலையில் கீழே விழுந்திருக்க மாட்டார். பஸ்களை பராமரிக்கத் தேவையான பணியாளர்கள் இல்லை. அரசு பஸ்கள் விபத்து ஏற்படாமல் தடுக்க பணியாளர்கள், உதிரி பாகங்கள் பற்றாக்குறையைப் போக்க வேண்டும். தற்போது தமிழகத்தில் காணப்படும் அரசு பஸ்களின் அவலநிலைக்கு, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியே காரணம். இது சம்பந்தமான குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின், அப்போது எதிர்க்கட்சியில் இருந்தபோது எடுத்துக் கூறியிருந்தார்.

''பொதுவாக அரசுப் பேருந்துகள் குறிப்பிட்ட அளவு மட்டுமே ஓட்ட வேண்டும். ஒரு பஸ் ஏழு லட்சம் கிலோ மீட்டர் ஓடினால், அந்த பஸ் கண்டம் ஆனதாக கருதப்படும். இதை ஏலம் விடுவார்கள். அல்லது ஒரு பஸ் ஏழு வருடம் ஓடினால் அது கண்டம் ஆனதாகக் கருத வேண்டும். ஏழு லட்சம் கிலோ மீட்டர் அல்லது ஏழு வருடம் எது முன்பாக வருகிறதோ அது கணக்கிடப்படும். ஆனால் இந்த விதிகள் எல்லாம் மீறப்பட்டு ஒரு பஸ் 15 வருடமாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதை மாற்றிய பெருமை அமைச்சராக இருந்த செந்தில்பாலாஜியையே சாரும்.

''ஏழு லட்சம் கிலோ மீட்டர் ஓடிய பஸ்ஸை திரும்ப ஒரு பாடி கட்டி, லைனில் விட்டவர் செந்தில் பாலாஜி. கண்டம் ஆன பஸ்ஸை ஏலம் எடுப்பவர்களும் இதைத்தான் செய்யப் போகிறார்கள். இதை நாமே (தமிழக அரசே) செய்வோமே என்று செய்தவர் செந்தில்பாலாஜி. இதன் பலனை போக்குவரத்துக் கழகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

''3500 புதிய பஸ்களுக்கு ஆர்டர் கொடுத்திருப்பதாக சொல்கிறார்கள். அது எப்போது மக்கள் பயன்பாட்டுக்கு வரும் எனத் தெரியவில்லை. இதற்கிடையில் அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் பிரச்னைகள் குறித்துஇ தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டு கொள்ளவில்லை. ஆனால் தற்போது கலைஞர் முதல்வராக இருந்திருந்தால், இந்நேரம் எங்கள் பிரச்னையைத் தீர்த்திருப்பார். தொழிலாளர்களின் கஷ்டம் கலைஞருக்குத் தெரியும். பணியாளர்கள் பிரச்னை, உதிரி பாகங்கள் பிரச்னை இவற்றுக்கு அரசு தீர்வு காண வேண்டும்'' என்றனர்.

அரசு பஸ்கள் விதிகளை மீறி நீண்ட காலம் இயக்கப்படுவதால், இரும்புகள் துருப்பிடித்து மக்கிப் போய் உடையும் நிலையில் உள்ளது. ஓட்டை உடைசலுமாக அரசுப் பேருந்துகள் வலம் வருகின்றன. பயணம் செய்பவர்கள், கவனமாகப் பயணிப்பது நல்லது.



**– எஸ்.பி.சண்முகம்**

ஜன்னல் வழியே:

# இ – பாஸ் எதற்கு?

நீலகிரி, கொடைக்கானல் ஆகிய ஊர்களுக்குச் செல்லும் வாகனங்கள் இ- பாஸ் வாங்க வேண்டும் என்ற உத்திரவை உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. இந்த உத்திரவினால் யாருக்கு என்ன நன்மை என்று தெரியவில்லை. நீலகிரி, கொடைக்கானலுக்குள் தினசரி ஆயிரக்கணக்கான கார்கள், டெம்போ, லாரிகள், டூவீலர்கள் எல்லாம் தான் செல்கின்றன. கார்களிலும், டூ வீலர்களிலும் செல்கிறவர்கள் சுட்டெரிக்கும் கோடை வெயிலுக்குத் தப்ப நீலகிரிக்கும், கொடைக்கானலுக்கும் செல்கிறார்கள். டெம்போக்களும், லாரிகளும் அந்த ஊர்களின் அன்றாடத் தேவைகளுக்கான பல சரக்கு, காய்கறி, மருந்து, இதர வாகன - மின்சார உபகரணப் பொருட்கள் முதலானவற்றையும் இந்த நகரங்களுக்குக் கொண்டு செல்கின்றன. இது காலங்காலமாக நடந்து வருகிறது.

நீலகிரி என்றால் ஊட்டி என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். ஊட்டிக்கும், கொடைக்கானலுக்கும் கோடை காலத்தில் தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் வாழும் மக்களும், பிற மாநிலங்களைச் சேர்ந்த மக்களும் வாட்டி எடுக்கும் வெயிலிலிருந்து தப்ப, இந்த ஊர்களைத் தஞ்சம் அடைவது ஒன்றும் புதிதல்ல. இதுவரை இந்த ஊர்களுக்குச் செல்பவர்களுக்கு இ- பாஸ் என்ற புதிய அனுமதிச் சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டதே இல்லை. இப்போது எதற்காக இ-பாஸ் என்று தெரியவில்லை. எத்தனை வாகனங்கள் இந்த இரண்டு ஊர்களுக்கும் செல்கின்றன என்பதைக் கணக்கெடுத்து ஆகப் போவது என்ன? வாகனங்களின் எண்ணிக்கையை விட செல்லும் மக்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கும். இந்தக் கணக்கு, அல்லது டேட்டாக்களை வைத்து உயர் நீதிமன்றமோ, அரசோ என்ன செய்யப் போகிறது?

அட்வகேட் ஜெனரல் பி.எஸ். ராமன் இது சம்பந்தமாக விசித்திரமான தகவல் ஒன்றைக் கூறியிருக்கிறார். அதாவது 'இந்த இ-பாஸ்களினால் பெங்களூர் ஐ.ஐ.எம். இன்ஸ்டிட்டியூட் பேராசிரியர் அமர் சுப்ராவுக்கும், சென்னை ஐ.ஐ.டி. பேராசிரியரான சச்சின் குன்டேவுக்கும் உதவியாக இருக்கும்' என்று அட்வகேட் ஜெனரல் கூறியதாகச் செய்தி வெளியாகி இருக்கிறது. அதாவது, இந்த இரு பேராசிரியர்களும் வனப் பாதைகளின் தகுதியை நிர்ணயிக்கும் ஆய்வில் ஈடுபட்டிருக்கிறார்களாம். இந்த இரண்டு பேராசிரியர்களின் ஆய்வுகளுக்காக ஊட்டி, கொடைக்கானலுக்குச் செல்லும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை 'இ-பாஸ் வாங்கு' என்று கட்டாயப்படுத்துவது என்ன நியாயம்? இந்த இரண்டு பேராசிரியர்களுக்கு ஆதரவாக உயர் நீதிமன்றம் கூட ஊட்டி, கொடைக்கானல் செல்லும் வாகன ஓட்டிகளைத் துன்புறுத்துகிறதே என்பதை நினைத்தால் ஆச்சரியமும், வேதனையுமே ஏற்படுகிறது.

திருப்பதி கூடத்தான் மலைப் பகுதியில் அமைந்திருக்கிறது. லட்சக்கணக்கான பக்தர்கள் தினசரி திருப்பதி செல்கிறார்கள். 'அங்குள்ள வனப்பாதைகளின் தகுதியை ஆய்வு செய்ய தகவல்களைச் சேகரிக்கிறோம்' என்று சொல்லிக் கொண்டு, 'இ-பாஸ் வாங்கு என்று அந்த பக்தர்களையும் நீதிமன்றம் நிர்பந்திக்குமா? ஜூன், ஜூலை மாதங்களில் குற்றாலத்துக்கு குளிப்பதற்காக ஆயிரக்கணக்கானவர்களை ஏற்றிக் கொண்டு வாகனங்கள் செல்லத்தான் செய்கின்றன. அவர்களும் இ-பாஸ் வாங்க நிர்பந்திக்கப்படுவார்களா?

இப்போதெல்லாம் ஊட்டி, கொடைக்கானலில் கூட்டம் அதிகமாக இருக்கிறதென்று கோத்தகிரி, மூணாறு, வால்பாறை போன்ற மலை நகரங்களுக்கும் ஏராளமானோர் வாகனங்களில் செல்கிறார்கள். இவர்கள் இ-பாஸ் வாங்கத் தேவையில்லையா? இந்த இ-பாஸ் ஊட்டியையும், கொடைக்கானலையும் மட்டுமே குறி வைத்து உத்திரவிடப்பட்டிருந்தால் அது பாரபட்சமான உத்திரவே. எவ்வளவோ மலைவாசஸ்தலங்கள் இருக்கும்போது, அங்கெல்லாம் அமல் செய்யப்படாத இ- பாஸ், இந்த இரண்டு நகரங்களில் மட்டும் அமல்படுத்தப்படுவானேன் என்ற கேள்விக்கு நீதிமன்றமும், அரசும் பதில் கூறியே ஆக வேண்டும். ●

– துர்வாசர்

**எங்கே செல்கிறது என் தமிழகம்?' என்ற இந்த தொடர் வழியாக உங்கள் அனைவரையும் வந்தடைய வழி செய்து கொடுத்த துக்ளக்கிற்கு நன்றி.**

# எங்கே செல்கிறது என் தமிழகம்?

**– மாரிதாஸ்**

பொதுவாக என்ன கேள்வி அல்லது கருத்து இங்கே சமீப காலமாக உருவாக்கப்படுகிறது என்றால், ''தமிழகம் வேறு எந்த மாநிலத்தையும் விட - மிக முக்கிய மாக வட மாநிலங்களின் நிலையை விட - சிறப்பானதாக உள்ளது. அதற்கு கடந்த 50 ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் திராவிட இயக்க ஆட்சியாளர்களின் திறமை யும், தொலைநோக்கும்தான் காரணம்'' என்பதாகும். குறிப்பாக, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் கூட இப்படி ஒரு வளர்ச்சி இல்லை என்று இங்கே சிலர் ஒரு மாய பிம் பத்தைக் கட்டமைக்க முயற்சிக் கிறார்கள். இதை மையமாக வைத்தே இந்த ஆய்வு கட்டுரையை நான் தொடங்க விரும்புகிறேன்... அது ஏன்?

எளிமையாகக் கூற வேண்டும் என்றால், '90 மதிப்பெண் எடுத்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை 70 மதிப்பெண் எடுக்கும் நிலைக்கு தள்ளி விட்டு, அவனை எப்போதும் 60 மதிப்பெண் எடுத்த மாணவனோடு ஒப்பிட்டுக் காட்டி, 'பாருங்கள் அவனை விட இவன் 10 மதிப்பெண் அதிகம் எடுத்திருக்கிறான். காரணம், எங்கள் ஆசிரியர் திறன்' என்று சொன்னால் எப்படி இருக்கும்? அப்படியானதுதான் தமிழகத்தை, வட மாநிலங்களோடு - முக்கியமாக பிஹார், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களோடு ஒப்பிடுவது. இதை முழுமையாகப் புரிய வைப்பதோடு, எப்படி இருக்க வேண்டிய தமிழகத்தை, திராவிட ஆட்சியாளர்களின் மோசமான அரசியல் எப்படி ஆக்கி வைத்துள் ளது என்பது குறித்து, உரிய ஆதாரங்களுடன் மக்களுக்கு இந் தத் தொடர் வழியே புரிதல் ஏற்படுத்த விரும்புகிறேன்.

வழக்கமான இரு திராவிடக் கட்சி களுக்கு எதிரான, ஆட்சியர்களுக்கு எதிரான அரசியல் கருத்தாக இதனை எடுத்துச் செல்லவோ, பிரசாரமாக எடுத்துச் செல்வதையோ நான் விரும்பவில்லை. அதனைத் தாண்டி இங்கே இருதுருவ அரசியலின் தீவிரத்தால் தமிழகம் என்ன இழந் தது? அதில் என்ன பாடம் நாம் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது? அதிலிருந்து எதிர்வரும் காலங் களின் அரசியலை தன் கையில் எடுக்கக் காத்திருக்கும் அரசியல் ஆர்வமுள்ள இளைஞர்கள், கட்டாயம் என்ன அறிந்து கொள்ள வேண்டும் - என்பதை துறை வாரியாக ஆய்வு செய்வதையே இந்தத் தொடரின் நோக்கமாக்க நான் விரும்புகிறேன்.



ஒரு ஆரோக்கியமான அரசியல் மாற்றம், மக்கள் மூலம் நிகழ வேண் டும் என்பதே ஒரு குடிமகனாக என்னுடைய விருப்பம்!

இங்கே தேர்தல் வரும் சமயங் களில் நான் காண்பது 5 விதமான வாக்காளர்களை!

1. நாங்கள் இந்த கட்சிக்குதான் பாரம்பரியமாக ஓட்டுப் போடுவோம்! - இது கட்சிகளின் பாரம்பரிய வாக்கு சதவிகிதம்.

2. என் ஜாதி - என் மதம் - என் இனம் என்ற அடிப்படையில் ஓட்டுப் போடும் குடிமகன்கள்- பிரிவுகள் அடிப்படையிலான வாக்கு பலம்.

3. எனக்கு என்ன லாபம்! யார் அதற்கு திட்டம் வைத்துள்ளனர் - அவர்களுக்கு என் ஓட்டு!

- இது அரசு ஊழியர்கள் ஆரம் பித்து, ஒவ்வொரு தனி மனிதனும் லாப கணக்கு போடும் வாக்காளர் கள் சதவிகிதம்.

4. என் தலைவர் இவர்தான் - நான் அவரை நம்புகிறேன் என்று ஒற்றைத் தலைமை மீது நம்பிக்கை வைக்கும் குடிமகன்கள்.

-சினிமா நடிகர்கள் ஆரம்பித்து அந்த அந்த வட்டாரத்தில் இருக்கும் வலுவான தலைவர்கள் வரை, தனி ஒருவர் மீது கொண்ட நம்பிக்கைக்கு விழும் வாக்கு.

5. காசு, சாராயம் என பிற அற்ப விஷயங்களுக்குக் கடைசியாக விழும் வாக்காளர்கள்... - எவன் எக்கேடு கெட்டு போனால் எனக் கென்ன - 3 நாள் நல்ல சாராயமும், கை நீட்டி வாங்கின காசுக்கும் ஓட்டுப் போடுவோம் என்ற வகையினர்.

இந்த 5 வகைகளையும் நன்கு தெரிந்து, அவற்றை எப்படி கையாள வேண்டும் என்ற அளவில் மட்டுமே சிந்தித்து, அதற்கான அரசியலை எதிரும் புதிருமாக, போட்டி போட்டுக் கொண்டு செய் யும் இரு திராவிட கட்சிகள் மட்டும் அல்ல - அவர்களிடம் காசு வாங்கவும், சீட்டு வாங்கவும் அலையும் ஜாதிக் கட்சிகளில் ஆரம்பித்து இனவாதம், மொழி வாதம், மதவாதக் குழுக்கள் வரை

தீவிரமாக இயங்கியதன் விளைவு, மொத்த அரசியலும் 'குறுக்கு புத்தி கொண்ட மனிதர்கள் வாழும்' இடமாக மாறிப்போனது...

இது உருவாக்கிய மோசமான விளைவை எளிதாகச் சொன்னால், 'காசு இருப்பவன் மேலும் மேலும் வசதியாகிறான் - இல்லாதவன் அரசு வேலைக்காக அலைகிறான் - அதுவும் இல்லாதவன் ஏதோ ஒரு வேலை கிடைத்ததும் ஒரு கல்யாணம் முடித்து வாழ்க்கையை போராடி முடித்துக் கொள்ள வேண்டும்'. இங்கே உங்கள் திறமைக்கோ, அறிவிற்கோ, உழைப்பிற்கோ அங்கீகாரம் கொடுக்கும் சமூகமாகவும் இது இல்லை; அதனை உறுதி செய்யும் அரசாகவும் இது இல்லாமல் போனதற்கு முழுக் காரணம், மேலே சொன்ன அரசியல் உருவாக்கியுள்ள மோசமான விளைவு.

உங்களுக்கு உடனடியாகத் தோன்றுவது குறைகளை மட்டும்தான் நான் சொல்லப் போகிறேன் என்பது. நிச்சயம் இல்லை - இந்தத் தொடரில் தமிழகம் முழுவதுக்குமான ஆய்வுகளோடு நிரந்தரத் தீர்வு அல்லது நீண்ட காலத் தீர்வுக்கான தேடலோடு குறைகளை அணுக விரும்புகிறேன். ஆகவே இது வழக்கமாக திராவிடக் கட்சிகள் செய்வதைப் போல, ஒருவரை ஒருவர் குறை சொல்லும் அரசியல் விமர்சனமாக இருக்காது. ஆட்சியர்களால் உருவாக்கப்பட்ட பிரச்னைகளுக்கே தீர்வு தேடும் விதமான தொடராக இருக்கும். குறை சொல்வது மட்டும் அல்ல; தீர்வையும் தேடியே செல்லும் இந்தத் தொடர்.

நான் என் போக்கில் மட்டுமே இதை எடுத்துக் கொண்டு செல்ல விரும்பவில்லை. வாசகர்களையும் இணைத்துக் கொண்டு செல்ல விரும்புகிறேன். ஆக, தமிழகம் சார்ந்து உங்கள் கேள்விகளையும் நிச்சயம் எழுப்பலாம். அது கூடுமானவரை தமிழகம் சார்ந்து, தற்காலத்தில் எழும் உங்கள் சந்தேகத்தின் அடிப்படையில் இருப்பது கூடுதல் நலம்.

முழுமையாக தற்கால பிரச்னைகளை விரிவாக அலசி, உரிய ஆதாரத்தோடு இந்தத் தொடர் மூலம் உங்களோடு பல செய்திகளைப் பகிர்ந்து கொள்ள எண்ணுகிறேன்.

அடுத்த வாரம் முதல் சேர்ந்து பயணிப்போம்... ●

# புத்தக விமர்சனம்


**நூல்: தமிழரின் சமயச் சடங்குகள். ஆசிரியர்: முனைவர் ப.பாலசுப்பிரமணியன். பக்கம்: 184. விலை: ரூ.200/-. வெளியீடு: அழகு பதிப்பகம், 15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி, 2-ஆவது தெரு, ராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 600049. ஃபோன்: 044-26502086.**

சடங்கு என்பது சமயம் அல்லது மரபு வழியாக உருவானதாகும். குறிப்பாக - ஆதி காலத்தில் வாழ்ந்த தமிழர்கள், பெருவெள்ளம், புயல், நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்து தப்பிக்கவும், கொடிய விலங்குகளிடமிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும், தங்களுக்கு ஒரு மிகப் பெரிய சக்தி ஒன்று மறைமுகமாக உதவுகிறது என்று உணர ஆரம்பித்தனர். அதனை வழிபடுவதன் மூலம் இதுபோன்ற ஆபத்துகளில் இருந்து தப்பிக்கலாம் என்று அவர்கள் நம்பியபோதுதான் மந்திரங்கள், சடங்குகள் போன்றவை தோன்றின என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். எனவே பாரம்பரியமாக கடைப்பிடித்து வரும் தமிழர்களின் சமயச் சடங்குகளின் உள்ளார்ந்த அர்த்தங்களை இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்நூலை இயற்றியுள்ளார் ஆசிரியர். அந்தவகையில் இந்நூலில், சடங்குகள் எப்படி தோன்றின என்பது முதல் சிலம்புகழி நோன்பு, திருமணம், பெண் பார்த்தல், பரிசம் போடுதல், தாய்மாமன் சடங்கு, கன்னிகாதானம், அம்மி மிதித்தல், நலங்கிடல், வளைக்காப்பு, குழந்தை பிறந்த சடங்கு, பெயர் சூட்டுதல், காது குத்துதல், பூப்புனித நீராட்டு விழா... என்று 38 அத்தியாயங்களில் அவை குறித்த விபரங்களை விரிவாகக் கூறியுள்ளதோடு, அதற்கான சில எடுத்துக்காட்டுகளை சங்க இலக்கிய பாடல்களில் இருந்து ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளதும் சிறப்பானது.




**நூல்: தகிப்பு - சிறுகதைத் தொகுப்பு. ஆசிரியர்: பா.ஆசைத்தம்பி. பக்கம்: 152. விலை: ரூ.180/-. வெளியீடு: வசந்தா பிரசுரம், 15, ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600033. தொலைபேசி: 044-24742227. கைபேசி: 9094875747.**

இந்நூலாசிரியரின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு இது. இதில் 12 சிறுகதைகள் உள்ளன. கடந்த இரண்டு தொகுப்புகளிலுமே இவரது சிறுகதைகள், ஒவ்வொரு வீட்டிலும் நடக்கின்ற இன்ப - துன்ப நிகழ்வுகளைப் பற்றி விளக்குகின்றன. 12 சிறுகதைகளைக் கொண்ட இந்நூலில் உள்ள சில கதைகள் புராணப் பின்னணியிலும், வரலாற்றுப் பின்னணியிலும் புனையப்பட்டது. அந்த வகையில் இந்நூலில் உள்ள 'தகிப்பு' என்ற சிறுகதை மகாபாரதப் போரைப் பற்றிய ஒரு நிகழ்வை விவரிக்கிறது. அதாவது பாண்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறி 12 ஆண்டுகள் காட்டில் அலைந்தபோது, அர்ச்சுனனுக்கும், நாக உலகைச் சார்ந்த உலூபிக்கும் பிறந்த மகன்தான் 'அரவான்'. அவன் பிறந்தது முதல் தன் தந்தை அர்ச்சுனனை பார்த்ததே இல்லை. அதனால் தனது தந்தையைக் காணும் ஆவல் அதிகரிக்கிறது. இந்நிலையில் மகாபாரதப் போர் நடக்கப் போவதை அறிந்து, அங்கு சென்று தன் தந்தையைக் காணத் துடிக்கிறான் அரவான். அதை அவனது தாய், 'நேரம் சரியில்லை போக வேண்டாம்' என்று தடுக்கிறாள். அதை மீறி அரவான் போர் நடக்கும் இடத்திற்குச் சென்று தன் தந்தையைக் காண்கிறான். அப்போது அவனுக்கு அங்கு நிகழ்ந்த பெரும் சோகத்தையும், மகாபாரதப் போரின் பல நிகழ்வுகளையும் இக்கதை விவரிக்கிறது. படிப்பவர்கள் மனதை இக்கதை நெகிழச் செய்கிறது. இப்படி இந்நூலிலுள்ள ஒவ்வொரு கதையும் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது.






**– பரக்கத்**

# மாசுபடும் அதிகாரம்

மாசுகள் மிகுந்த உலகத்தில் வாழ்கிறோம். அனைத்து மாசுகளிலும் மோசமானது அதிகார மாசு!

அதிகாரிகளுக்கு இருக்கும் அதிகாரத்தை, அரசியல்வாதிகள் மாசுபடுத்தி வருகிறார்கள். மக்கள் இதைக் கண்டுகொள்வதில்லை, நேரடி பாதிப்புகள் இல்லையென்பதால். இந்த விபரீதமான அதிகார மாசு பொதுவழியில் பேசு பொருளாவதில்லை. இது பொதுமக்களின் கண்டனத்திற்கோ, நீதிமன்றத் தீர்ப்புக்கோ சென்றதில்லை. எனினும் எதிர்காலத்தை இருள் மயமாக்கும் போக்கு இது.

சமீபத்தில் மத்திய அமலாக்கத் துறை, தமிழ்நாட்டின் 5 மாவட்ட கலெக்டர்களை, மணல் கொள்ளை தொடர்பாக விசாரணைக்கு அழைத்தது. அவர்கள் பிறர் கொள்ளையடிக்க விதிகளை வளைத்து இருக்கிறார்கள் என்பதே குற்றச்சாட்டு. நிர்பந்திக்கப்பட்டால் அதற்கு ஆட்பட வேண்டுமா? வாய்மொழி உத்தரவு செல்லாது, எழுத்துபூர்வமாக உத்தரவு வேண்டுமென்று ஏன் கேட்கவில்லை? இவ்வளவுதான் மணல் அள்ளலாம், இதற்கு மேல் அள்ளினால் வருவாய்த் துறை, காவல்துறை மூலம் கண்காணித்து மணல் கொள்ளையைத் தடுப்போம். அதில் ஏதும் சிக்கல் வந்தால், வழக்குத் தொடுப்போம் என்று எந்த கலெக்டரும் சொன்னதாகத் தெரியவில்லையே ஏன்? இதன் பொருள் என்ன? பொருளேதான் பொருளோ? இ.ஆ.ப. என்பது இந்திய ஆட்சிப் பணியா? அல்லது இந்திய ஆமாம் சாமி பணியா?

'மாவட்டத்தின் நலனை, மக்களின் நலனைக் காக்கவே நான் இங்கு பணி செய்கிறேன்; விதி மீறி யாருக்கும் சகாயம் செய்ய மாட்டேன்' என்று துணிவுடன் ஏன் கலெக்டர்கள் சொல்லவில்லை?

விசாரணையில் கலெக்டர்கள் என்ன சொன்னார்கள் என்பதை எல்லாம் விட்டு விடுவோம். நம்முடைய ஒரே கேள்வி கலெக்டர் என்பவர் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு, மக்கள் நலனைக் காக்க வேண்டுமா? அல்லது அதிகாரத்தை விலக்கி வைத்து, மந்திரிகளுக்குத் தலையாட்ட வேண்டுமா? அமலாக்கத் துறை கேட்கா விட்டாலும், மக்கள் இதைக் கேட்கிறார்கள் அவர்களுக்கு என்ன பதில்?

மந்திரிகளோ அவர்களைச் சேர்ந்தவர்களோ வற்புறுத்தியதால் இதைச் செய்தேன் என்று சொல்லுபவர்களுக்கு, அரசாங்க அதிகாரி என்ற முறையில் என்ன தகுதியிருக்கிறது? ஒருவிதத்தில் பார்த்தால் இந்தக் கேள்வியைக் கேட்டுப் பயனில்லை.

விதி மீறலுக்கு ஒரு கலெக்டர் ஒப்புக்கொள்ளாவிட்டால், அந்த கலெக்டர் மாற்றப்படுகிறார். அவர் இடத்திற்கு வரும் மற்றவர் விதி மீறலுக்கு இணங்குகிறார். எல்லாத் துறைகளிலும் அதிகாரிகள், தாங்கள் சட்டத்தின் காவலர்கள் என்றும், சட்டத்தை மீற மாட்டோம் என்றும், மிரட்டலுக்கோ பணத்துக்கோ ஆட்பட மாட்டோம் என்று சொல்லியிருந்தால், மணல் கொள்ளையும் மற்ற கொள்ளைகளும் இந்தளவுக்கு வந்திருக்காதே. அதிகாரிகளிடம் தேவைப்படுவது நேர்மையில் ஒற்றுமை.

அனைத்து அதிகாரிகளும் நேர்மையாளர்களாக இருந்தால், இந்த தேசத்தில் ஆட்சியாளரின் பினாமிகள் ஒடுக்கப்படுவார்கள். ஆனால் ஐ.ஏ.எஸ். ஆட்சி அதிகாரம், ஐந்து வருட தேர்தல் குத்தகைக்காரர்களின் அதிகாரத்திற்குப் பணிந்தால் தேசத்திற்கு விமோசனம் இல்லை.

சடையைப் பிடித்து இழுத்தால், சன்னியாசி கூடவே வருவான் என்பது அமலாக்கத்துறையின் எதிர்பார்ப்பு. கலெக்டர் சடை என்றால் சன்னியாசி யார் என்பது புரியாதோ?

எப்படியிருந்தாலும் அசல் குற்றவாளிகளிகள் தப்பிக்கக் கூடும். யார் பிடிபட்டாலும் கொள்ளை போனது போனதுதானே! மணலோ பணமோ, அதைவிடப் பெரிய நஷ்டம் அதிகாரம் மாசுபடுவது. அது எதிர்கால இழப்பிற்கு வழிவகை செய்கிறது.

நிலம், நீர், காற்று மாசுபட்டால் அந்த மாசை நீக்க வழியுண்டு. பஞ்சபூதங்களில் அக்னியைத் தவிர மற்ற நான்கும் மாசுபடலாம். மாசை நீக்க முடியும். ஆனால் அக்னி மாசுபடாது. அது மாசுகளை அழிக்கும் - ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அக்னி அவதாரங்களாக இருந்து அரசியல் மாசை அழிப்பார்களா? தேசம் ஏக்கத்துடன் இந்தக் கேள்வியைக் கேட்கிறது.



**–ஆர்.நடராஜன்**

# மாணவர் கிளர்ச்சியால் தடுமாறும் அமெரிக்கா

அமெரிக்காவில், கொலம்பியா பல்கலைக்கழகத்துக்குள் சென்ற வாரம், நூற்றுக்கணக்கான ஆயுதக் காவல் படையினர் திபுதிபுவென்று புகுந்து, பாலஸ்தீன ஆதரவுக் கிளர்ச்சியை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். சுமார் 50 மாணவர்களைக் கைது செய்தார்கள். கிளர்ச்சி, அந்த ஒரு பல்கலையில் மட்டுமல்ல, நாடு தழுவிய விதத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

அட்லாண்டா எமெரி பல்கலையில் ஒரு மாணவர் கும்பலையும், இரண்டு பேராசிரியர்களையும் காவல் படையினர் கைது செய்தார்கள். நாடெங்கிலுமாக, ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைதாகியுள்ளனர்.

அமெரிக்க ஆர்பாட்டங்கள் அந்த நாட்டுடன் நின்றுவிடவில்லை. ஃபிரான்ஸ், ஜெர்மனி, போன்ற நாடுகளுக்கும் பரவிவிட்டது. காசா மாணவர்களும், அமெரிக்காவில் ஆர்பாட்டம் செய்யும் மாணவர்களுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்திருக்கிறார்கள்.

பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்கக் கல்லூரிகளில் பலமாதங்களாகப் புகைந்து கொண்டிருந்தது, இப்போது கொழுந்து விட்டு எரிகிறது. 1968-ல் வியட்நாம் போரின்போதும், 1970-களில் நிறவெறிக்கு எதிராக நடந்த போராட்டங்களும், 2000 -ஆவது ஆண்டில் ஈராக் போருக்கு எதிராகவும் இவற்றுக்கு முன்பும் பின்னரும் நிகழ்ந்துள்ள கிளர்ச்சிகளை இது நினைவுபடுத்துகிறது. ஆக, அமெரிக்காவுக்கு மாணவர் கிளர்ச்சி ஒன்றும் புதிதல்ல.

காசா போரில் அமெரிக்கப் படையினர் நேரடியாகப் பங்கு பெறவில்லை. அக்டோபர் 7-ஆம் தேதி இஸ்ரேலுக்குள் நடந்த ஹமாஸ் தாக்குதலை அடுத்து, காசா மக்கள் மீது இஸ்ரேல் நடத்தும் கொலைவெறித் தாக்குதலுக்கு அமெரிக்கா பல வகையில் ஆதரவுக் கரம் நீட்டியுள்ளது. இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பைடன் அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது மாணவர்களின் முக்கியக் கோரிக்கை. காசாவில் உடனடியாக போர்நிறுத்தம் செய்ய வேண்டும், காசாவுக்கு உணவுப்பொருள்களையும் மருந்துகளையும் அனுப்ப வேண்டும், அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள், இஸ்ரேல் கல்விக் கூடங்களுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டும் ஆகியவையும் அவர்களின் கோரிக்கை.

அமெரிக்க அரசின் அணுகுமுறையை மாற்றுவதுதான் இந்த ஆர்ப்பாட்டங்களின் நோக்கம் என்றால் அது, இதுவரை ஈடேறவில்லை. இந்த இயக்கத்தின் ஒரு பக்க விளைவாக, சில இடதுசாரித் தீவிரவாதக் குரல்களும் அங்கு கேட்கின்றன. இந்த ஆர்ப்பாட்டம் ஒரு இயக்கமாக மாறியுள்ள நிலையில், இப்போதும் அமெரிக்க அதிபர் பைடன் இதை எழுதும் நேரம் வரை வாய் திறக்காமல் இருக்கிறார். சென்ற தேர்தலில் அவருக்கு அரபு வம்சாவளி, முஸ்லிம் மக்கள் பெருவாரியான ஆதரவு தெரிவித்ததால், அவர்களைப் பகைத்துக் கொள்ளவும் முடியாமல், இஸ்ரேல் ஆதரவை விலக்கிக் கொள்ளவும் முடியாமல் தர்ம சங்கடத்தில் இருக்கிறார். இஸ்ரேல் பிரதமர் நேதன்யாஹு, அமெரிக்க மாணவர்களின் ஆர்பாட்டங்களைக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளார்.

வரும் நவம்பரில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறும் தருவாயில், அவரது அரசியல் எதிரி முன்னாள் அதிபர் டிரம்ப், இதை ஒரு வசதியான ஆயுதமாக்கிக் கொண்டிருக்கிறார். அவர், அமெரிக்க மாணவர் எழுச்சியையும் பைடன் நிர்வாகத்தையும் இதுதான் சாக்கு என்று கடுமையாக வசைபாடியிருக்கிறார். (சென்ற வாரம் வெளிவந்த, அமெரிக்கா தழுவிய கருத்துக்கணிப்பில், அதிபர் பைடனுக்கான ஆதரவு, டிரம்பை விட 1.5 சதவிகிதம் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கிறது!)

அமெரிக்க மாணவர் கிளர்ச்சி, அங்குள்ள இந்திய மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் கவலை அளித்துள்ளது. ஆர்பாட்டங்களில் பங்கு கொண்ட சில இந்திய மாணவர்கள் கைதானார்கள். அவர்களது விஸாவுக்கும் உதவித் தொகைகளுக்கும் ஆபத்து நேருமோ என்ற பயம் வேறு. பங்கு கொள்ளாத மாணவர்களுக்கா அவர்களுக்கு எதிராக மற்றவர்கள் ஏதேனும் செய்வார்களோ என்ற அச்சம். அவர்கள் இப்போது இணையவழிக் கல்வி பெற்று வருகிறார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை, பாலஸ்தீன ஆதரவுக் கொள்கையைத்தான் பின்பற்றி வருகிறோம். இன்று நேற்றல்ல, 1974 முதல் இதுதான் நம் நிலைப்பாடு. இந்தியாவுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையே இரு தரப்பு பேச்சுக்களும் தொடர்புகளும் இருந்து வருகின்றன.

2018 பிப்ரவரியில் நமது பிரதமர் மோடி பாலஸ்தீனத்துக்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணம் மேற்கொண்டார். இந்தியப் பிரதமர் ஒருவர் அங்கு சென்றது இதுவே முதல் தடவை.

நிற்க. அமெரிக்காவில் இதுவரை நடந்துள்ள ஆர்பாட்டங்களுக்கும், இப்போது நடக்கும் கிளர்ச்சிக்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. இது ஒரு சாதாரண மாணவர் கிளர்ச்சியாக மட்டுமல்லாமல், சித்தாந்த ரீதியாக ஒரு சில மையங்களை உருவாக்குவதாக உள்ளது.

அங்குள்ள அரசியல், சமூக, கல்வித் துறைப் பிரமுகர்கள், உடனடியாகத் தலையிட்டு, கருத்துத் தெரிவிக்க வேண்டும். வெறுப்புணர்வுகளை கண்டும் காணாமல் இருப்பது அமெரிக்காவின் நலனுக்கு உகந்தது அல்ல.

**– ஹெச். ராமகிருஷ்ணன்**

# ஸ்டிக்கர்களுக்குத் தடை



ஸ்டிக்கர் ஒட்டிய பைக்குகள்...

சமீபகாலமாக டூவீலர் மற்றும் கார்களில் பிரஸ், அட்வகேட், டாக்டர் ஆகிய ஸ்டிக்கர்கள் மட்டுமல்லாமல் காவல், உயர் நீதிமன்றம், தலைமைச் செயலகம், TNEB, EX Army என்று பல்வேறு துறைகளின் ஸ்டிக்கர்களும் ஒட்டப்படுகின்றன. இந்த ஸ்டிக்கர்களுக்கு நிச்சயமாக போக்குவரத்து போலீஸாரையும், சக வாகன ஓட்டிகளையும் அச்சுறுத்துவதே பிரதான நோக்கமாக இருக்க முடியும்.

போக்குவரத்து போலீஸார் வாகன சோதனைகளில் ஈடுபட்டபோது, பல வாகனங்களில் ஒட்டப்பட்டிருக்கும் ஸ்டிக்கர்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் சம்பந்தமில்லை என்பது தெரிய வந்தது. குறிப்பாக குற்றச் செயல்களில் ஈடுபட்ட சிலர் கூட இதுபோன்ற போலி ஸ்டிக்கர்களை ஒட்டி, போலீஸாரின் கவனத்தை திசை திருப்ப முற்பட்டது தெரிய வந்தது. இதைத் தடுக்கும் பொருட்டு **சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் ஆர்.சுதாகர்** கடந்த 27-ஆம் தேதி ஒரு சுற்றறிக்கை வெளியிட்டார்.

‘‘தனியார் வாகனங்களில் பல்வேறு வகையான ஸ்டிக்கர்களை தவறாக ஒட்டி பயன்படுத்தி வருகிறார்கள். இனி தனியார் வாகனங்களில் அரசால் அங்கீகரிக்கப்படாத ஸ்டிக்கர்களை ஒட்டக் கூடாது. மீறி ஒட்டுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்’’ என்று எச்சரித்தார் அவர். இதற்கு வழக்கறிஞர்கள் மற்றும் ஊடகங்கள் தரப்பிலிருந்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து காவல்துறை தரப்பில், ‘ஊடகங்களுக்கு அரசு வழங்கும் ஸ்டிக்கர்களையும், வழக்கறிஞர்களுக்கு பார் கௌன்சில் தரும் ஸ்டிக்கர்களையும் உரியவர்கள் மட்டும் தங்களது சொந்த வாகனத்தில் மட்டும் ஒட்டிக் கொள்ளலாம்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே காரில் பிரஸ், டாக்டர், போலீஸ், அட்வகேட் என்று பல ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருப்பதை நாம் சாலைகளில் பார்க்கும் நிலையில், போலீஸாரின் இந்த அதிரடி நடவடிக்கை வரவேற்புக்குரியதுதான். அதேநேரம் இந்த கிடுக்குப்பிடி நடவடிக்கைகள் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## தொக்கி நிற்கும் கேள்விகள்!

அருப்புக்கோட்டை தனியார் கல்லூரி பேராசிரியை நிர்மலா தேவி, தன்னிடம் படித்து வந்த மாணவிகளைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்ல முயற்சிக்கும் ஆடியோ ஃபைல்கள் 2018-ஆம் ஆண்டு வெளியாகி, தமிழகத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.



நிர்மலா தேவி

இதையடுத்து எழுந்த புகாரில் நிர்மலாதேவி ஸி.பி.ஸி.ஐ.டி. போலீஸாரால் கைது செய்யப்பட்டார். தொடர் விசாரணையில் காமராஜர் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முருகன், ஆய்வு மாணவர் கருப்பசாமி ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். அந்த மூன்று பேர் மீதும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம், பாலியல் தொழில் தடுப்பு சட்டம், தகவல் தொழில்நுட்ப சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் ஐந்து பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள மாவட்ட விரைவு மகளிர் நீதி மன்றத்தில் இந்த வழக்கு விசாரணை, 2018-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கில் ஏப்ரல் 30-ஆம் தேதிக்குள் விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, கடந்த ஏப்ரல் 29-ஆம் தேதி தீர்ப்பளிக்கப்பட்டது. அதில் முருகன், கருப்பசாமி இருவர் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் அவர்களை விடுதலை செய்த நீதிமன்றம், நிர்மலாதேவிக்கு பத்தாண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தது.

நிர்மலாதேவியின் செயல்பாட்டிற்கும், அப்போதைய ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்திற்கும் தொடர்பிருப்பதாக அப்போது குற்றச்சாட்டு எழுந்தது. அதை மறுத்த ஆளுநர் மாளிகை, ஓய்வு பெற்ற அதிகாரி சந்தானம் தலைமையில் ஒரு விசாரணை கமிஷனை அமைத்தது. சந்தானமும் விசாரணை மேற்கொண்டு தனது அறிக்கையை ஆளுநர் மாளிகையிடம் சமர்ப்பித்தார். ஆனால் அந்த அறிக்கை இன்று வரை வெளியிடப்படவில்லை.

தற்போது இந்தத் தீர்ப்பு வந்துள்ள சமயத்தில் ‘சந்தானத்தின் அறிக்கை ஏன் வெளியிடப்படவில்லை?’ என்றும், ‘நிர்மலா தேவி மாணவிகளை தவறான பாதைக்கு அழைத்துச் செல்ல முயன்றது உண்மையென்றால், அவர் யாருக்காக அந்த முயற்சியைச் செய்தார் என்ற தகவலை ஏன் நீதிமன்றம் கேட்டுப் பெறவில்லை? ஏன் அந்த உண்மை வெளிவரவில்லை?’ என்றும் பொதுவெளியில் கேள்விகள் வைக்கப்பட்டு வருகின்றன.

**- எஸ்.ஜே.இதயா**


''நம்ம குடும்பப் பெருமை தெரியுமா உனக்கு? எப்பேர்ப்பட்ட சூழல்களிலே சிக்கி எவ்வளவு கௌரவமா வாழ்ந்துட்டு வரோம்! நீயும் அப்படி பெரிய சூழல்லே சிக்கியிருந்தா தலை நிமிர்ந்து நடந்திருப்போமே! ஆபாச வீடியோவிலே மாட்டிக்கிட்டு மானத்தை வாங்கிட்டியே!''
தேவகௌடா
குமாரசாமி
பிரஜ்வல் ரேவண்ணா
பத்தாம் வகுப்பில் கலைஞர் பற்றிய பாடம் - செய்தி
''எல்லா பசங்களுக்கும் தினமும் கலைஞர் பாடத்தை விடாம நடத்துங்க. ஆனா, உணர்ச்சி வசப்பட்டு, 'சர்க்காரியா கமிஷன், கச்சத்தீவை விட்டுக் கொடுத்தது, கலைஞரோட குடும்பப் பாசம், ஈழக் கொள்கைகள், மெரினா உண்ணாவிரதம் பற்றி எதுவும் சொல்லிக் கொடுத்துடாதீங்க.''
கல்வி அமைச்சர்
ஆசிரியர்கள்
சத்யா
''இண்டி கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஸ்டாலின், ராஹுல், மமதா, பவார் ஆண்டுக்கு ஒருவர் பிரதமராக இருப்பார்கள்.''
''என்ன அநியாயம்! நம்ம பேரைச் சொல்லலையே! அப்ப நமக்கு சான்ஸ் இல்லையா? இதை விடக் கூடாது. இன்னைக்கே ரெண்டுலே ஒண்ணு பார்த்துடணும்.''
மோடி
லாலு யாதவ்
அகிலேஷ்
உத்தவ் தாக்கரே
கர்நாடகா தண்ணீர் தர முடியாதுன்னு சொல்லுதே?
அது எப்பவும் அப்படித்தான் சொல்லும்.
மேகதாது அணை கட்டியே தீருவோம்னு அமைச்சர் சொல்றாரே?
அவங்க அப்படித்தான் பேசுவாங்க.
தண்ணி கிடைக்கலைன்னா பயிர் எல்லாம் அழிஞ்சுடுமே?
அது வருஷா வருஷம் நடக்கிறது தான்.
பின்னே ஏன் காங்கிரஸை ஆதரிக்கிறீங்க?
அது வழக்கமா குடுக்கிற ஆதரவு தான்.
துரைமுருகன்

# இந்தியாவைக் காக்க இறுதிக்கட்ட வியூகம்

**வட மாநிலங்களுக்குச் சென்று இண்டி கூட்டணிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யவிருந்த தமிழக முதல்வர் ஸ்டாலின், ஏனோ அந்த எண்ணத்தைக் கைவிட்டு, கொடைக்கானலில் ஓய்வெடுக்கச் சென்று விட்டார். ஓய்வு நேரத்தில் ராஹுல் - கார்கேவுடன் வீடியோ காலில் வட மாநிலத் தேர்தல் நிலை குறித்துப் பேசினால், பொழுது மகிழ்ச்சியாகப் போகும்.**

**ஸ்டாலின்:** வணக்கம், ராஹுல்! நீங்க நலமா? வடக்குலே நம்ம கூட்டணி நலமா? தற்சமயம் கொடைக்கானலைக் காப்பாத்திக்கிட்டிருக்கேன். அங்கே பிரசாரம் எப்படிப் போகுது?


**ராஹுல்:** அடேடே ஸ்டாலின்ஜி! ஹவ் ஆர் யூ? பிரசாரம் பிரமாதமாப் போகுது. கூடிய சீக்கிரம் மோடி அழப்போறார். அதைப் பார்த்து நாம ஆனந்தக் கண்ணீர் வடிக்கப் போறோம்.

**ஸ்டாலின்:** நல்ல நியூஸ். மோடி அழுதா மட்டும் போதாது. அமித் ஷாவும் அழணும். ஒன்றிய அமைச்சரவையே அழணும். அப்படிப் பிரசாரம் பண்ணுங்க.

**ராஹுல்:** உங்களையும் பிரசாரத்துக்குக் கூப்பிடத்தான் நினைச்சோம். மோடி அழற நல்ல நேரத்திலே, உங்க பேச்சைக் கேட்டு அவர் சிரிக்க ஆரம்பிச்சுட்டா, பட்ட பாடெல்லாம் வீணாயிடும். அதான் உங்களைக் கூப்பிடலை.

**கார்கே:** போதாக்குறைக்கு டெல்லி நிருபர்கள் உங்களை பேட்டி எடுத்து, பா.ஜ.க. ஜெயிக்க வழி பண்ணிடுவாங்க. அதனால, அங்கே இருந்துகிட்டே ஐடியா மட்டும் குடுங்க. மற்றதை நாங்க பாத்துக்கறோம்.

**ஸ்டாலின்:** ஐடியாக்களை ஏற்கெனவே குறிச்சு வெச்சிருக்கேன். சொல்றேன் கேட்டுக்குங்க. கோவிஷீல்ட் தடுப்பூசியால் பக்க விளைவுகள் வரும்னு தெரிஞ்சும் அதை மறைச்சு, தன் சாதனைக்காக பல கோடி மக்களுக்கு ஃப்ரீயா தடுப்பூசி போட்ட இரக்கமேயில்லாத சதிகாரர் மோடின்னு பிரசாரம் பண்ணுங்க.



– சத்யா

**கார்கே:** அப்படி ஒண்ணும் பெருசா பாதிப்பு வரலையே?

**ஸ்டாலின்:** இதுவரைக்கும் இந்தியாவிலே வராம இருக்கலாம். இறுதிவரைக்கும் வரவே வராதுன்னு மோடி கேரண்டி குடுப்பாரா? பா.ஜ.க. தேர்தல் அறிக்கையிலே ஏன் தடுப்பூசி பற்றி ஒண்ணும் சொல்லலை?

**ராஹுல்:** அருமையான பாயிண்ட். ‘சீன அதிபரை சந்திச்சு, அவர் மூலமா இந்தியாவிலே கொரோனாவை பரப்பியதே மோடிதான்’னு நான் பேசறேன். தடுப்பூசி போட்டுக்கிட்டா, பா.ஜ.க. ஆதரவு உணர்வு வர்ற மாதிரி மருந்துலே கலப்படம் பண்ணது எனக்கு தெரியும். அதுதான் பக்க விளைவுக்குக் காரணம். இதுக்கு ஆதாரம் இல்லை. ஆனா இதுதான் உண்மை.

**ஸ்டாலின்:** ‘வந்தே பாரத்’னு புதுசா ரயில் விட்டாரேன்னு சந்தோஷப்பட்டா, அதுலேயும் பக்க விளைவு இருக்குது. ஜன்னல் ஓரமா உட்கார்ந்து பயணம் பண்றவங்களுக்கு பத்து வருஷம் கழிச்சு மூச்சுத் திணறல் வரப்போகுது.

**கார்கே:** ஐயையோ, நான் கூட போயிருக்கேனே.

**ஸ்டாலின்:** நீங்க பயப்படாதீங்க. இது மக்களுக்காக செய்யற பிரசாரம். ‘இண்டி கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் அந்த ரயில் பேரை ‘வந்தே இந்தியா’ன்னு தமிழ்லே மாத்தி, பக்க விளைவுகள் வராமல் தடுத்துவிடுவோம்’னு பேசுங்க.

**கார்கே:** ரொம்ப உளறலா இருக்குங்க, நீங்களே பேசினாத்தான் சரியா இருக்கும்.

**ராஹுல்:** நீங்க சும்மா இருங்க. இது வரைக்கும் நாம பேசினதை நம்பிய மக்கள் இதை நம்ப மாட்டாங்களா? அத்தோடு, ‘வந்தே பாரத் மூலம் கிடைக்கிற மொத்த வருமானமும், மோடியின் நண்பர்களுக்குத்தான் போகுது’ன்னு நான் சேர்த்துச் சொல்றேன்.

**ஸ்டாலின்:** ராமர் கோயில்லே தினமும் பல லட்சம் மக்கள் கூடறதாலே தொற்று நோய்கள் பரவலாம்னு தகவல் கிடைச்சிருக்குது. ஒரு சமயத்திலே கோயில்லே ஒருத்தர்தான் இருக்கணும். அவர் வெளியே வந்த பிறகு இன்னொருத்தர் உள்ளே போகிற மாதிரி, இண்டி கூட்டணி பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும்னு பேசுங்க. கூட்டம் குறைஞ்சுடும்.

**கார்கே:** ராமர் கோயில் விஷயத்திலே மோடி பேரைக் கெடுக்க நல்ல வழி சொல்லுங்களேன்.

**ஸ்டாலின்:** சொல்றேன். நம்ம ஆட்சியிலே ராமர் கோவிலுக்கு முன்னாலே ராவணன் சிலை வெக்கறோம். ராவணனைப் பார்க்க பயப்படற பெண்கள் கோயிலுக்கே வரமாட்டாங்க. ராமரின் எதிரிக்கு கோயில் முன்னாலே சிலை வெக்கறது திராவிட மாடல் வழக்கம்.

**ராஹுல்:** படேல் சிலையைப் பார்க்கும்போதெல்லாம் மக்களுக்கு மோடி ஞாபகம் வருது. அதை எப்படிக் கெடுக்கிறது?

**ஸ்டாலின்:** படேல் சிலை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட

ரசாயனக் கலவையாலே, காற்று மாசுப்படுதுன்னு நம்ம ஆளுங்களை வெச்சு பிரசாரம் பண்றோம். அந்த மக்கள் கருத்தை மதிச்சு, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க படேல் சிலையை அப்புறப்படுத்தறோம். அந்த இடத்திலே அதே உயரத்திலே கலைஞர் சிலை வெக்கறோம்.

**கார்கே:** எஸ்.சி., எஸ்.டி. ஓட்டுகளைப் பறிச்சு முஸ்லிம்களுக்குக் கொடுக்க காங்கிரஸ் சதி செய்யுதுன்னு மோடி பேசறாரு. அதுக்கு பதிலடி கொடுக்கணும்...

**ஸ்டாலின்:** சமூக நீதிப்படி 50 சதவிகிதம் அம்பேத்கார் வகுத்த ஜாதி அடிப்படையிலும், மீதி 50 சதவிகிதம் மத அடிப்படையிலும் சமமாக ஒதுக்கீடு செய்வதுதான் காங்கிரஸின் நோக்கம்னு பேசுங்க. ஜாதி ஓட்டுகளும் கிடைக்கும். சிறுபான்மை ஓட்டும் கிடைக்கும். தமிழ்நாட்டுலே மட்டும் 69 சதவிகிதம் ஜாதி அடிப்படை. மீதி எவ்வளவு? 41ஆ? 51ஆ? அது மத அடிப்படை.

**கார்கே:** அப்ப பொதுப் போட்டிக்கு...?

**ஸ்டாலின்:** அதைப் பற்றி நமக்கென்ன? அவங்க நமக்கா ஓட்டு போடறாங்க?

**கார்கே:** மோடி மீண்டும் பிரதமரானதும், சிறுபான்மையினர் வேலையைப் பறிச்சு ஹிந்துக்களுக்குக் கொடுக்கப் போறார்னு பேசினா, சிறுபான்மை மக்களுக்கு நம்ம மேலே நம்பிக்கை வரும்.

**ராஹுல்:** இதை விளக்கமா சொல்லிட்டு, ராமர் கோயில்லே உட்கார்ந்து தொழுகை முடிச்சு, கிறிஸ்தவப் பாதிரியார்களோட செல்ஃபி எடுத்துக்கறேன். எந்த ஓட்டும் போகாது.

**கார்கே:** மொகலாய மன்னர்களை ராஹுல் பாராட்டியதைக் கூட ஒரு பெரிய குற்றமா மோடி சொல்றாரு.

**ஸ்டாலின்:** சிறுபான்மை மன்னர்களைப் பாராட்டறது குற்றமா? ஜி.எஸ்.டி. போடாமயே ஔரங்கசீப் நல்லாட்சி நடத்தலை? அக்பர் ஹிந்துக்களின் குடிஉரிமையைப் பறிச்சாரா? இந்த உண்மைகளைச் சொல்லி மோடியின் வண்டவாளங்களை அம்பலப்படுத்துங்க.



**கார்கே:** முக்கியமான விஷயத்தை மறந்துட்டோம். நம்ம நல்ல நேரம் - தேவகௌடா பேரன் ஆபாச வீடியோ விவகாரத்திலே சிக்கியிருக்காரு. இதை நல்ல முறையிலே பயன்படுத்திக்கணும்.

**ஸ்டாலின்:** அவரை வெளிநாட்டுக்கு தப்ப விட்டதே மோடிதான். மோடியின் ஜெர்மனி நண்பர் வீட்டுலேதான் அவர் பதுங்கியிருக்காரு. ஆபாச வீடியோக்களை எடுப்பதற்கு முன்னாலே, மோடியின் ஆசியை அவர் பெற்றதற்கு ஆதாரம்தான் இந்த ஃபோட்டோன்னு பழைய ஃபோட்டோ எதையாவது எடுத்துக்காட்டுங்க. மக்கள் அதிர்ச்சியிலே நம்பிடுவாங்க.

**ராஹுல்:** 'அந்தப் பெண்களை தேவகௌடா பேரனிடம் அறிமுகப்படுத்தியதே அமித்ஷாதான். பாதிக்கப்பட்ட அத்தனை பெண்களுக்கும் மோடி தன் சொந்தப் பணத்திலேர்ந்து நஷ்ட ஈடு கொடுக்கணும். மோடி ஜெயிச்சா இந்தியாவிலே பெண்களே இருக்க மாட்டாங்க'ன்னு பேசறேன்.

**கார்கே:** உலக அளவிலே இந்தியாவுக்கு மோடி பெருமை சேர்த்துட்டதாக ஒரு இமேஜ் இருக்குது. அதை உடைக்கணும்.

**ராஹுல்:** சீன உளவாளிகள் மோடி வீட்டுலேதான் தங்கியிருக்காங்கன்னு இன்னைக்கு பேசப் போறேன்.

**கார்கே:** உண்மையிலே, மோடிக்கு வெளிநாட்டு ஆதரவே இல்லை. ஆனா பாகிஸ்தானே ராஹுல் பிரதமராவதைத்தான் விரும்புது. இதுதான் ராஹுலோட இமேஜ். இதையும் மக்களுக்கு சொல்லணும்.

**ஸ்டாலின்:** போன வாரம் அருணாசலப் பிரதேசத்தை அமித்ஷாவே நேரா எடுத்துட்டுப் போய், சீன அதிபர் கிட்டே குடுத்துட்டு வந்துட்டார்.

**ராஹுல்:** அப்படியா? அப்போ இப்ப அருணாசலப் பிரதேசம் அங்கே இல்லையா?

**ஸ்டாலின்:** அது மட்டுமில்லை. 'மேகாலயா உனக்கு. நாகாலாந்து எனக்கு. நேபாள் என்னோடது. போபால் உன்னோடது. ஜபல்பூரை நீ எடுத்துக்கோ. ஜாம்ஷெட்பூரை நான் எடுத்துக்கறேன்'னு இந்திய - சீன ஒப்பந்தமே தயார் ஆயிடுச்சு. இதையெல்லாம் பிரசாரம் பண்ணா மோடி பற்றி மக்களுக்கு பயம் வரும்.

**கார்கே:** நாம புளுகறோம்னு மக்கள் கண்டு பிடிச்சுட மாட்டாங்களா?

**ராஹுல்:** அதுக்குத்தான் 'பொய் சொல்வதில் மோடிக்கு நிகர் யாருமில்லை'ன்னு, நாம அடிக்கடி சொல்றோம்.

●●●

நினைத்துப் பார்க்கிறேன்

# வேட்புமனுவைத் தவறாக நிராகரித்தால் - தேர்தலை நிறுத்தலாமா?

**‘எ**திர்க்கட்சிக்காரர்களின் வேட்பு மனுக்களைத் தேர்தல் ஆணையம் நிராகரிக்கும் நிலையில், நியாயமான தேர்தல் நடக்க வாய்ப்பு உள்ளதா?’ என்று, **சென்னை - 33- லிருந்து ஸ்ரீமல்லிகா குரு** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார்.

**வே**ட்பு மனுவை ஏற்பதோ, மறுப்பதோ சாதாரண விஷயமல்ல. எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்ற பாகுபாடில்லாமல்தான் வேட்பு மனுக்களைத் தேர்தல் ஆணையம் பரிசீலிக்கிறது. அது ஆளும் கட்சியின் ஏற்கத்தகாத மனுக்களையும் நிராகரிக்கிறது. உதாரணமாக, நடப்பு 2024 தேர்தலில் கூட மேற்கு வங்கத்தில் வீரபூமி (பீர்பும்) தொகுதி பா.ஜ.க. வேட்பாளரான தேபஷிஷ் தர் மனுவைத் தேர்தல் ஆணையம் நிராகரித்தது. அதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த வழக்கை உச்ச நீதிமன்றம் அனுமதிக்க மறுத்தது (1). குறிப்பாக, 1990-களில் டி.என்.சேஷன் தேர்தல் ஆணையரான பிறகு தேர்தல் ஆணையம் சுதந்திரமாகத்தான் செயல்படுகிறது. ‘அது அரசாங்கத்தின் செல்வாக்கில் இயங்குகிறது’ என்று காங்கிரஸின் ஆட்சியில் பா.ஜ.க.வோ, பா.ஜ.க. ஆட்சியில் காங்கிரஸோ கூட குற்றம் எதுவும் சாட்டவில்லை. ஆணையம் யாருடைய வேட்பு மனுவையும் வேண்டுமென்றே நிராகரிக்காது. வேட்பாளர் மனு தவறாக நிராகரிக்கப்பட்டது என்றால் கூட, அது தேர்தலைப் பாதிக்காது என்கிறது உச்ச நீதிமன்றம். ஏன்?

## நிராகரிக்கப்படும் வேட்புமனுக்கள் 23 சதவிகிதம்

ஆயிரக்கணக்கான அரசியல் கட்சிகள், சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிடும் நமது ஜனநாயகத் தேர்தல் மிகவும் சிக்கலானது. 2019 நாடாளுமன்றத் தேர்தலில் 11,649 வேட்பு மனுக்கள் தாக்கலாகின. அதில் 2,709 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 914 மனுக்கள் வாபஸ் பெறப்பட்டன. மீதமுள்ள மனுக்களில் 650-தான் கட்சி வேட்பாளர்களின் மனுக்கள். மற்றவை சுயேச்சை அல்லது போட்டி வேட்பாளரின் மனுக்கள். ஒவ்வொரு தொகுதியிலும் சராசரியாக 20 சுயேச்சை வேட்பாளர்கள் மனுக்கள் தாக்கல் செய்கின்றனர். சராசரியாக 5 மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. 2019 தேர்தலில் தாக்கலான மனுக்களில் 23% நிராகரிக்கப்பட்டன. வேட்புமனு நிராகரிப்பு என்பது ஆளும் கட்சி Vs எதிர்க்கட்சி சம்பந்தப்பட்ட விஷயம் மட்டும் அல்ல. தாக்கல் செய்யப்படுவதில் 90 சதவிகிதத்திற்கும் மேல் கட்சி சம்பந்தப்படாத மனுக்களே. எனவே, வேட்பு மனு நிராகரிக்கப்படாத தொகுதிகள் இருக்க முடியாது.

## ஜனநாயகம் ஸ்தம்பித்து விடும்

நடப்பு 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தெலுங்கானாவில், 12 தொகுதிகளில் மட்டும் தாக்கலான 1,053 மனுக்களில் 428 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 625 மனுக்கள் ஏற்கப்பட்டன (1). மெஹபூப்நகர் தொகுதியில் 9 மனுக்களில் தொடங்கி நிராகரிக்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே சென்று, மல்காகிரி தொகுதியில் அது 115-ஐ எட்டியது. உ.பி. முதல் கட்ட தேர்தலில் 8 தொகுதிகளில் தாக்கலான 155 மனுக்களில் 71 நிராகரிக்கப்பட்டன (2). ஆந்திராவில் 25 தொகுதிகளில் 1,122 மனுக்களும் (3), தமிழகத்தின் 40 தொகுதிகளில் 309 மனுக்களும் (4), கேரளாவில் 21 தொகுதிகளில் 86 மனுக்களும் நிராகரிக்கப்பட்டன (5). இப்படி மனுக்கள் சரமாரியாக நிராகரிக்கப்படும்போது, நிராகரிப்பு தவறு என்று வழக்குகள் எழவே செய்யும். வேண்டுமென்றே ஒருவரைத் தவறான மனுவைப் போடவைத்து, அது நிராகரிக்கப்பட்டால், நீதிமன்றத்துக்குச் சென்று தேர்தலை நிறுத்த முடியும். ஏராளமான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும்போது வேட்புமனு நிராகரிக்கப்பட்டால் தேர்தலை நிறுத்தவேண்டும் என்றால் தேர்தல் நடக்குமா? இவற்றையெல்லாம் தவிர்க்கத்தான், ‘மனு தவறாக நிராகரிக்கப்பட்டது என்று கூறி நீதிமன்றத்துக்கு வராதீர்கள்’ என்று 40 ஆண்டுகளுக்கு முன்பே தெரிவித்துவிட்டது நீதிமன்றம். நீதிமன்றம் அப்படி முடிவெடுக்கவில்லை என்றால், நம் தேர்தல்களும், ஜனநாயகமும் ஸ்தம்பித்து விடும்.


*(1) என்.டி.டி.வி.காம் 30.4.2024. (2) தி ஹிந்து 28.3.2024. (3) எகனாமிக் டைம்ஸ் 28..3.2024. (4) டெக்கான் க்ரானிக்கில் 27.3.2024.(5) தி பிரின்ட்.காம் 28.3.2024. (6) ஆன்லைன் மனோரமா 5.4.2024.*




**- எஸ்.ஜி.**

## முஸ்லிம் தாஜா அரசியல் எதிர்ப்பு, முஸ்லிம் எதிர்ப்பு அல்ல!

'**மு**ஸ்லிம்களைக் குறி வைத்து பிரதமர் சமீபத்தில் பேசிய பேச்சுக்கள், கடும் விமர்சனத்துக்குள்ளானதே? வழக்கம்போல் நீங்கள் அதற்கும் (மோடிக்கு) வக்காலத்து வாங்குவதாக இருந்தால் பதில் எப்படியிருக்கும்?' என்று **இடையன்குடியிலிருந்து மருதூர் மணிமாறன்** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார்.

**ந**ம் நாட்டின் செல்வம் அனைத்திலும் முஸ்லிம்களுக்குத்தான் முன்னுரிமை என்று கூறிய காங்கிரஸைத்தான் மோடி குறிவைத்தார். முஸ்லிம்களை அல்ல. காங்கிரஸ் கூறியதை அப்போதே (27.12.2006) சோ-வும் கடுமையாக விமர்சனம் செய்தார். துரதிருஷ்டவசமாக முஸ்லிம் தாஜா அரசியல் ஏற்கப்பட்ட நம் நாட்டில், அதை எதிர்ப்பது முஸ்லிம் எதிர்ப்பு என்று ஆகிவிட்டது. முஸ்லிம் தாஜா அரசியல் நாட்டுக்கும், முஸ்லிம்களுக்கும் நல்லதல்ல என்பது ஆரம்ப காலத்திலிருந்தே துக்ளக்கின் கருத்து.

### நாட்டைப் பிளந்த தாஜா அரசியல்

முஸ்லிம் தாஜா அரசியல்தான் பாரதியார் கூறிய சேதமில்லாத பாரதத்தைப் பிளந்தது. ஹிந்து-முஸ்லிம்களின் மூதாதையர் ஒன்றே, நாமெல்லாம் ஒன்றே என்பதே சுதந்திரத்துக்கு முன் காங்கிரஸ், குறிப்பாக காந்தி போன்ற தலைவர்களின் கருத்தாக இருந்தது. முஸ்லிம்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்று தொடங்கிய முஸ்லிம் லீக்கை, திருப்தி செய்யத் தொடங்கியது முஸ்லிம் தாஜா அரசியல் என்ற விஷப் பரீட்சை. முஸ்லிம்களுக்கு தனிநாடு என்றதுடன் அந்த விஷப் பரீட்சையைக் கைவிட்டிருக்க வேண்டும். தனித்தன்மை வாய்ந்த முஸ்லிம்கள் மற்றவர்களுடன் - அதாவது ஹிந்துக்களுடன் - வாழமுடியாது என்பதுதான் பாகிஸ்தானை உருவாக்கிய முஸ்லிம் லீகின் கொள்கை. அதன் விளைவு பயங்கரமானதாக இருந்தது. பாகிஸ்தானில் இருந்த 20 சதவிகித ஹிந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், கிறிஸ்தவர்கள் கூட விரட்டப்பட்டு, இங்கு அகதிகளாக வந்தனர். மூன்று யுத்தங்கள் நடந்தன. இஸ்லாமிய பயங்கரவாதம் நம்மைத் தாக்கியது. பிறகும் முஸ்லிம்களை தாஜா செய்யும் விஷப்பரீட்சையைத் தொடர்வது நல்லதல்ல என்பதை விட, அது மூடத்தனம் என்றுதான் கூற வேண்டும். அரசியல்வாதிகளும், அரசியல் வல்லுனர்களும், ஊடகங்களும் இது பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டும். அந்தத் தவறான விஷப்பரீட்சை தொடர, நாடு ஏன் பிரிந்தது என்பது பற்றி நமது கல்விமுறை விளக்காதது ஒரு காரணம். மேலும், பிரிவினை செய்த முஸ்லிம் லீக், அதன் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் போன்றவர்களை ஏற்கும் சூழலை வாக்கு வங்கி அரசியல் உருவாக்கியதும் முக்கியக் காரணம். வாக்கு வங்கி அரசியல் தேசப் பிரிவினை அரசியலின் தொடர்ச்சி.

வாக்கு வங்கி அரசியலை நேரடியாக எதிர்கொள்ளும் துணிவு அரசியலில் மோடிக்கு மட்டுமே இருக்கிறது. பத்திரிகைத் துறையில் சோ-வுக்கு மட்டுமே இருந்தது. அதனால்தான் முஸ்லிம்களைப் படுகொலை செய்தவர் மோடி என்று அனைத்து அரசியல் கட்சிகளும் அவரை தூற்றியபோதும், சோ மோடியை ஆதரித்தார். அதுமட்டுமல்ல, அவர்தான் எதிர்காலப் பிரதமர் என்று அடையாளமும் காட்டினார். அதை இன்றும் தொடர்கிறது துக்ளக். இது தவறுக்கு வக்காலத்து வாங்கும் செயல் அல்ல, தவறைக் கண்டிக்கும் செயல். முடிவாக, முஸ்லிம் தாஜா அரசியல் எதிர்ப்பு, முஸ்லிம் எதிர்ப்பு அல்ல என்பதை முஸ்லிம்கள் உணரவேண்டும். அப்போதுதான் போலி மதச்சார்பற்ற அரசியல் கட்சிகள் வியாபாரத்தை மூடும், ஹிந்து-முஸ்லிம் உறவு சீர்படும்.

## இத்தாலிய குடியுரிமையைத் தியாகம் செய்ய விரும்பாத சோனியா

'**எ**னது தாய் தன் மாங்கல்யத்தை நாட்டுக்காக தியாகம் செய்தார் என்று ப்ரியங்கா காந்தி பேசியிருப்பது பற்றி?' என்று **திருக்கோவிலூரிலிருந்து ம.விருதுராஜா** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த இதழ் கேள்வி-பதிலில் கூறியுள்ளது போல், ப்ரியங்கா வெளியிட்ட வீடியோபடி தாலி கட்டாமல் மாலை மாற்றி மட்டும் நடந்தது சோனியாவின் திருமணம். சோனியா தாலி அணிந்திருந்தால் அது திருமணத்துக்குப் பிறகுதான் நடந்திருக்க வேண்டும். அப்படி நடந்ததா, அதைப் ப்ரியங்கா கூறியது போல் சோனியா தியாகம் செய்தாரா, இல்லையா என்பது நமக்குத் தெரியாது. ப்ரியங்காதான் விளக்கவேண்டும். ஆனால், நமக்குத் தெரிந்து ராஜிவுடன் திருமணம் நடந்து 15 ஆண்டுகள் ஆகி, பிரதமர் இந்திராவின் வீட்டு மருமகளாக வந்த பிறகும், சோனியா இந்திய பிரஜை ஆகவில்லை. ஏன்? இந்தியக் குடியுரிமை பெற வேண்டுமானால், இத்தாலியக் குடியுரிமையைத் தியாகம் செய்ய வேண்டும் என்பது நமது குடியுரிமைச் சட்ட விதி. திருமணம் ஆகியும் 15 ஆண்டுகள், தனது இத்தாலியக் குடியுரிமையை தியாகம் செய்ய அவருக்கு மனமில்லை. இந்தியாவில், அதுவும் இந்தியப் பிரதமரின் வீட்டில், இத்தாலியராகவே வாழ்ந்து வந்தார் அவர். 1968-ல் திருமணம் செய்து கொண்டு பிரதமர் வீட்டு மருமகளாக இருந்த சோனியா, 1983-ல்தான் இந்தியக் குடியுரிமை பெற மனுப்போட்டு இந்தியப் பிரஜை ஆனார்.

இதற்கு என்ன அர்த்தம்? இங்கு குடியேறி, ப்ரியங்கா-ராஹுல் பிறந்த பிறகும், இத்தாலியக் குடியுரிமையைத் தியாகம் செய்ய சோனியாவுக்கு மனம் வரவில்லை. அவருக்குப் பிறந்த ப்ரியங்கா, ராஹுல் இருவருக்கும் அவர் மூலம் இத்தாலியக் குடியுரிமை பிறப்பிலேயே கிடைக்கும் என்பதும், அவர் இத்தாலியக் குடியுரிமையை விடாததற்கு இன்னொரு காரணம். மேலும், ''நான் இத்தாலியக் குடிமகள். நான் இந்த நாட்டில், அந்நிய நாட்டினர்

தற்காலிகமாகத் தங்க அனுமதிக்கும் Foreigners Act கீழ் தங்க அனுமதி தாருங்கள்'' என்று 5 ஆண்டு களுக்கு ஒரு முறை மனுப் போட்டு அனுமதி பெற்றுத்தான், சோனியா நம் நாட்டில் - அதுவும் பிரதமர் வீட்டில் - தங்கியிருந்தார்.

இந்திராவின் ஆலோசனையின் காரணமாக தீவிர அரசியலில் ராஜிவ் ஈடுபட்டிருந்தபோது 1983-ல் சோனியா, அவசர அவசரமாக இந்தியக் குடியுரிமையைப் பெற மனுப் போட்டார். அதுவரை தனது இத்தாலியப் பெயரான அன்டோனியா மைனோ என்பதைக் கூட மாற்றிக் கொள்ளவில்லை அவர். அவரது குடியுரிமை பற்றி டாக்டர் சுப்ரமணியன் ஸ்வாமி வழக்குத் தொடர்ந்தார். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் அதுபற்றி விளக்கமாக நான் கட்டுரை எழுதினேன். ஜெயலலிதா, சோனியாவின் பெயர் அன்டோனியா மைனோ என்று பல முறை கிண்ட லாகக் கூறினார்.

இந்திய நாட்டுக்காக தாலியைத் தியாகம் செய்தாரோ இல்லையோ, இந்தியக் குடியுரிமை பெற தனது இத்தாலியக் குடியுரிமையை சோனியா தியாகம் செய்ய விரும்பவில்லை.

## சத்யம் சிவம் சுந்தரம் - தூர்தர்ஷன் மோட்டோ - அதை ஸ்டாலின் படிக்கவில்லையா?

'**அ**னைத்தையும் காவி மயமாக்கும் சதி திட்டத்தின் முன்னோட்டமாக, தூர்தர்ஷன் நிறம் (காவியாக) மாற்றப்பட்டுள்ளது என்று முதல்வர் ஸ்டாலின் ஆவேசப்பட்டுள்ளாரே?' என்று **சென்னை-28-லிருந்து வி.ராஜகோபாலன்** என்ற வாசகர் கேள்வி எழுப்பி யுள்ளார். காவி நிறம் தூர்தர்ஷனின் புதிய நிறமல்ல. அதன் ஒரிஜினல் நிறம். 1959-ல் தூர்தர்ஷன் தொடங்கியபோது அதன் லோகோ காவி நிறத்தில் தான் இருந்தது. 1976- ஏப்ரல்-1-ல் கீழே படத்தில் தெரியும் தூர்தர்ஷனின் காவி கலர் லோகோவை, தேவசிஷ் பட்டாச்சார்யா தன்னுடைய மாணவர் ஆர்.எல். மிஸ்திரி உதவியுடன் தயார் செய்தார் (1). முதலில் டி.வி.யில் மங்கலாகத் தெரியும் அது, சங்கீதப்



SOURCE: AUDIOVISUAL IDENTITY DATABASE: HTTPS://AVID.MIRAHEZE.ORG/WIKI/DOORDARSHAN

பின்னணியுடன் சில நொடிகள் சுழன்று சுழன்று இறுதியில் படத்தில் இருப்பது போல் தெளிவாக நிற்கும். 1980-களில்தான் காவி நிறம் மாறியது. டி.டி. லோகோவில் காவி நிறம் புதிதாக வரவில்லை. போனதுதான் திரும்ப வந்திருக்கிறது. காவி நிறத்தைவிட முக்கியம், அதன் கீழ் எழுதப் பட்டிருக்கும் சத்யம் - சிவம் - சுந்தரம் என்ற தூர்தர்ஷனின் மோட்டோ (குறிக்கோள் வாசகம்). தனது ராமாயணத்தை காசி விஸ்வநாதர் கோவிலில் இரவில் சமர்ப்பித்த துளசி தாசர், காலையில் பார்த்த போது அதன் மீது சத்யம் - சிவம் - சுந்தரம் என்று எழுதப்பட்டிருந்ததாகக் கூறி, அது சிவபெருமான் ஆசி என்றும் சொன்னார். காவி நிறத்தைவிட, திராவிடம் வெறுக்கும் அந்த காவி வாசகத்தை ஸ்டாலின் படிக்கவில்லையோ (2).

[1] https://peoplesgdarchive.org/item/8689/doordarshan-logo-animation
[2]https://www.speakingtree.in/allslides/truth-behind-lord-shivas-signatur e-satyam-shivam-sundaram-un-veiled/origin-of-satyam-shivam-sundaram

## கொலை செய்ய முயன்றவர்கள் கூட என்னை மிரட்டியதில்லை

'**இ**ன்னா நைனா உடம்பு எப்படி கீது என்பது போன்ற மிரட்டல் ஃபோன்கால்கள் உங்களுக்கு வந்ததுண்டா?' என்று **அரூரிலிருந்து மு.மதி வாணன்** என்ற வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார். இதுவரை நேரடியாக என்னை யாரும் மிரட்டிய தில்லை. 2012-ல் இஸ்லாமிய தீவிரவாதியான போலீஸ் ஃபக்ருதீனை தமிழகப் போலீஸ் கைது செய்தபோது, அவன் ''பாவிகளா, 2 நாள் தாமதிக்கக் கூடாதா? குருமூர்த்தியைச் சுட்டுக் கொன்றிருப் பேனே'' என்று கூறினானாம். அன்றிலிருந்து தமிழகப் போலீஸ் எனக்குப் பாதுகாப்புத் தருகிறது. பிறகு, முகமூடி அணிந்த ஆஜானுபாகுவான ஒருவன் வீட்டை உடைத்து உள்ளே வருவதற்கு, நள்ளிரவில் இரண்டு மணி நேரம் முயற்சி செய்தது சி.சி.டி.வி.யில் தெரிந்தது. பிறகு என் நண்பர் (தற்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர்) அஜித் டோவல், சென்னை ஐ.பி. ஆஃபீஸர் ரவிச்சந்திரன் இருவரும் வீட்டுக்கு வந்து எனது பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்தினர். அடுத்து 2020 (ஜனவரி 26)-ல் திராவிட தீவிரவாதிகள் என் வீட்டில் பெட்ரோல் குண்டு வீச முயற்சித்தார்கள். போலீஸ் ஃபக்ருதீனோ, முகமூடி மனிதனோ, திராவிட தீவிரவாதிகளோ கூட என்னை நேரடியாக மிரட்டவில்லை. இதற்கெல்லாம் முன் 2006-ல் அம்பானி-சோனியா பற்றி துப்புக் கண்டுபிடிக்க அமெரிக்கா சென்றபோது, நியூயார்க் லெக்ஸிங்டன் ஹோட்டலில் யாரோ தாக்க வந்தார்கள் (அவர் தந்த அனுபவங்கள்-66-துக்ளக் - 16.2.2022). அவர்களும் என்னை மிரட்டவில்லை. ●

# காங்கிரஸ் தேர்தல் அறிக்கை - பா.ஜ.க. - காங்கிரஸ் சொற்போர்!

எந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் இல்லாத அளவுக்கு காங்கிரஸ் கட்சியின் இப்போதைய தேர்தல் அறிக்கையை மாபெரும் சர்ச்சைக்கு உள்ளாக்கி இருக்கிறார் பிரதமர் மோடி. முதலில் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை 'பொய் மூட்டை' என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு நாட்டின் வளர்ச்சியையும், 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியின் சாதனைகளையும் பிரதானமாகக் கொண்டு பிரசாரத்தில் ஈடுபட்டு வந்த மோடி, பின்னர் 'காங்கிரஸ் தேர்தல் அறிக்கை, முஸ்லிம் லீக் கொள்கையின் மறுஅச்சு' என்று விமர்சித்தார். அதையடுத்து, 'பிரதமர் பதவியிலிருந்து என்னை அகற்ற அந்நிய சக்திகளும், உள்நாட்டு அதிகாரம் படைத்தவர்களும் சதி செய்கிறார்கள்' என்று முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பாணியில் குற்றம் சாட்டினார்!

அதற்கு அடுத்த கட்ட பிரசாரத்தின்போது, 'மத அடிப்படையிலான இடஒதுக்கீட்டை அரசமைப்புச் சட்டம் அனுமதிக்கவில்லை. அத்தகைய இடஒதுக்கீட்டை காங்கிரஸ் ஆதரிப்பதன் மூலம் அரசமைப்புச் சட்டத்தை அவமதிக்கிறது. பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள், பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டை குறைத்து, மத அடிப்படையிலான இடஒதுக்கீடாக முஸ்லிம்களுக்கு வழங்க அக்கட்சி தீர்மானித்திருக்கிறது என்பதை காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை உணர்த்துகிறது' என விமர்சித்து வருகிறார் மோடி.

மேலும் 'பல ஆண்டுகளுக்கு முன்பு ஆந்திராவில் மத அடிப்படையில் முஸ்லிம்களுக்கு 15 சதவிகித இடஒதுக்கீட்டை அமல்படுத்த காங்கிரஸ் முயற்சித்தது. எஸ்.சி., எஸ்.டி., பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு அளவைக் குறைத்து அதை அமல்படுத்த விரும்பினர். 2009 - ஆம் ஆண்டு மற்றும் 2014- ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கைகளில் அதே நோக்கத்தை காங்கிரஸ் வெளிப்படுத்தியது. அந்தப் பிரச்னையை விட மாட்டோம் என்றும் தெளிவாகச் சொன்னது. முன்பு கர்நாடகாவிலும் மத அடிப்படையில் இடஒதுக்கீட்டை காங்கிரஸ் அமல்படுத்தியது. பிறகு அங்கு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தவுடன் அரசியல் சட்டத்துக்கும், அம்பேத்கருக்கும் எதிரான அந்த முடிவை ரத்து செய்தோம். இப்போது கர்நாடக காங்கிரஸ் அரசு, முஸ்லிம் மதத்திலுள்ள அனைத்து ஜாதிகளையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து மற்றொரு பாவத்தையும் செய்தது. இதனால் பிற்படுத்தப்பட்டோர் பெற்று வந்த பெருமளவு பலன்கள் குறைக்கப்பட்டன. அந்த கர்நாடக மாடலைத்தான் நாடு முழுவதும் அறிமுகப்படுத்த காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. கர்நாடகாவில் காங்கிரஸ் சமூகநீதியை இழிவுபடுத்தி கொலை செய்தது. என் உயிர் உள்ளவரை மதத்தின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்க அனுமதி மாட்டேன்' என்று பிரசாரம் செய்து வருகிறார் மோடி.

ஆனால் பிரதமர் மோடியும், பா.ஜ.க.வினரும், தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளின் ஆட்சியில் பல ஆண்டு காலமாக முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகித தனி இடஒதுக்கீடு அமலில் உள்ளதை, தங்களது பிரசாரத்தில் குறிப்பிட மறந்தது ஏன் என்று புரியவில்லை! காங்கிரஸ் செய்தால்தான் அது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பானதாக பா.ஜ.க.வின் கண்ணுக்கு படுமோ! இது என்ன விதமான பா.ஜ.க. மாடலோ - அண்ணாமலை மாடலோ - மோடியிஸமோ தெரியவில்லை!

காங்கிரஸின் தேர்தல் அறிக்கை தொடர்பான விமர்சனத்தில் பிரதமர், மற்றொரு பெரிய குற்றச்சாட்டையும் தொடர்ந்து கூறி வருகிறார். மக்களின் சொத்துக்களைப் பெருக்க பா.ஜ.க திட்டமிட்டு வரும் நிலையில், 'காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், மக்களின் சொத்துக்களை தேடிக் கண்டுபிடித்து அதை நாட்டின் வளங்களின் முதல் உரிமையாளர்கள் என்று அவர்கள் (காங்கிரஸார்) கூறியவர்களுக்கு (முஸ்லிம்களுக்கு) பகிர்ந்தளிக்க காங்கிரஸ் விரும்புகிறது. சொத்து வாரிசுரிமை வரிகளை விதித்து, வாரிசுகளுக்கான சொத்துக்களை கொள்ளையடிக்க நினைக்கிறது. பெண்களின் தாலியை பறிக்க நினைக்கிறது. காங்கிரஸ் கட்சியின் இந்த மனநிலை அக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் வெளிப்பட்டுள்ளது. அக்கட்சி மிகவும் ஆபத்தான வாரிசுரிமை வரி திட்டத்தை முன்மொழிந்துள்ளது' என்று தொடர்ந்து விமர்சித்து வருகிறார் மோடி.

'காங்கிரஸ் தேர்தல் அறிக்கைக்கு மத சாயம் பூசிய பிரதமர் மோடி, இப்போது அதில் இல்லாத விஷயங்களை இருப்பதாக பொய் பிரசாரம் செய்து வருகிறார். பரம்பரை சொத்து வரி என்ற வார்த்தைகள் காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் எங்கும் இல்லை. இந்த வரியை ஒழித்தவர் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்திதான். காங்கிரஸ் தேர்தல் அறிக்கை மிகவும் தெளிவானது' என்று ப.சிதம்பரம், கார்கே, ஜெயராம் ரமேஷ் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் பிரதமர் மோடிக்கு கண்டனம் தெரிவித்து பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் பிரதமர் மோடி தனது பிரசாரத்தில், 'பாகிஸ்தானுக்கும் ராஹுலுக்கும் மிகுந்த நெருக்கம் உள்ளது. பாகிஸ்தான் முன்னாள் அமைச்சர் சௌத்ரி ஃபாவத் ஹுசைன் போன்றோர் காங்கிரஸ் இளவரசரை (ராஹுல் காந்தியை) இந்தியாவின் பிரதமராக்க துடிக்கிறார்கள். பாகிஸ்தான் அடிவருடியாக காங்கிரஸ் செயல்படுகிறது. முஸ்லிம் லீக்கின் மறுபதிப்பாக காங்கிரஸ் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் தேர்தல் அறிக்கை முதல் அக்கட்சியின் இளவரசர் உள்ளிட்டோரின் உரைகள் அனைத்துமே, ஒரு குறிப்பிட்ட பிரிவினரை தாஜா செய்யும் வகையிலேயே உள்ளன!' என்று சரமாரியாக சாடி வருகிறார்.



(தொடரும்)

– கரிகாலன்

# வருணாச்சிரம தர்மம்

## – ஒரு பார்வை

**ச**னாதன தர்மம் வேறு. வருணாச்சிரம தர்மம் வேறு. இவ்விரண்டிற்கும் இடையே நிரம்ப வேறுபாடு உண்டு. நமது தமிழ் நாட்டில் வருணாச்சிரம தர்மம் நீண்ட காலமாக விவாதப் பொருளாகி வீண் சண்டைக்கு வழி வகுத்து நிற்கிறது.

‘வருணாச்சிரமம்’ என்னும் வடமொழித் தொகை மொழியே இங்கே பலருக்கு எரிச்சலையும், விரோத மனப்பான்மையையும் தோற்றுவிக்கிறது. இதற்குரிய விளக்கத்தைப் பார்க்கப் புகுமுன், இந்த வருணப் பிரிவுகள் யாரால் எக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டன என்பதைக் குறித்து மேலைநாட்டவரும், நமது நாட்டவரும் சொல்லியுள்ள கருத்துக்களைப் பார்த்து விடுவது நல்லது.

வட ஐரோப்பாவிலும், மத்திய ஐரோப்பாவிலும் இருந்து புறப்பட்ட ஆரியர் என்பார் இந்தியாவுக்குள் வந்து குடியேறினர். இவர்கள் இங்கே வந்த காலம் கி.மு.2000; அல்லது கி.மு. 3000 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலமாகும் என்பதாக, வரலாற்றை எழுதிப் பரப்பியவர்கள் மேனாட்டு ஆய்வாளர்களே! குறிப்பாக மதப் பரப்புதலை மேற்கொண்ட பாதிரியார்களே!

‘மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் இந்தக் கருத்து உண்மையன்று, உள்நோக்கம் கொண்டது’ என நம்மவரில் மிகச் சிறந்த படிப்பாளிகள் கூறுகின்றனர். அவருள் மூவர் கருத்துக்களை இங்கே காண்போம்.

முதலில் ஸ்வாமி விவேகானந்தர் கருத்தைக் கவனிப்போம்.



மறைமலையடிகள்

*"...And what your European Pandits say about the Aryans swooping down from some foreign land snatching away the land of aborigines, and settling in India by exterminating them, is a pure nonsense, foolish talk."*

*"In what veda, in what suktah do you find that the Aryans came to India from a foreign country? Where do you get the idea they slaughtered the wild aborigines? What do you gain by talking such nonsense?"....*

ஆரியர் எனப்படும் ஓர் இனத்தார் இந்தியாவுக்குள் வந்தனர் என்ற கருத்தே முட்டாள்தனமானது எனக் கோபமாகப் பேசுகிறார் விவேகானந்தர்.

இந்தக் கருத்தையே வரலாற்றுப் பேராசிரியர் P.T. சீனிவாச ஐயங்கார், ‘‘ஆரியர் என்னும் இனத்தார் இந்தியா மேல் படையெடுத்து வந்து, ஜெயித்து இந்த வேத மந்திர பாஷையை இந்தியாவில் பரப்பினர் என்ற கற்பனையை ஐரோப்பியர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள். இது நம்பத்தக்கதன்று. ஆரிய முறைகள் உண்டானது மத்திய தேசத்தில் (அதாவது கங்கை யமுனை நடுவிலிருக்கும் நாட்டில்) - வேத மந்திரங்களில் ஆரியர் வெளிநாட்டிலிருந்து வந்தார்கள் என்று குறிப்பொன்றுமில்லை’’ என்கிறார்.

**(திருநான்மறை விளக்க ஆராய்ச்சி:- பக்: 90, 91)**

விவேகானந்தருக்கு வடமொழி, ஆங்கிலம் அத்துப்படி. ஐயங்காருக்கு ஆங்கிலம், வடமொழி, தமிழ் மூன்றும் கைவரப் பெற்றவை. ஐயங்கார் போன்றே வேளாளராகிய மறைமலை அடிகள் மூன்று மொழிகளையும் அறிந்தவர்.

ஐயங்கார் அவர்கள் விவேகானந்தர் போன்று ஆரியர் என்பார் இந்தியாவிற்கு வரவில்லை என்று கூறியதோடு, ஆரியர் என்ற பெயர் படைத்தோர் நமது நாட்டில் கங்கை யமுனை நதிக்கரையில் வாழ்ந்தோராவர் என்கிறார்.

மூன்றாவதாக மறைமலை அடிகளாரின் கருத்துக்கு வருவோம்.

விவேகானந்தர், ஐயங்கார் ஆகியோருக்கு மாறுபட்டு மேலைநாட்டு ஆய்வாளர்கள் கருத்தினை ஏற்று, ஆரியர் என்பார் அந்நிய தேசத்திலிருந்து வந்தனர் என்கிறார் மறைமலை அடிகள். ஆனால் வந்த ஆரியர்கள் வருண வேறுபாட்டை உண்டாக்கவில்லை எனக் கூறும் அடிகள், அதற்கான காரணங்களையும் சொல்லுகிறார். அவற்றைப் பார்ப்போம்.

‘‘ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு அலைந்து திரியும் வாழ்க்கையில் இருந்ததால், உழவுத் தொழில் இன்னதென்றே அவர்கட்குத் தெரியாது என்றும்; அவர்கட்கு முன் இந்திய நாட்டில் இமயமலைச் சாரல் வரைப் பரவியிருந்த தமிழர்களோ, நாகரிகத்தில் சிறந்து, தாம் சென்ற இடங்களில் நாடு, நகரங்களை அமைத்துச் செல்வம் பெருக்

கித் தமக்குள் அரசர்களை ஏற்படுத்தி வறுமையின்றி வாழ்ந்தனர் என்றும்;

''செல்வத்தால் சிறந்த நாகரிக வாழ்க்கை உடையவர்களுக்கு மத்தியில்தான் பிரிவுகள் உண்டாகுமேயல்லாமல், நிலையான இருப்பிடம் இல்லாமல் அலைந்து திரியும் மக்கள்பால் பிரிவுகள் உண்டாக மாட்டா என்றும் கூறுகிறார்.

**(சாதி வேற்றுமையும், போலிச் சைவரும் - மறைமலையடிகள்)**

மேலும், ''ஆரியர் வருவதற்கு முன்னரே தமிழர் மிக்க நாகரிகம் உடையவராய் இருந்தனர் என்பது, ரிக் வேதத்தினாலேயே இனிது அறியப்பட்டதொன்றாம். ஓரிடத்தும் நிலைபெற மாட்டாது திரிதரு வாழ்க்கை உடையராய், இந்தியாவினுள் புகுந்த ஆரியர், கங்கையாற்றுக் கரைப் பக்கங்களில் நிலை பெற்ற வாழ்க்கை நடாத்திச் செங்கோல் ஓச்சிய தமிழ் மக்களால் நெறிப்படுத்தப்பட்ட இலக்கண முறைகண்டு தாமும் உயிர் மெய் எழுத்துக்களை முறைப்படுத்தினர் எனத் துணிக'' என்றும் கூறுகிறார் மறைமலையடிகள்.

**(பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்: மறைமலையடிகள்)**

மறைமலை அடிகளின் கருத்துக்களைக் கொண்டு சிந்திக்கும்போது, நால்வருணப் பாகுபாட்டிற்கும் ஆரியர் என்பாருக்கும் தொடர்பு கிடையாது என்பதும்; வடநாட்டில் கங்கைக் கரையில் வாழ்ந்த தமிழர்கள்தான் அப்பிரிவுகளை உண்டாக்கினர் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. கங்கைக் கரையில் வாழ்ந்த நம் நாட்டினரே வருண வேறுபாட்டிற்குக் காரணமானவர்கள் என்பதில் ஐயங்காரும், அடிகளும் ஒன்றுபடுகின்றனர்.

நமது திராவிடச் சிந்தனையாளர்கள் மறைமலை அடிகளை ஏற்றுக் கொள்பவர்கள். அடிகளைப் பின்பற்றித் தமிழர்களே வருண வேறுபாட்டைக் கண்டவர்கள் என அவர்கள் பேச வேண்டும். அடுத்து, நீண்ட நாட்களாகக் கேட்கப்படும் கேள்வி ஒன்றுக்கும் அவர்கள் பதில் தர வேண்டும்.

வட ஐரோப்பாவிலிருந்தும், மத்திய ஐரோப்பாவிலிருந்தும் புறப்பட்ட ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தது போன்று, வேறு பல நாடுகட்குச் சென்று குடியேறினர் என்று மேலைநாட்டு ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அவர்கள் குடியேறிய ஏனைய நாடுகளில், இந்தியாவில் இருப்பது போன்ற வருணாச்சிரம முறை ஏன் ஏற்படவில்லை என்பதே அந்தக் கேள்வி.

இந்தக் கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடியாது போனாலும், மறைமலையடிகள் கருத்தினை ஒட்டிப் புறநானூற்றுப் பாடல் ஒன்றைக் கொண்டு பதில் சொல்லலாம். அதனைப் பார்ப்போம்.



**(தொடரும்)**

**– பேராசிரியர் சாமி.தியாகராசன்**


# SRIMATHA CANCER CARE

(Secular Institution dedicated to the care of indigent patients with terminal cancer and renal failure)

Admn. Office : SMCC Towers, No. 1/808, Pillaiyar Koil Street, Thoraipakkam, Chennai - 600 097.

Tel : 044-42110496, 91762 08165, 81488 04012, 86106 15845

Email : dvijayasree.smcc@rediffmail.com, srimathacancercare@gmail.com | ISO 9001 : 2015



ஸ்ரீமாதா கேன்சர் கேர் அறக்கட்டளை மருத்துவ உலகத்தால் இனி குணப்படுத்த முடியாது என கைவிடப்பட்டு, மரணத்தின் வாயிலில், வறுமையில் சிக்கி தவிக்கும் ஏழை புற்று நோயாளிகளுக்கு "ஒரு அன்பு சரணாலயம்" "இறையே சரண்" என்று வருவோரை அன்புகாட்டி ஆதரவு கரம் நீட்டி இலவசமாக உணவு, தங்குமிடம், மருத்துவ வலி தணிப்பு சிகிச்சை கொடுத்து அவர்களது வாழ்க்கையை ஒரு வலியில்லாத பயணமாக மாற்றி தருவதே எங்கள் இலக்கு.

SRIMATHA CANCER CARE

UPI PAYMENTS ACCEPTED HERE

SCAN QR CODE WITH YOUR PSP APP

or Pay to VPA

Srica.05@cmsidfc

- ரூ.1,00,000/- நிதி கொடுத்து நீங்கள் ஒரு நிரந்தர காப்பாளர் ஆகலாம் (அல்லது) உங்கள் பெயரை "கொடையாளர் சுவரில்" பதிவு செய்து கொள்ளலாம்.
- ரூ.60,000/- கொடுத்து வருடத்திற்கு ஒரு முறை இரண்டு நோயாளிகளை தத்தெடுத்து அவர்களது அனைத்து செலவுகளையும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளலாம்.
- ஒருநாள் காப்பகத்தின் பராமரிப்பு செலவாக ரூ.15,000/- அளிக்கலாம்.
- ஒரு நாள் சாப்பாட்டு செலவாக ரூ.5,000/- அளிக்கலாம்.
- ஒரு நாள் ஒரு நபருக்கு இலவச டயாலிசிஸ் செய்ய ரூ.1,500/- அளிக்கலாம்.

தங்களது நன்கொடைகளை SRIMATHA CANCER CARE என்ற பெயரில் காசோலையாகவோ, வரையோலையாகவோ, உங்களது முழு முகவரியுடன், கைப்பேசி / தொலைபேசி எண்ணையும் எழுதி SRIMATHA CANCER CARE, "SMCC TOWER", 1/808, Pillaiyar Koil Street, Thoraipakkam, Chennai - 600 097 என்ற முகவரிக்கு அனுப்பலாம். தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 80(G) பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

Account Holder Name : SRI MATHA CANCER CARE

Bank Name : BANK OF BARODA, Indira Nagar Branch

Current Account No. 75310200000098

IFS Code : BARBOVJINNG (5th Digit is 'ZERO')



Founder & Managing Trustee

Dr. Hon. D.VIJAYASREE

B.Com., L.L.B. (Hons.)

The Doctor of Cancer Care Service

The Doctor of Social Works

91762 08165

# வெளிநாட்டு சக்திகளின் சதி



உச்ச நீதிமன்றம்

'**இ**ந்தியாவின் முன்னேற்றத்தைத் தடை செய்ய வெளிநாடுகள் சதி செய்கின்றன' என்று உச்ச நீதிமன்றமே கூறியுள்ளது. வாக்குப் பதிவு இயந்திரங்களுக்குத் தடை விதிக்கக் கோரியுள்ள வழக்கின் தீர்ப்பில், உச்ச நீதிமன்றம் இவ்வாறு கூறியுள்ளது.

கடந்த எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக சுதந்திரமான, நேர்மையான தேர்தல்களை நடத்தி வருவதற்காக தேர்தல் கமிஷனை உச்ச நீதிமன்றம் பாராட்டியிருக்கிறது. 'சில வெளிநாட்டுச் சக்திகள் இந்தியாவின் வளர்ச்சியைக் குறைத்து மதிப்பிடுகின்றன. ஓட்டுப் பதிவு இயந்திரங்களில் எந்தத் தவறும் இல்லை. அவை 97 கோடி வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளன' என்றும் உச்ச நீதிமன்ற அமர்வு தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது.

## டெல்லி நிர்வாகம் சீர்குலைவு

**டெ**ல்லி முதல்வர் கெஜ்ரிவால், மணிஷ் சிஸோடியா போன்ற அமைச்சர்கள் எல்லாம் அமலாக்கத் துறையினால் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பதால், டெல்லி அரசில் ஏராளமான கோப்புகள் தேங்கிக் கிடக்கின்றன. இப்படி சுமார் 8,000 ஃபைல்கள் தேங்கியுள்ளனவாம். இதனால் டெல்லி நிர்வாகமே சீர்குலைந்து கிடக்கிறது என்று பா.ஜ.க.வினர் கூறுகின்றனர். இதை டெல்லியை ஆட்சி செய்யும் ஆம் ஆத்மி கட்சித் தலைவர்கள், 'ஆதாரமற்ற குற்றச்சாட்டு' என்று மறுக்கின்றனர். தவறாக மக்களைத் திசை திருப்பவே இப்படிக் கூறுகின்றனர் என்கிறார்கள் ஆம் ஆத்மிகள்.



கெஜ்ரிவால்

## போதைப் பொருள் மாஃபியாக்கள்

**ந**மது அமலாக்கத்துறை அமெரிக்க அதிகாரிகளுடன் இணைந்து, போதைப் பொருட்களை உலக அளவில் கடத்தி விற்பனை செய்கிற பெரிய கும்பல்களைப் பிடிப்பதில் முனைந்திருக்கிறது. உத்தராகண்டில் பிடிபட்ட போதைப் பொருட்களுக்கும், தமிழ்நாட்டு போதைப் பொருள் கடத்தல் மன்னன் ஸாதிக்கிற்கும் தொடர்பு இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

## டெல்லி மேயர் தேர்தல் தள்ளிப் போகுமோ?

**2.5.2024**-ல் டெல்லி மேயர் தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், இது சம்பந்தமாக முதல்வர் கெஜ்ரிவாலிடமிருந்து எந்தத் தகவல்களும் வராமல் இருப்பதால், டெல்லி கவர்னரால் தேர்தல் அதிகாரியை நியமிக்க முடியவில்லை. சிறையிலிருக்கும் முதல்வரிடமிருந்து தகவல் எதுவும் வராத நிலையில், தேர்தல் அதிகாரியை நியமிக்க முடியாது என்று கவர்னர் மறுத்து விட்டார். இதனால் தேர்தல் நடப்பது சந்தேகம்.

முதல்வர் பதவியை ராஜினாமா செய்யும்படி கெஜ்ரிவாலை பா.ஜ.க.வினர் வற்புறுத்துகின்றனர். ஆனால் ஆம் ஆத்மி கட்சியினர், ராஜினாமா செய்ய முடியாது என்று மறுக்கின்றனர்.

## அமேதியில் மீண்டும் ஸ்மிருதி இரானி போட்டி

**ந**டைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், உ.பி.யில் உள்ள அமேதி தொகுதியில் மீண்டும் ஸ்மிருதி இரானி போட்டியிடுகிறார். கடந்த 29-ஆம் தேதி அவர் வேட்புமனு தாக்கல் செய்தார். மே 20-ஆம் தேதி அமேதி தொகுதியில் தேர்தல் நடக்கிறது.



ஸ்மிருதி இரானி

## உச்ச நீதிமன்றத்தில் நவீனம்

**ந**வீன எலெக்ட்ரானிக் தொழில்நுட்பத்தை உச்ச நீதிமன்றம் பயன்படுத்துகிறது. குரூப் மெசேஜ் அனுப்புவதற்கு, அது வாட்ஸ்ஆப்பைப் பயன்படுத்துகிறது. உச்ச நீதிமன்ற ரிஜிஸ்திரார் அலுவலகம், பரீட்சார்த்தமாக 20,949 வாட்ஸ்ஆப் மெசேஜ்களை அட்வகேட்களுக்கு அனுப்பியதில், 13,676 மெசேஜ்கள்தான் போய்ச் சேர்ந்தன. காரணம் பல தொலைபேசி எண் பதிவுகள் தவறாக இருந்திருக்கின்றன.

**– டெல்லிவாலா**

# ரிஸர்வ் வங்கியின் அதிரடி நடவடிக்கை பாராட்டப்பட வேண்டியதே

**நா**ட்டிலுள்ள எல்லா வங்கிகளும் ரிஸர்வ் வங்கியின் கட்டுப்பாட்டிலும் வழிகாட்டுதலிலுமே இயங்குகின்றன. மேலும் பணவீக்கத்தை கட்டுக்குள் வைத்து நாட்டு மக்களின் வாங்கும் திறனை சரியான முறையில் பராமரிப்பதும் ரிஸர்வ் வங்கியின் கடமையே. ஆனால் பல சமயங்களில் ரிஸர்வ் வங்கி சரியான நேரத்தில் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக உள்ளது.

பணவீக்கத்தை நான்கு சதவிகிதத்திற்குள் வைத்திருக்க வேண்டிய பொறுப்பு ரிஸர்வ் வங்கியைச் சார்ந்தது. சில சமயங்களில் அது இரண்டு சதவிகிதம் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அதாவது இரண்டிலிருந்து ஆறு சதவிகிதத்திற்குள் இருக்கலாம். வரும் காலங்களில் இருக்கப் போகும் பணவீக்கத்தை முன்னதாகவே அனுமானித்து, அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது ரிஸர்வ் வங்கியின் பொறுப்பே. ஆனால் ரிஸர்வ் வங்கி இதை சரியாகச் செய்யவில்லை என்பதை பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**2020 - ஆம் ஆண்டில், மாத வாரியான பணவீக்க விகிதங்கள்:** 7.6, 6.6, 5.8,7.2, 6.3, 6.2, 6.7, 6.7, 7.3, 7.6, 6.9 மற்றும் 4.6 சதவிகிதம் இருந்தன.

**2021 - ஆம் ஆண்டில், மாத வாரியான பணவீக்க புள்ளி விவரங்கள் பின்வருமாறு:** 4.1, 5.0, 5.5, 4.2, 6.3, 6.3, 5.6, 5.3, 4.3, 4.5, 4.9 மற்றும் 5.7 சதவிகிதம்.

பணவீக்கம் இவ்வாறு அதிகரிக்கும்போது ரிஸர்வ் வங்கி தனது ரெபோ வட்டி விகிதத்தை அதிகரித்து, பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வருவது வாடிக்கை. ஆனால் எந்த வித நடவடிக்கையும் எடுக்காத ரிஸர்வ் வங்கி, 2022 மே மாதம் தாமதமாக ரெபோ வட்டியை 0.4 சதவிகிதம் அதிகரித்தது.

சமீபத்தில் மார்ச் 2017 முதல் மார்ச் 2020 வரை எஸ் வங்கியின் செயல்பாடுகள் சரியில்லை என்று தெரிந்தும், ரிஸர்வ் வங்கி உரிய நேரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இறுதியாக எஸ் வங்கியை மீட்டெடுக்க பொதுத் துறை வங்கிகளின் பங்களிப்புடன் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதேபோல் லட்சுமி விலாஸ் வங்கியின் மீதும் ரிஸர்வ் வங்கியின் நடவடிக்கை தாமதமானதே. 2016 - லிருந்து தொடர்ந்து வங்கியின் மூலதனம் குறைந்து வந்தபோதிலும், ரிஸர்வ் வங்கி கைகட்டி வேடிக்கை பார்த்தது. 2020 - ஆம் ஆண்டு இறுதியிலேயே இந்த வங்கியை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பல வங்கிகளும், வங்கி சாராத நிதி நிறுவனங்களும் ரிஸர்வ் வங்கியின் அறிவுறுத்தல்களை அலட்சியம் செய்யும் போக்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக -#39; நோ யுவர் கஸ்டமர் -#39; நிபந்தனைகளை பல வங்கிகள் காற்றில் பறக்க விடுகின்றன. மேலும் வாராக்கடன்களை சரியான முறையில் வெளியிடவும், அதற்கான தனியான நிதி ஒதுக்கீடுகளை முன்னெடுக்கவும் பல வங்கிகள் தவறுகின்றன. இதன் காரணமாக இந்த வங்கிகள் வெளியிடும் லாப நஷ்ட கணக்குகள் கேள்விக்குரியனவாகின்றன.

தவறுகளை கண்டுபிடிக்கும் ரிஸர்வ் வங்கி, இந்த வங்கிகளுக்கும் வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கும் பண அபராதம் விதிக்கிறது. சமீப காலங்களில் இது போன்ற அபராதம் விதிக்கும் எண்ணிக்கையும் அபராத தொகையும் பல மடங்கு அதிகரித்துள்ளது. நிதி ஆண்டு 2023 - ல் 41 நிறுவனங்களுக்கு ரூபாய் 33.1 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால் இது நிதி ஆண்டு 2024 - ல் 64 நிறுவனங்களுக்கு ரூபாய் 74.1 கோடியாக அதிகரித்துள்ளது.

ஆனால் இந்த நடவடிக்கையால் எதிர்பார்த்த பலன் இருப்பதாகத் தெரியவில்லை. பல வங்கிகளின் போக்கு -#39; அபராதம் விதித்தால் என்ன? கட்டி விட்டால் போயிற்று -#39; என்று நினைப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் அபராதம் வங்கிகளுக்கே. தவறு செய்த அதிகாரிகளுக்கு அல்ல. இந்த அபராதம் உண்மையில் பாதிப்பது பங்குதாரர்களையே. அவர்களுக்கு கிடைக்கும் ஈவுத் தொகை குறையலாம். பங்கின் சந்தை மதிப்பும் குறையலாம்.

ஆனால் ரிஸர்வ் வங்கியின் சமீபத்திய நடவடிக்கைகள் கடுமையாகவும், நம்பிக்கை ஊட்டுபவையாகவும் உள்ளன. ரிஸர்வ் வங்கி பேட்டிஎம் வங்கி செயல்பட முடியாத அளவுக்கு அதனை முடக்கியுள்ளது. மார்ச் 15, 2024 - க்குப் பிறகு இந்த வங்கி எந்த வாடிக்கையாளர் கணக்கிலும் எந்த ஒரு தொகையையும் வரவு வைக்க முடியாது. இந்த வங்கி தொடர்ந்து ரிஸர்வ் வங்கியின் பல அறிவுறுத்தல்களை அலட்சியம் செய்ததே இந்த நடவடிக்கைக்கு காரணம்.

இதேபோன்று ஐ.ஐ.எப்.எல். நிதி நிறுவனம் எந்த நகைக்கடனும் மார்ச் 4 - க்குப் பிறகு வழங்க, ரிஸர்வ் வங்கி தடை செய்துள்ளது. இந்த நிறுவனம் ரிஸர்வ் வங்கி வரையறுத்த மார்ஜின் நிபந்தனைகளை பின்பற்றாததால் விளைந்த நடவடிக்கையே இது.

மேலும் ஜெ.எம்.ஃபைனான்ஷியல் ப்ராடுக்ட் நிறுவனம் பங்கு பத்திரங்களின் மீதும், கடன் பத்திரங்களின் மீதும் எந்தக் கடனும் வழங்க தடை செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற ரிஸர்வ் வங்கியின் அதிரடி நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது. தவறு செய்யும் நிறுவனங்களை உரிய நேரத்தில் தண்டிப்பதும், செயல்களை முடக்குவதும் அவசியம். மற்ற நிதி நிறுவனங்களுக்கும், வங்கிகளுக்கும் இது ஒரு பாடமாக அமையும்.



**- எஸ் கல்யாணசுந்தரம்**
**(ஓய்வு பெற்ற வங்கியாளர்)**

# டியர் மிஸ்டர் துக்ளக்

## குடிமக்களை 'குடி' மக்களாக ஆக்கிய திராவிட மாடல்

❁ 08.05.2024 'துக்ளக்' இதழில் வெளிவந்த அட்டைப்படம் வேதனை தருவதாகவும், நிகழ் கால தமிழகத்தின் சமூக நிலைமை யின் கண்ணாடியாகவும் இருந் தது. சாராய விற்பனையின் இலக்கை 50,000 கோடி ரூபாய் என்று உயர்த்தியுள்ளது அரசு. இந்த வருமானத்தை வைத்துத் தான் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மாதா மாதம் சம்பளம் வழங்கப்படுகிறது. மக்களின் போதைப் பழக்க வழக் கமே, அரசு இயந்திரத்தின் வரு மானம் என்றாகிறது. ரூபாய் எட்டரை லட்சம் கோடி கடனில் மூழ்கிக் கொண்டிருக்கும் இந்த மாநிலம், திவாலாகி விட்டது என்ற உண்மை எத்தனை தமிழர்களுக்குத் தெரியும்? தமிழ்நாட்டில் கடந்த சில வருடங்களில், இளம் விதவை களின் எண்ணிக்கை பல மடங்கு பெருகி விட்டது.

இது குறித்த புள்ளி விவரங்கள் அதிர்ச்சி அளிக்கக் கூடும். இந்த லட்சணத்தில் பள்ளி, கல்லூரி களில் படிக்கும் மாணவ - மாணவி களையும் குடிப்பழக்கத்துக்கு அடிமையாக்கி விட்டார்கள். இந்த விஷயத்தில் அண்ணாவின் பெய ரால் இயங்கும் இரு கழகங் களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி? விடியல் தரும் அரசு என்று சொல்லப்பட்ட உறுதிமொழி பொய்யாகி, தமிழகம் நிரந்தர அஸ்தமனத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதுதான் இன்றைய நிதர்சனம்

**- எஸ்.ரமேஷ்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

## முற்றுப்புள்ளி வைத்தது சரிதான்

❁ வாக்குச்சீட்டு முறையில் நடந்த முறைகேடுகளைத் தவிர்த்து, தேர்தல்களை நேர்மையாக நடத்த கொண்டுவரப்பட்டதே மின்னணு ஓட்டுப் பதிவு முறை. 1984 முதல் 2013 வரை மின்னணு ஓட்டுப் பதிவு முறையில் முறை கேடுகள் சாத்தியம் இல்லை என்பதை, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மீண்டும் உறுதிப்படுத்தி, அபாண்டங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்த விபரங்களை மிகவும் தெளிவாக, தலையங் கத்தில் விளக்கி இருந்தீர்கள். சுமார் 16,000 டன் பேப்பர் மிச்சம், காலம் மிச்சம். மின்னணு வாக்குப் பதிவு முறை வந்த பிறகு, செல்லாத ஓட்டுக்கள் பிரச்னை இல்லை. உச்ச நீதிமன்றத்திற்குப் பாராட்டுக்கள்.

**- சீ.காந்திமதிநாதன்,**
**கோவில்பட்டி**

## ஏற்க முடியாது

❁ 8.5.24 இதழில் பிரசுரம் ஆன 'ஓட்டுப் போடாத ஜென்மங்கள்' கட்டுரை படித்தேன். கட்டுரையாளர் (துர்வாசர்) இப்படி தலைப்பிலே கேவலமாக எழுதி யிருந்தது சரியில்லை. ஏதேதோ பிரச்னைகளால் ஓட்டளிக்கச் செல்ல முடியாத சூழல் இருந் திருக்கலாம். ஜனநாயகக் கடமை ஆற்றுவது முக்கியம்தான். ஆனால் சூழல் அமைய வேண்டும். இதைக் கட்டுரையாளர் கவனத்தில் கொள்ளாமல் எழுதியிருப்பது குறையே. ஏற்க முடியாத கட்டுரை.

**- டி.சீனிவாசன்,**
**சென்னை-14**

## மெத்தனப் போக்கு

❁ 8.5.2024 துக்ளக் இதழ் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருந் தது. சந்திரனின் 'கெஜ்ரிவால் புனிதமானவரா?' ரொம்பவே பொருத்தமான கட்டுரை. இதில் ஒரே ஒரு பிழை - அவர் ஐ.எஃப்.எஸ். கிடையாது. ஐ.ஆர்.எஸ். என்கிற ரெவின்யூ சர்வீஸிலிருந்து வந்தவர். ஆகை யால்தான் அமலாக்கத்துறை அழைத்தும், ஆஜராகாமல் இருக் கக்கூடிய மெத்தனப் போக்கைக் கையாண்டவர்.

**- பர்வதம்,**
**கோவை - 641028**

## சிரிப்புத்தான் வருகிறது


❁ துக்ளக் 1.5.24 இதழில் முனைவர் சாமி.தியாகராசனின் 'கனவு மெய்ப்படுகிறது' கட்டுரை கண்டேன். திருவள்ளுவர் பிறந்தது இந்தியாவில் உள்ள தமிழ்நாடு என்றிருக்க, நாம் அதனைச் செய் யாமல், 'உலகின் எந்த நாட்டி லாவது அந்த நாட்டுக்குரிய தேசி ய நூல் இது என அறிவிக்கப் பட்டுள்ளதா? இருந்தால் விவரம் தரவும்' என மத்திய அரசிடமிருந்து அன்றைய நாளில் பதில் கடிதம் வந்ததை எண்ணும்போது சிரிப்புத் தான் வருகிறது.

**- எஸ்.பூவேந்தஅரசு,**
**சின்னதாராபுரம்-639202**

## 'சோ'வின் கூற்று

❁ முன்பு துக்ளக் இதழில் 'சோ' எழுதிய மைனாரிட்டி சமூகத்தினர் மீதான காங்கிரஸ் கட்சியின் அக்கறையைக் கோடிட் டுக் காட்டும் தலையங்கம் கூறியுள்ளது போல், தற்போது காங்கிரஸ் கட்சி அதே மனோ பாவத்தில் இருக்கிறது. இது முற்றிலும் தாஜா ஓட்டு வங்கியே என்பதை, அந்த சமூகத்தினர் உணர வேண்டும். மோடியின் வாதத்தில் தவறு காண்பதன் நோக்கமே, தங்கள் ஓட்டு வங்கி யில் பங்கம் வந்து விடுமே என்ற காங்கிரஸின் அச்ச உணர்வுதான். 'சோ'வின் கூற்று என்றுமே பொய்த்ததில்லை.

**- வீ.ராஜகோபால்,**
**சென்னை-34**




Printed and Published by K. Swaminathan on behalf of Nachiketas Publishers India Private Limited, 166, (Old No.46), Greenways Road, Chennai - 600 028 and Printed at Rasi Graphics Private Limited, No.40, Peters Road, Royapettah, Chennai - 600014. Editor : S.GURUMURTHY.



V.KRISHNAMOORTHY
Managing Trustee

# sri matha trust



## Our free “Namma Dharmasala” at Chennai since 2000...

A real sanctuary for ailing poor cancer victims from outstations...a “Home” away from their homes with homely wholesome food served with motherly affection, while under treatment in the Cancer Institute, Adyar, Chennai.

நன்கொடையாளர்கள் விரும்பினால் நமது **நம்ம தர்மசாலா**விற்கு விஜயம் செய்து எங்களது செயல்பாடுகளை நேரில் கண்டறிந்த பின்னர் நன்கொடை வழங்கி, ஏழை புற்றுநோயாளிகளுக்கு தங்களது திருக்கரங்களால் உணவு பரிமாறி, தாங்களும் உண்டு, உணவின் தரம் அறிந்து உள்ளம் மகிழலாம்.



இறைவன் அருளாலும், நன்கொடையாளர்கள் வழங்கிய நிதியுதவியாலும், நல்ல மனிதர்களின் நல்லாசியாலும் **ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா வயது முதிர்ந்த, ஆதரவற்ற, ஏழை மற்றும் புற்றுநோயாளிகளுக்கான இலவச மாற்று இல்லத்தின் துவக்க விழா 26.4.2024 அன்று இனிதே நடைபெற்றது.** துவக்க விழாவில் பங்கேற்று சிறப்பித்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூர் கிராமம், சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் நாம் நிர்மாணித்துள்ள இந்த மாற்று இல்லம் வறுமையில் வாடும், ஆதரவற்ற முதியவர்களுக்கான சேவையில், நூறாண்டுகள் கடந்து நிலைத்து நிற்கக்கூடிய தர்ம சாம்ராஜ்யமாக திகழும் என்றால் அது மிகையல்ல.



விஸ்தாரமான நிலப்பரப்பில், காற்றோட்டம் நிறைந்த சூழ்நிலையில் சுமார் 30,000 சதுர அடி பரப்பளவில் முதியோர்கள் சௌகர்யமாக தங்கும் வகையில் நாம் நிர்மாணித்துள்ள இந்த மாற்று இல்லத்தின் கட்டுமானப் பணிக்கு சுமார் 13 கோடி ரூபாய் ஆகிறது. இதன் கட்டிடப் பணிகள் பெரும்பாலும் நிறைவு பெற்று, துவக்க விழா சிறப்பாக நடைபெற்ற நிலையில், கட்டுமான நிறுவனத் திற்கு வழங்க வேண்டிய இரண்டரை கோடி ரூபாய் இன்னும் நிலுவையில் உள்ளது. மேலும், முதியோர்கள் பயன்படுத்துவற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களும் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. நன்கொடையாளர்களின் உதவியால் இம்மாபெரும் தர்ம சாம்ராஜ்யத் தைக் கட்டியமைத்த ஸ்ரீ மாதா டிரஸ்ட், மேற்படி தேவைகளுக்கும் பெருநிறுவனங்கள் மற்றும் மனிதநேய மனம் கொண்டவர்கள் உதவி செய்வார்கள் என திடமாக நம்புகிறது. காலத்தால் அழியாத தர்ம ஆலயமாக தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய இந்த ஒப்பற்ற கார்யத்திற்கு வழங்கப்படும் நன்கொடை உங்களுக்கும் உங்களது சந்ததியினருக் கும் மாபெரும் புண்ணியத்தை சேர்க்கும் என்பது எங்களது திடமான நம்பிக்கை...




விழாவில் பங்கேற்று சிறப்பித்த LIC Housing Finance Ltd. உயர் அதிகாரி




அறங்காவலர் திரு ராஜா கே.மூர்த்தி அவர்களுடன் Amphenol Omniconnect India Pvt. Ltd. உயர் அதிகாரிகள்

**சிந்தியுங்கள்... செயல்படுங்கள்...**

**தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்**

- ரூ.**1,00,000/-** நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.**75,000/-** நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.**25,000/-** நிதியளித்து "**நம்ம தர்மசாலா**"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.**10,000/-** நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.**5,000/-** நிதியளித்து மதிய (அ) இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.**3,000/-** நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution to SRI MATHA TRUST by CHEQUE / NEFT / CASH / M.O.

| | | | |
|---|---|---|---|
| Account Name | SRI MATHA TRUST | Current A/c No. | 163502000001090 |
| Bank Name | INDIAN OVERSEAS BANK | IFSC Code | IOBA0001635 |
| Branch | Gandhi Nagar, Chennai-20. | Sri Matha Trust PAN Number | **AACTS9747G** |

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப் பவர்கள் தங்களது நன்கொடையை எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்

| | |
|---|---|
| NAME : SRI MATHA TRUST | S.B. A/C No. : 40384754521 |
| BANK : STATE BANK OF INDIA | BRANCH : NEW DELHI MAIN BRANCH |
| IFSC : SBIN0000691 | SWIFT : SBININBB104 |

**தங்களது நன்கொடைக்கு வருமான வரி சட்டம் 80(G) படி வரிவிலக்கு உண்டு.**

ஸ்ரீ மாதா டிரஸ்டிற்கு நன்கொடை வழங்கும் அன்பர்கள், தங்களது விலாசம் மற்றும் "**PAN**" நம்பரை எங்களுக்கு அனுப்பவும்.

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai - 600 020.
Tel: 044-24420727, 42661687 Mobile: 9500001065 / 9003247857
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-4509 8647
vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

Thuglak - Weekly Magazine*Registered with the Registrar of Newspaper for India under No.17843/1970* Registered No.TN/CC(S)DN/123/24-26*
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)WPP/612/24-26* Published every Wednesday.



120 YEARS
TRUST AND EXCELLENCE
1904-2024

எளிதாக தொழில் நடத்த ஒரு கருவி

**CUB வழங்கும் QR Code Sound Box / Standee**

**CUB** மற்றும் **NPCI** இணைந்து இப்போது **Sound Box** உடன் **QR Code** வழங்குகின்றது. **Sound Box** ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் செலுத்தப்பட்ட தொகையை குரல் வாயிலாக உறுதி செய்யும். இதன் **மொபைல் செயலி** மூலம் கடைசியாக விற்ற விபரம் மற்றும் அன்றாட விற்பனையின் விபரத் தொகுப்பு ஆகியவற்றை பெறலாம். **CUB** அதிகாரிகள் உங்கள் தொழில் நிலையத்திற்கு வந்து பொருத்திக் கொடுப்பர். இது **WiFi** மூலம் செயல் படக்கூடியது. நான்கு நாட்களுக்கு செயல்படும் **Rechargeable Battery** கொண்டது.





மேலும் **QR Code Standee** வடிவிலும் வழங்கப்படுகின்றது. இதனை ஒன்றுக்கும் மேற்பட்ட விற்பனை கிளைகளில் உபயோகிக்கலாம்.

இனி வாடிக்கையாளர்கள் எளிதாக பரிவர்த்தனை செய்யலாம்

FASTag
WEALTH MANAGEMENT
POS
ONLINE ASBA
WHATSAPP BANKING
CONVERSATIONAL CHAT BOT
EASY PAY
CARDLESS WITHDRAWAL
ALL IN ONE APP
INSTA LOAN
SPEND ANALYSER
BBPS BILL PAYMENT
DEBIT AND CREDIT CARD
ONLINE MUTUAL FUND
WALLET
INTERNET / MOBILE BANKING
UPI SCAN AND PAY
PREPAID / TRAVEL CARD
VIDEO KYC
SET CARD LIMIT
SOVEREIGN GOLD BONDS
THREE-IN-ONE ACCOUNT
SOCIAL MEDIA BANKING
UPI QR CODE FOR MERCHANTS
GREEN PIN

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000. Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.